13TH
DECEMBER
2025

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 | இதழ்: 94 | பக்கங்கள் - 21 | editor.uthayam@gmail.com

## 640 ஆக அதிகரித்த அனர்த்த உயிரழப்புக்கள்!

நாட்டில் சீரற்ற வானிலையால் ஏற்பட்ட அனர்த்தத்தினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 640 ஆக அதிகரித்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

பேரிடரால் 211 பேர் காணமல் போயுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

மேலும் 473,138 குடும்பங்களைச் சேர்ந்த 1,637,960 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 26,103 குடும்பங்களைச் சேர்ந்த 82,813 பேர் இன்னும் 847 தங்குமிடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பேரிடர்களால் 5,713 வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# அனர்த்தங்கள் அதிகரிக்கலாம் ஐ.நா.அதிகாரி எச்சரிக்கை!

**முறையான திட்டமிடலின் அவசியம் குறித்தும் வலியுறுத்து!**



எதிர் வரக் கூடிய காலங்களில் உலகம் முழுவதும் பேரழிவுகள் அதிகரிக்கலாம் என ஐ.நா.வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் ஆண்ட்ரே பிராஞ்ச் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட பேரழிவு குறித்து கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தொடர்ந்து கருத்து 02ம் பக்கம்பார்க்க...

## அனுர தலைமையிலான அரசு இலங்கையை கட்டியெழுப்பும்

**அமெரிக்கா ஆதரவு வழங்கும் உப இராஜாங்க செயலாளர் அலிசன் ஹூகர்!**



ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் தலைமையில் இலங்கை மீண்டும் கட்டியெழுப்பப்படும் என்றும், அதற்குத் 05ம் பக்கம்பார்க்க...

## பல்கலை சட்டத்தில் திருத்தம் திரைமறைவில் முயற்சி

**அரசை சாடும் சஜித்**

அரசாங்கம் 1978 ஆம் ஆண்டின் பல்கலைக்கழகச் சட்டம் இல. 16 இற்கு ஒரு திருத்தத்தை ஜனநாயகமற்ற முறையிலும், வெளிப்படைத்தன்மையின்றியும் கொண்டுவர முயற்சிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், இத்தகைய ஒரு முக்கியமான மாற்றத்தை பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்கள், 02ம் பக்கம்பார்க்க...

## கொழும்பு பெரிய பள்ளியால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம்!




(ஏ.எஸ்.எம். ஜாவிட்)

தித்வா" அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அனர்த்த நிவாரண உதவிகளை வழங்குவதற்காக 03ம் பக்கம்பார்க்க...

## கைதிகளை கொன்றது இஸ்ரேல்; பாதுகாத்தது ஹமாஸ்

**இஸ்ரேல் இராணுவத் தளபதியின் பரபரப்பு தகவல்**

காசாவில் உயிருடன் இருந்த பல பிணைய கைதிகளை குண்டு போட்டு கொன்றதே இஸ்ரேல் தான் என அந்நாட்டு ராணுவத் தளபதி நேரடியாக ஒப்புக் கொண்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

முன்னாள் இஸ்ரேல் ராணுவ 03ம் பக்கம்பார்க்க...

## சிவப்பு எச்சரிக்கை விடுப்பதில் விஷேட அவதானம் தேவை



**கம்பளையில் ரவூப் ஹக்கீம்**


அப்பாவி பொதுமக்கள் பதற்றம் அடைய நேரிடுவதால் நன்றாக ஆராய்ந்த பின்னரே 03ம் பக்கம்பார்க்க...

## பிணையில் விடுவிக்கப்பட்ட முன்னாள் சபாநாயகர்



சப்புகஸ்கந்த பகுதியில் நேற்று இரவு இடம்பெற்ற வாகன விபத்து சம்பவம் 05ம் பக்கம்பார்க்க...

## ஈரானிய பெண்கள் உருவாக்கிய புதிய ரேடார் கருவி



பெண்கள் மது அருந்துவது, ஆபாசமாக உடை அணிவது, ஆபாச படங்களில் நடிப்பது தான் பெண் சுதந்திரம் என மேற்கு நாடுகள் கருதும் நிலையில், கண்ணியமான உடை அணியும் ஈரான் பெண்கள், உலகத்தையே திரும்பிப் பார்க்க வைக்கும் வகையில் புதிய ரேடார் கருவியை உருவாக்கியுள்ளனர்.

"சய்யாத்-4" என்ற புதிய 04ம் பக்கம்பார்க்க...

## சுற்றுலா செல்வதைத் தவிர்க்குமாறு மக்களுக்கு வேண்டுகோள்



நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக நாடுமுழுவதும் ஆபத்தான சூழ்நிலையில் இருப்பதால், பொதுமக்கள் பயணங்கள் மற்றும் சுற்றுலாக்களைத் 05ம் பக்கம்பார்க்க...

## ஒத்தி வைக்கப்பட்ட இலங்கை தினம்

டிசம்பர் 12 முதல் 14 வரை நடைபெறவிருந்த 'இலங்கை தினம்' என்ற தேசிய திட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக 15ம் பக்கம்பார்க்க...



## அனர்த்தங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்த அவர்,

இரு தசாப்தங்களின் பின்னர் இலங்கை முகம் கொடுத்த மிக மோசமான இயற்கை பேரழிவுக்குப் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ஐ.நா. வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க்-ஆண்ட்ரே / பிராஞ்ச் இதனை தெரிவித்துள்ளார்.

உலகம் முழுவதும் காலநிலை மாற்றங்கள் அடிக்கடி தீவிரமாகி வரும் நிலையில், தேசிய மற்றும் சர்வதேச தயார்நிலை வேகத்தை தக்க வைத்துக் கொள்ளவில்லை.

இன்றைய நிலையில் சூறாவளிகள், திடீர் வெள்ளம் போன்றவற்றை நாம் அதிகமாகக் காண்கிறோம். எதிர்வரும் வருடங்களில் உலகம் இந்த பேரழிவுகளை அதிகமாக அனுபவிக்கும் என்பது தெளிவாகிறது. ஆனால் நாம் அதற்கு தயாராக இல்லை.

இனிவரும் நாட்களில் உலகம் காணப் போகும் பேரழிவு! ஐ.நாவின் கடும் எச்சரிக்கை; World Is Not Prepared To Face Climate Disasters

வியட்நாம், இந்தோனேசியா மற்றும் தாய்லாந்து உள்ளிட்ட பிராந்திய நாடுகள் ஒரே நேரத்தில் காலநிலை மாற்றங்களை எதிர்கொள்வதாலும், சூடான், காசா மற்றும் ஏமனில் பெரும் மனிதாபிமான நெருக்கடிகள் தொடர்வதாலும், சர்வதேச நிதியுதவிக்காக இலங்கை கடுமையான போட்டியை எதிர்கொள்கிறது.

ஒரே நேரத்தில் பல அவசர நிலைகளை சந்தித்த காலம் தனக்கு நினைவில் இல்லை என்றும் அவர் வலியுறுத்தினார். காலநிலைக்கு ஏற்ற மறுகட்டமைப்பு மற்றும் அதிக ஆபத்துள்ள பகுதிகளில் மீள்குடியேற்றத்தைத் தடுப்பதற்கான தேவையை ஐ.நா. வதிவிட ஒருங்கிணைப்பாளர் உறுதிப்படுத்தினார்.

பேரிடருக்குப் பிந்தைய நிவாரணம் மற்றும் மறுகட்டமைப்பை விட முன்கூட்டியே முதலீடு செய்வது மிகவும் செலவு குறைந்ததாக இருக்கும் என்றார்.

## கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு பெரிய பள்ளிவாசலினால் 1.5 மில்லியன் ரூபா நிதியும் சுமார் ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் கொழும்பு பெரிய பள்ளிவாசல் நிர்வாகத்தினரால்"நவவயா ஆயளதனை குநனநசயவழைெ இடம் கொழும்பு பெரிய பள்ளிவாசலில் வைத்து இன்று (12) கையளிக்கப்பட்டது.

கொழும்பு பெரிய பள்ளிவாசல் தலைவர் தாஹிர் ரஸீன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் சமய கலாசார விவகாரங்களுக்கான பிரதியமைச்சர் முனீர் முலப்பர் பிரதம அதிதியாகவும், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் எம்.எஸ். அலா அஹமட் சிறப்பு அதிதியாகவும் கலந்து கொண்டதுடன், உலமாக்கள் உட்பட நிர்வாக உறுப்பினர்கள் என பலரும் பங்கேற்றிருந்தனர்.

குறித்த நிவாரணப் பொருட்கள் வெல்லம்பிட்டி, கொலண்ணவை மற்றும் அதனை அண்டிய பிரதேச மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக "நவவயா ஆயளதனை குநனநசயவழைெ தலைவர் அஷ்ஷெய்க் மௌலவி லமீர் ஹாபிழிடம் வழங்கி வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில், தலைமையுரையை கொழும்பு பெரிய பள்ளிவாசல் தலைவர் தாஹிர் ரஸீன் நிகழ்த்தியதுடன் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள பிரதி பணிப்பாளர் அலா அஹமட், சமய மற்றும் கலாசார விவகாரங்களுக்கான பிரதியமைச்சர் முனீர் முழப்பர் ஆகியோர் உரையாற்றினர்

## பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிர்வாகத்தினர் மற்றும் தொழிற்சங்கங்கள் உட்பட சம்பந்தப்பட்ட அனைத்துப் பங்குதாரர்களுடன் முறையான ஆலோசனையின்றி மேற்கொள்ளக் கூடாது.

அதற்கு மாறாக, உத்தேச சீர்திருத்தங்கள் குறித்து எந்தவொரு உத்தியோகபூர்வ உரையாடலும் அல்லது பொதுத் தெளிவும் இல்லாமல் அரசாங்கம் முன்னோக்கி நகர்வதாக அவர் குற்றம் சாட்டினார்.

பல்கலைக்கழகச் சட்டத்தை திருத்தும் அரசாங்கத்தின் நடவடிக்கை குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே பிரேமதாச இந்த கருத்துக்களை வெளியிட்டார்.

அவர் கூறுகையில், உத்தேச திருத்தத்தில், பீடாதிபதிகள் மற்றும் துறைத் தலைவர்கள் பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்களால் தேர்ந்தெடுக்கப்படும் தற்போதைய முறையை அகற்றி, அந்த அதிகாரத்தை துணை வேந்தர் அல்லது ஆளும் சபை (governing council) க்குக் கையளிப்பது போன்ற முக்கிய மாற்றங்கள் அடங்கும்.

உயர் கல்வித் துறை ஏற்கனவே பதட்டங்களை எதிர்கொள்ளும் நிலையில், துறைத் தலைவர்களை நியமிக்கும் தன்னிச்சையான அதிகாரத்தை துணை வேந்தருக்கு வழங்குவது, அல்லது பல்கலைக்கழக சபை மட்டத்தில் அதிகாரத்தை மையப்படுத்துவது தீவிர பிரச்சினைகளை உருவாக்கக்கூடும் என்று அவர் எச்சரித்தார்.


மேலும், புதிய திருத்தத்திற்கு பாராளுமன்றம் அங்கீகாரம் வழங்குவதற்கு முன்பே, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (ருபுஊ) தலைவர் பீடாதிபதிகள் மற்றும் துறைத் தலைவர்கள் நியமனங்களை நிறுத்துமாறு துணை வேந்தர்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளதாகவும் பிரேமதாச உரிமை கோரினார்.

இந்தக் கட்டளைக்கு சட்டபூர்வமான அடிப்படை இல்லை என்றும், இது ஸ்தாபிக்கப்பட்ட நடைமுறைகள் மற்றும் தற்போதுள்ள சட்டத்திற்கு முரணானது என்றும் அவர் கூறினார். துணை வேந்தர்கள் இன்னமும் தற்போது நடைமுறையில் உள்ள சட்டத்திற்கு கட்டுப்பட்டவர்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இத்தகைய நடவடிக்கைகள் ஜனநாயக நடைமுறையின் அரிப்பையும், நாட்டை எதேச்சதிகாரமான முடிவெடுக்கும் திசையை நோக்கி செலுத்தும் முயற்சியையும் காட்டுவதாக எதிர்க்கட்சித் தலைவர் வாதிட்டார். பல்கலைக்கழகச் சட்டத்தில் மாற்றங்களைச் செய்வதற்கு முன்னர், இந்த திருத்தச் செயல்முறையை தற்காலிகமாக இடைநிறுத்தி, பரந்த அளவிலான ஆலோசனைகளை மேற்கொள்ளுமாறு அவர் அரசாங்கத்தை வலியுறுத்தினார்.

அதிகாரத்தை மையப்படுத்தும் அல்லது பங்குதாரர்களின் பங்களிப்பை பலவீனப்படுத்தும் மாற்றங்களை அல்லாமல், ஆதாரபூர்வமான, நியாயப்படுத்தக்கூடிய சீர்திருத்தங்களை மட்டுமே தொடர வேண்டும் என்றும் அவர் மேலும் கூறினார்.



## இஸ்ரேல்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

தளபதி நிட்சன் அலோன், வடக்கு காசாவில் உள்ள பெரும்பாலான இஸ்ரேல் பிணைக் கைதிகள் இஸ்ரேல் படையினரின் தாக்குதலால் உயிரிழந்ததாக தெரிவித்துள்ளார். யெதியோத் அக்ரோனோத் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில், "ஜபாலியாவில் உளவுத் தகவல்களில் ஏற்பட்ட பிழைகள் காரணமாக, கைதிகளில் பெரும்பாலோர் இஸ்ரேல் துப்பாக்கிச் சூடு மற்றும் விமானத் தாக்குதல்களில் கொல்லப்பட்டனர்" என அவர் கூறினார்.

காசாவுக்கு உயிருடன் கொண்டு செல்லப்பட்ட பலர், அவர்கள் வைக்கப்பட்டிருந்த கட்டிடங்கள் மீது நடத்திய இஸ்ரேல் தாக்குதல்களில் உயிரிழந்ததாகவும் அவர் தெரிவித்தார். மேலும், 2023 டிசம்பரில் நடத்திய ஒரு இஸ்ரேல் தாக்குதலில் மூன்று கைதிகள் தவறுதலாக கொல்லப்பட்டதாகவும் அவர் கூறினார்.

## சிவப்பு...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

சிவப்பு எச்சரிக்கைகள் விடுக்க வேண்டும். அத்துடன் வெள்ள அபாயத்தை தவிர்ப்பதற்கு நீர்த்தேக்கங்களின் நீர்மட்டத்தை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு உரிய பொறிமுறைகள் கையாளப்பட வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கம்பளை, கெலிஓய பிரதேசங்களில் குப்பை கூலங்களை அகற்றி சுத்திகரிக்கும் பணியில் இரண்டாவது நாளாகவும் தொடர்வதற்கு முன்னதாக புதன் கிழமை (10) முற்பகல் கம்பளை நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற ஊடவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு ஹக்கீம் எம்.பி மேலும் கூறுகையில்,

இந்த வெள்ளத்தினால் பாதிப்படைந்திருக்கின்ற கம்பளை தொகுதியில் கம்பளை நகரசபை பிரதேசத்தில் இருக்கின்ற துப்பரவு பணிகளில் குறிப்பாக குப்பைகளை அள்ளுகின்ற பாரியதொரு தேவை இருப்பதை எனக்கு கம்பளை நகர சபையின் தலைவர் இறுக்க வீரரட்ண விடுத்த வேண்டுகோளையடுத்து, கம்பளை நகர சபை உறுப்பினர்கள் அனைவரும் தெரிவித்ததன் பிரகாரம் இது சம்பந்தமாக நான் அக்கரைபற்று மாநகர சபையின் தற்போதைய முதல்வர் முன்னாள் அமைச்சர் அதாவுல்லாஹ் அதே போன்று மட்டக்களப்பு மாவட்டத்தை பிரதிநிதித்துவப் படுத்துகின்ற பாராளுமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், ஏறாவூர் நகரசபையின் தலைவர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். நளீம் ஆகியோரிடம் நான் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க உள்ளூராட்சி சபைகளின் கனரக இயந்திரங்களையும் தீயணைப்பு வாகனத்தையும், ஏனைய சுத்திகரிக்கும் இயந்திரங்களையும் எடுத்து கொண்டு அனுபவம் வாய்ந்த ஊழியர்களையும் அழைத்துக் கொண்டு கம்பளை, கெலிஓய பிரதேசங்களில குப்பைகளை அகற்றி சுத்திகரிக்கும் பணிகளில் தொடர்தேர்ச்சியாக ஈடுபடுத்துவதற்கு தயாராக வந்திருக்கின்றார்கள்.

இயன்றவரை எங்களால் முடிந்த இந்த பாரிய சுத்திகரிப்பு பணியில் ஈடுபட்டு இந்த அனர்த்தத்தினால் மிக மோசமாக பாதிக்கப்பட்டிருக்கின்ற கம்பளை பிரதேச அனைத்து இன மக்களின் நலனுக்காகவும் எடுக்கப்படுகின்ற இந்த நடவடிக்கைக்கு எங்களுக்கு இந்த ஒத்துழைப்பை தந்த கிழக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளின் பொறுப்பாளர்கள் அனைவருக்கும் அதே நேரம் மாநகரசபை ஆணையாளர், ஏனைய உள்ளூராட்சி சபை அதிகாரிகள் அனைவரும் இதற்கு ஒத்துழைப்பு வழங்கியிருக்கின்றார்கள். ஆளுநர் உட்பட அனைவருக்கும் எனது நன்றியறிதலை தெரிவித்து கொள்கின்றேன்.

நிலவுகின்ற காலநிலையை பொறுத்தவரை அதிக மழை வீழ்ச்சியினால் மகாவலி ஆறு பெறுக்கெடுத்து ஓடியதன் விளைவாக கம்பளை, கெலிஓய போன்ற பிரதேசங்களில் பாரிய சேதங்கள் ஏற்பட்டுள்ளன என்றார்.

அத்துடன் ,ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி பின்வருமாறு பதிலளித்தார்:

சிவப்பு எச்சரிக்கை விடுக்கின்ற பொழுது அதில் உள்ள உண்மைத்தன்மை ஆய்வுகளின் மூலம் கண்டறிப்பட வேண்டும்.

இவ்வாறான சிவப்பு எச்சரிக்கைகளை பொருட் படுத்தாமல் இருக்க முடியாது. ஆனாலும், சிவப்பு எச்சரிக்கையின் உண்மைத் தன்மை சரியான முறையில் கண்டறியப் படாத பட்சத்தில் அப்பாவி மக்கள் அச்சத்தின் காரணமாக பதற்றம் அடையும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுள்ளன. சிலர் மனஉளைச்சலுக்கு அப்பால் உயிராபத்து மிக்க இருதய நோய்க்கு ஆளாகிய நிலையும் இருந்திருக்கிறது. இறப்பு சம்பவித்ததாகவும் கூறப்படுகின்றது.

சீரற்ற காலநிலை பற்றி அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டிந்த போதிலும், மகவலி நீர்த்தேக்கங்களின் நீர்மட்டத்தை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் பொறியியல் பொறிமுறை உரிய முறையில் செயல்படுத்தபட வில்லை என்ற குற்றச்சாட்டும் எழுந்திருக்கின்றது.

எதிர்காலத்தில் இவ்வறான அனர்த்தங்கள் நிகழாமல் தவிர்ப்பதற்கு விரிவான முறையில் ஆராய்ந்து கண்டறியப்பட வேண்டும்.

கம்பளை, கெலிஓய பகுதிகளில் ஏற்பட்ட அனர்த்தங்களுக்கான காரணம் மண் சரிவுகளுக்கு அப்பால், கொத்மலை நீர்த்தேக்கத்துக்கு பொறுப்பான பொறியிலாளர் தனது பொறுப்பை சரியான முறையில் நிறைவேற்றினாரா என்பதை கண்டறியப்பட வேண்டிய தேவை இருக்கின்றது, ஜனாதிபதியும் கூட இது தொடர்பில் கவனஞ் செலுத்தி இருக்கின்றார். பின்னர், உண்மைகள் வெளிவரும்.

இவ்வாறான அனர்த்தம் நிகழ்வுகள் ஏற்படாமல் தடுப்பதற்கு அதற்கு பொறுப்பானவர்கள் கவனமாக நடந்து கொள்ள வேண்டும் என்றார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பியுடன், அக்கரைபற்று மாநகர சபை மேயர் ஏ.எல். அதாவுல்லாஹ், மட்டக்களப்பு எம்.பி. எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், மாநரகசபை உறுப்பினர் தவம், முன்னாள் மாநகரசபை தலைவர் ஸகி அதாவுல்லாஹ், கண்டி மாவட்ட எம்.பி. சுஜீவ சேரசிங்க, முன்னாள் கண்டி மாவட்ட எம்.பி. அப்துல் ஹலீம், கம்பளை நகர சபை தலைவர் இறுக்க வீரசிங்க, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முக்கியஸ்தர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.






www.uthayam.lk
# உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2025 DECEMBER 13 - SATURDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

## அனர்த்தங்களைத் தடுப்பதற்கு இந்தியா பின்பற்றும் முறைகளை நம் நாட்டிலும் அறிமுகப்படுத்த வேண்டும்

அண்மை காலத்தில் நாட்டில் ஏற்பட்ட மிக மோசமான வெள்ளப்பெருக்கு மண்சரிவு என்பவற்றை நாம் கடந்த சில தினங்களாக எதிர்கொண்டு வருகின்றோம். நாட்டில் 15 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் நேரடியாகவும் மேலும் பல லட்சம் பேர் மறைமுகமாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். 6,7 நாட்களாக நாட்டை உலுக்கிய இந்த காலநிலை சீற்றம் காரணமாக எமது நாடு பல வருடங்களுக்கு பின்னேற்றப் பாதைக்கு தள்ளப்பட்டுள்ளது.

நவம்பர் 25ஆம் திகதி முதல் இதனை எழுதும் வரை இந்த அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை இவ்வளவு என்று உறுதியாக கூற முடியாது. சூறாவளி அனர்த்தம் காரணமாக உரிய நிறுவனங்கள் இதனை அறிவித்திருந்தும் இது குறித்து தற்பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கத் தவறியதனால் நாட்டுக்கு பெரும் சேதம் மற்றும் மனித அழிவு ஏற்பட்டதாக விமர்சனங்கள் அனுப்பப்பட்டு வருகின்றன. ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாஷிம் பாராளுமன்றத்தில் இது பற்றிப் பேசி இருந்தார்.

காலநிலை அவதான நிலையம் விடுத்த எச்சரிக்கை கவனத்தில் எடுக்கப்படாததனால் கம்பளை பிரதேசத்தில் ஆயிரம் பேராவது கொல்லப்பட்டிருப்பார்கள் என கபீர் ஹாஷிம் தெரிவித்திருந்தார். இந்த புள்ளி விபரம் பற்றி விமர்சனங்கள் எழுப்பப்பட்டுள்ளன. உண்மையிலே ஆயிரம் பேர்களுக்கு அழிவு ஏற்படவில்லை என்றே கூறப்படுகின்றது. இவ்வாறான இயற்கை அனர்த்தம் எமது நாட்டில் அடிக்கடி ஏற்பட்டு வருகின்றது.

இவ்வாறான அனர்த்தங்களை எதிர்கொள்வதற்கு எமது நாடு இன்றும் தயார் நிலையில் இல்லாதிருப்பது கவலைக்குரியது. அயல் நாடான இந்தியா இவ்வாறான அனர்த்தங்களை எதிர்கொள்வதற்கு பல முன்னேற்றகரமான முன்னேற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. இந்தியாவின் உதவியை பற்றி அந்நாட்டுடன் இணைந்து இயற்கை அனர்த்தங்களை தடுக்கக்கூடிய பொறிமுறைகளை நாட்டுக்குள் அறிமுகப்படுத்துவதே கட்டாயத் தேவையாக உள்ளது. எமது நாட்டை தாக்கிய புயல் தமிழ்நாடு ஊடாகவே அந்தமான் தீவுக்கு சென்ற போதும் பெரும் அனர்த்தம் ஏதுமின்றி அமைதியாக கடலில் சங்கமித்திருக்கின்றது. அதற்குக் காரணம் இந்தியா மேற்கொண்ட முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் ஆகும்.

நாடு இன்று எதிர்நோக்கி இருக்கின்ற பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இவ்வாறான அனர்த்தங்களுக்கு நாடு அடிக்கடி முகங்கொடுப்பதற்கான இயலுமை இல்லாதிருக்கின்றது.

எனவே குறுகிய அரசியல் வேறுபாடுகளை மறந்து நாட்டுக்குப் பொருத்தமான அனர்த்தப் பாதுகாப்பு பொறிமுறை ஒன்றை உருவாக்குவதற்கு சகல தரப்பினரும் ஒன்றிணைந்து செயல்படுவது அத்தியவசியமாகும்.

அரசாங்கம் இதுகுறித்து முன்னுரிமை அளித்து செயல்படுவது இன்றைய தேவையாகும். அரசு எதிர்க்கட்சியினதும் ஒத்துழைப்பைப் பெற்று தேவையான நிதிகளை பாராளுமன்றத்தில் ஒதுக்கி இந்த முன்னேற்பாடுகளை மேற்கொள்வதற்கான வசதிகளை செய்வது இன்று அத்தியாவசியமாக இருக்கின்றது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

# கொட்றாமுல்லே பிரதேச மக்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் கையளிப்பு!





வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட புத்தளம் மாவட்டத்தின் கொட்றாமுல்லே பிரதேச மக்களுக்கான வீட்டு பாவனைக்கு அத்தியாவசிய தேவையாக இருந்த படுக்கை மெத்தை (10) அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான றிஷாட் பதியுதீன் அவர்களின் வழங்கி வைக்கப்பட்டது.

இதன் போது, அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் கற்பிட்டி பிரதேச சபை உறுப்பினர் பைஷர் மரைக்கார், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் தஸ்லீம், வஸ ீம் தாஹீர், மௌலவி றிப்கான், மௌலவி பஸால் இஸ்மாயில், சஹீ உள்ளிட்டோருடன் அனர்த்த முகாமைத்துவக்குழு உறுப்பினர்கள் மற்றும் ஊர் பிரமுகர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

### ஈரானிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மின்னணு போர் இயல் மற்றும் வான்வெளி பாதுகாப்பு ரேடார் அமைப்பை ஒரு கண்காட்சியில் ஈரான் அறிமுகம் செய்துள்ளது. இது முழுமையாக பாதுகாப்பு அமைச்சகத்தில் பணியாற்றும் ஈரானிய பெண் நிபுணர்களால் உருவாக்கப்பட்டதாக தேசிய தொலைக்காட்சி (IRIB) அறிவித்துள்ளது.

பாதுகாப்பு காரணங்களால், கண்காட்சியில் உண்மையான அமைப்பிற்கு பதிலாக ஒரு மாதிரி மட்டுமே காட்டப்பட்டது.

IRIB தகவலின்படி, சய்யாத்-4 மின்னணு போர் இயல் திறன்களைக் கொண்டது எதிரிகளின் நிலைஅளவை அல்லது வழிகாட்டி அமைப்புகளை முடக்கக்கூடியது.

டிசம்பர் 11 அன்று முகம்மது நபியின் மகள் ஹஸ்ரத் ஃபாத்திமா ஸஹ்ரா பிறந்தநாளை முன்னிட்டு கொண்டாடப்படும் ஈரான் தேசிய தாய்மார் தினத்தை ஒட்டி, பாதுகாப்புத் துறை அமைச்சர் பிரிகேடியர் ஜெனரல் அசீஸ் நசீர்சாதே, பெண்கள் வடிவமைத்த பாதுகாப்பு சாதனங்களின் கண்காட்சியைப் பார்வையிட்டார்.



## அனுர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேவையான எந்த உதவியையும் வழங்க அமெரிக்கா தயாராக உள்ளது என்றும் அமெரிக்க அரசியல் விவகாரங்கள் தொடர்பான உப இராஜாங்க செயலாளர் யுடடளைழூ வுழழமநச தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிற்கும் அமெரிக்க அரசியல் விவகாரங்கள் தொடர்பான உப இராஜாங்க செயலாளர் யுடடளைழூ வுழழமநசஇற்கும் இடையிலான சந்திப்பு இன்று (11) காலை ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது. இதன்போது உப இராஜாங்கச் செயலாளர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கை எதிர்கொள்ளும் அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்க உதவி வழங்க முடிந்ததில் மகிழ்ச்சி அடைவதாகத் தெரிவித்த அலிசன் ஹூக்கர், அனர்த்தத்தினால் இறந்த அனைவரின் குடும்பங்களுக்கும் தனது இரங்கலைத் தெரிவித்தார்.

இந்த நெருக்கடியான நேரத்தில் பல்வேறு நிவாரண மற்றும் நிவாரணக் குழுக்களை நாட்டிற்கு அனுப்புவதில் அமெரிக்க ஜனாதிபதியும் அரசாங்கமும் அளித்த ஆதரவிற்கு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நன்றி தெரிவித்தார்.

அமெரிக்கா உட்பட உலகெங்கிலும் உள்ள அனைத்து நட்பு நாடுகளும் இலங்கைக்கு அளித்த மனப்பூர்வமான ஆதரவை ஜனாதிபதி பாராட்டினார்.

நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தி பொருளாதார குறிகாட்டிகளை உயர்த்தி வரும் நிலையிலே இலங்கைக்கு இந்த அனர்த்தத்திற்கு முகங்கொடுக்க நேரிட்டதாகச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் நீண்டகால அடிப்படையில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் எதிர்காலத்தில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

வெள்ளம் மற்றும் மண்சரிவுகளால் சேதமடைந்த நெடுஞ்சாலைகள், புகையிரதப் பாதைகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளையும், விவசாயம், கால்நடைகள், சிறிய மற்றும் மத்திய தர கைத்தொழில்கள் உள்ளிட்ட முக்கிய வருமான வழிகளையும் மீட்டெடுக்க சிறிது காலம் எடுக்கும் என்றும், இது தொடர்பாக அனைத்து நட்பு நாடுகளின் உதவிகளையும் எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

தீர்வை வரிகள் தொடர்பான பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்குவது குறித்து அமெரிக்கா கவனம் செலுத்துவதாகவும், அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கும், இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் மற்றும் கடல்சார் நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கு ஆதரவளிப்பதாகவும் துணை வெளியுறவுச் செயலாளர் இதன்போது குறிப்பிட்டார். போதைப்பொருள் அச்சுறுத்தலை ஒழிப்பதற்கான இலங்கை அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் அதிக எண்ணிக்கையிலான அமெரிக்க சுற்றுலாப் பயணிகள் இந்நாட்டிற்கு வருகை தந்துள்ளதாகவும், தொடர்ந்தும் இதுபோன்ற வருகைகளை எதிர்பார்ப்பதாகவும் இதன்போது தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, தற்போதைய அனர்த்த நிலைமையிலிருந்து மீண்டு இலங்கை மக்கள் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை அடைய அமெரிக்க அரசாங்கம் வழங்கும் பங்களிப்பைப் பாராட்டினார்.

தொழில் அமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஹர்ஷன சூரியப்பெரும ஆகியோருடன் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் உள்ளிட்ட குழுவினர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# காற்றுச் சுழற்சிகள் மீண்டும் உருவாகும் வாய்ப்பு

## வானிலையாளர் நாகமுத்து பிரதீபராஜா

“இலங்கையின் தென்கிழக்குப் பகுதியில் நிலவிய காற்றுச் சுழற்சி வலுவிழந்தது. ஆனால்இ இலங்கையின் தென்மேற்கு பகுதியைக் கொண்டு நிலவிய வளிமண்டல தளம்பல் நிலை தொடர்ந்தும் காணப்படுகின்றது.

இதனால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட நாட்டின் பல பகுதிகளிலும் கிடைத்து வரும் மழை நாளை வரை நீடிக்கும் வாய்ப்புள்ளது என யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் புவியியல் துறை தலைவரும் காலநிலை ஆய்வாளருமான பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா எதிர்வு கூறியுள்ளார்.

நிலச்சரிவு அனர்த்தம்

இதனால் நாளை வரை கண்டிஇ நுவரெலியாஇ மாத்தளைஇ கேகாலை மற்றும் பதுளை மாவட்டங்களின் சில பகுதிகளுக்கு நிலச்சரிவு அனர்த்தம் நிகழ்வதற்கும் வாய்ப்புள்ளது. ஆகவேஇ இந்த நிலச்சரிவு நிகழ்வுகள் தொடர்பாக மக்கள் தொடர்ந்தும் அவதானமாக இருப்பது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடலில் காற்று சுழற்சிகள் உருவாகும் வாய்ப்பு!

அவதானமாக செயற்படுமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் ;“ழளளடைிடைவைல ழுக யுசை ஊளைஉரடயவழைள குழசஅயவைெ வுாந ழுஉநயெ

“அதேவேளை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட நாட்டின் பல பகுதிகளினதும் வளிமண்டலத்தில் ஈரப்பதன் அளவில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட நாட்டின் பல இடங்களிலும் குளிரான காலநிலை நிலவுகிறது. உணரக்கூடிய வெப்பநிலையும் குறைவாகவே உள்ளது. இது மேலும் சில நாட்களுக்குத் தொடரும் வாய்ப்புள்ளது.

எனவேஇ குளிரான காலநிலை தொடர்பான உணர்திறன் அதிகமுள்ளவர்கள் குறிப்பாகஇ வயதானவர்கள்இ நோயாளிகள் குழந்தைகள் அவதானமாக இருப்பது சிறந்தது. வெப்பநிலை அளவுகளில் நிலவும் சுவாரசியமான நிலைமை காணப்படுகின்றது.

அதிகூடிய வெப்பநிலை

கடந்த சில நாட்களாக இரத்தினபுரி மாவட்டம் அதிகூடிய வெப்பநிலையை (சராசரியாக 31.5 பாகை செல்சியஸ்) பெறும் அதேவேளை நுவரெலியா அதிகுறைந்த வெப்பநிலையைப் (சராசரியாக 16 பாகை செல்சியஸ்) பெறுகின்றது.

இரண்டு பிரதேசமும் மிகப்பெரிய அளவு தூ ர இடைவெளியில் இல்லை. ஆனால் உயர வேறுபாடே மிகப்பெரிய வெப்பநிலை வேறுபாட்டை ஏற்படுத்தியுள்ளது.

அரபிக் கடலிலும் வங்காள விரிகுடாவில் கடல் மேற்பரப்பு வெப்பநிலை உயர்வாகவே காணப்படுகின்றது. இது சராசரியாக 28 பாகை செல்சியஸ் என்ற அளவில் காணப்படுகின்றது.

கடலில் காற்று சுழற்சிகள் உருவாகும் வாய்ப்பு!

அவதானமாக செயற்படுமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் ;“ழளளடைிடைவைல ழுக யுசை ஊளைஉரடயவழைள குழசஅயவைெ வுாந ழுஉநயெ

காற்றுச்சுழற்சிகள் உருவாகும் வாய்ப்பு

பொதுவாக கடல் மேற்பரப்பு வெப்பநிலை 27 பாகை செல்சியஸை விட உயர்வாக இருந்தாலே கடலில் காற்றுச் சுழற்சிகள் உருவாகும் வாய்ப்புள்ளது. எதிர்வரும் 17 ஆம் திகதி வங்காள விரிகுடாவில் புதிய ஒரு காற்றுச் சுழற்சி உருவாகும் வாய்ப்புள்ளது.

எனினும் இதனை அடுத்த சில நாட்களுக்கு பின்பே உறுதிப்படுத்த முடியும். எவ்வாறாயினும் எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட நாட்டின் பல பகுதிகளுக்கும் மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.“ - என்றும் பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா மேலும் தெரிவித்துள்ளார்.

## சுற்றுலா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தவிர்க்குமாறு, தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பின் (டீேசுழு) மூத்த புவியியலாளர் டொக்டர் வசந்த சேனாதீர அறிவுறுத்தியுள்ளார்.

நான்கு மாவட்டங்களில் உள்ள 33 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு வழங்கப்பட்ட நிலச்சரிவு சிவப்பு அறிவிப்புகள் மேலும் நீட்டிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

அபாயங்கள் இருந்தபோதிலும், வார இறுதி சுற்றுலாக்களுக்குச் செல்வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து பொதுமக்களிடமிருந்து அழைப்புகள் வருவதாக சுட்டிக்காட்டிய அவர், தற்போதைய பேரிடர் சூழ்நிலையில், மக்கள் செய்யக்கூடிய சிறந்த விஷயம், தேவையற்ற பயணங்களைத் தவிர்த்து பாதுகாப்பான இடங்களில் தங்குவதுதான் என்றும் வலியுறுத்தினார்.

## பிணையில்...


(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் கைது செய்யப்பட்ட முன்னாள் சபாநாயகரும், தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினருமான அசோக ரன்வல பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அவர் செலுத்திய ஜீப் வண்டி நேற்று இரவு மற்றுமொரு காருடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளான நிலையில், சப்புகஸ்கந்த பொலிஸாரால் அவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.



# அனுராதபுரத்தில் பாதிப்புற்ற நெற்செய்கையை சீர்செய்யுமாறு ஜனாதிபதி அறிவுறுத்தல்

(எம்.ரீ.ஆரிப்)





வெள்ளத்தால் அனுராதபுரம் மாவட்டத்தில் சேதமடைந்த நெற். செய்கையை மீண்டும் பெரும் போகத்தில் செய்வதற்கு அவசரமாக தயார் செய்யுமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

தேசியத் தேவையாக கருதி அனைத்து தொடர்புடைய நிறுவனங்களும் இதை உறுதி செய்து நன்கு ஒருங்கிணைக்க வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி வலியுறுத்தினார். விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கவும் தற்காலிக பழுது பார்ப்பதுகள் மூலம் தேவையான நீர்ப்பாசன நீரை வழங்கவும் சம்பந்தப் பட்ட துறையினருக்கு அவர் அறிவுறுத்தினார்.

நாட்டின் வரலாற்றில் பயிர்ச் செய்கைக்கு அதிக இழப்பீடு வழங்குவதன் மூலம் நெற் செய்கை நடவடிக்கைகளை விரைவில் மீண்டும் தொடங்க அரசாங்கம் எதிர் பார்ப்பதாகவும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட அனுராதபுரம் மாவட்ட மக்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்ப வும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் செயல்படுத்தப்பட திட்டங்கள் குறித்து மறுஆய்வு செய்வதற்காக (07) அனுராதபுரம் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற விசேட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் கலந்து கொண்ட போதே இவ்வாறு தெரிவித்தார்.

அனர்த்தத்தால் மொத்தமாக இழப்புகளை சந்தித்த விவசாயிகளின் எண்ணிக்கை விவசாய நிலங்களின் அளவு மற்றும் தேவையான நிதி அளவு குறித்து எதிர் வரும் வெள்ளிக்கிழமை க்கு முன்னர் அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார். உரிய இழப்பீடு நியாயமான முறையில் பெறப்பட வேண்டும் என்றும் யாரும் அதனை நியாயமற்ற முறையில் பெறக்கூடாது என்றும் சுட்டிக் காட்டினார்.

அரசாங்கம் விவசாயிகளுக்கு இழப்பீடு நிரந்தர அடிப்படையில் உறுதி செய்யவும் விவசாயிகளுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தவும் அவர்களை மீண்டும் நெற் செய்கையினை தொடங்க ஊக்குவிக்கவும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

மாவட்டத்தில் வீதி, மின்சாரம், நீர் வழங்கல், நீர்ப் பாசனம் தகவல் தொடர்பாடல் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி தனித்தனியாக சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் இருந்து கேட்டறிந்து கொண்டார்.

தடைப்பட்ட வீதிகளை மீண்டும் திறப்பதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து கேட்டறிந்த ஜனாதிபதி தற்காலிகமாக பழுது பார்ப்பு பணிகளை விரைவுபடுத்தி வீதி மேம்பாட்டுக்கான நிரந்தர திட்டங்களை செயல்படுத்தும் வரை மக்களின் மேம்பாட்டுத் தேவைகளை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி பணிப்புரை வழங்கினார்.

பேரிடர் காரணமாக மாவட்டத்தில் உள்ள 580 மின்பிறப்பாக்கிகளில் 473 மாத்திரம் சேதமடைந்துள்ளதாகவும் அவை தற்போது மீட்டெடுக்கப்பட்டு வருவதாகவும் மாவட்டத்தில் மின்சார விநியோகம் நாளை முடிக்கப்படலாம் என்றும் மின்சார ஆணையம் தெரிவித்தது.

மேலும் 49,000 நீர் விநியோகம் சேதமடைந்துள்ளதாகவும் அவற்றில் சுமார் 99 % மீண்டும் சீரமைக்கப் பட்டுள்ளதாக அதிகாரிகள் சுட்டிக் காட்டியுள்ளதுடன் மீதமுள்ள தொகைக்கு பவுலர்கள் மூலம் தற்போது தண்ணீர் வழங்கப்பட்டு வருவதாகவும் அடுத்த இரண்டு நாட்களுக்குள் நீர் விநியோகத்தை முழுமையாக மீட்டெடுக்க முடியும் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். சேதமுற்ற சமுக நீர் வழங்கல் திட்டங்கள் தற்போது மீண்டும் சீரமைப்பு செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

கிணறு சுத்தம் செய்தல் பணிகள் தற்போது கடற்படையின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும் பிரதேச செயலகங்கள் ஒருங்கிணைப்பு மற்றும் சமூக பங்களிப்புகளுடன் பணிகளை விரைவாக முடிக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

வெள்ளம் காரணமாக மாவட்டத்தில் 228 வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும் வீடுகள் இருந்த அதே இடத்தில் மீள்குடியேற்றப்படுவார்களா அல்லது பொது இடங்களில் மீள்குடியேற்ற-ப்படுவார்களா என்பவற்றை தீர்மா-னிக்கவும் தொடர்புடைய நிலங்களை அடையாளம் காணும் பணிகள் தொடர்பாகவும் துல்லியமான தரவுகளை சேகரிக்குமாறும் ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

டிசம்பர் 16 ஆம் திகதி க்குள் மாவட்டத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளை யும் திறக்க முடியும் என்று கல்வி அதிகாரிகள் சுட்டிக் காட்டினர். மேலும் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு திறை சேரியில் இருந்து வழங்கப்படவுள்ள ரூ 15,000 நிதியை டிசம்பர் 31 ம் திகதிக்கு முன்னர் வழங்கி முடிக்கவும் அதற்கான பெயர் பட்டியலை உடனடியாகத் தயாரிக்கவும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

மக்களுக்கு நிவாரணம் வழங்குவதிலும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதிலும் அரச அதிகாரிகள் பொலிசார் முப்படையினர் மற்றும் சிவில் பாதுகாப்பு படையினர் ஆற்றிய பங்கிற்கு ஜனாதிபதி நன்றி தெரிவித்தார்.

## ஓட்டமாவடி பிரதேசத்தில் டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை வைத்திருந்தோருக்கு வழக்கு தாக்கல்





(ஊஸ்.எம்.எம்.முர்ஷித்)

தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு (08) திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் சனிக்கிழமை வரை டெங்கு நோயை கட்டுப் படுத்துவதற்கான வேலைத்திட்டம் மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் முன்னெடுக்கப்படவுள்ளது. இதன் அடிப்படையில் வீடுகள், வர்த்தக நிலையங்கள் பொது இடங்களை பார்வையிடும் திட்டத்தில் ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பரிசோதனைகள் இடம் பெற்றன.

ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.எம். தாரிக்கின் தலைமையில் இடம்பெற்ற இவ்வேலைத்திட்டத்தில் மேற்பார்வை பொதுச்சுகாதார பரிசோதகர் ஏ.எல்.நௌபர், பொது சுகாதார பரிசோதகர்கள், வாழைச்சேனை பொலிஸார், கிழக்கு சமூக நல அமைப்பு அங்கத்தவர்கள், சிலோன் ஓபன் கெம்பஸ் ஓட்டமாவடி கிளை மாணவர்கள் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் இவ்வேலைத் திட்டம் இடம்பெற்றது.

இதனடிப்படையில் 448 வீடுகள் பார்-வையிடப்பட்டதுடன் வீட்டுச்சுற்றுப்புறத்தை சுத்தமாக வைத்திருக்காதவர்கள் நுளம்புகள் பெருகக்கூடிய நீர்தேங்கக்கூடிய பொருள்களை அகற்றாதவர்கள வீட்டுக்கூரைப்பீலியை சுத்தப்படுத்தாதவர்களுக்கு ஏதிராக டெங்கு தடைச்சட்டத்தின் கீழ் மூன்று பேருக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட வுள்ளதுடன் பத்து பேருக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டதாகவும் சுகாதாரவைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.எம்.தாரிக் தெரிவித்தார்.

## நாகப்பட்டினம்- காங்கேசத்துறை இடையேயான பயணிகள் கப்பல் சேவை தொடர்ந்தும் இடைநிறுத்தம்

(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)

இலங்கையில் ஏற்பட்டுள்ள புயல் தாக்கத்தால் காங்கேசன் துறைமுகம் அதிக பாதிப்பை சந்தித்துள்ளது. நாகப்பட்டினம் - காங்கேசத்துறை இடையேயான பயணிகள் கப்பல் சேவை வானிலை காரணமாக தற்காலிக போக்குவரத்து நிறுத்தப் பட்டுள்ளது. இதனால் மக்கள் அனைவரும் ஏமாற்றம் அடைந்து உள்ளனர்.

நாகப்பட்டினம் - காங்கேசத்துறை இடையே இயக்கப்படும் பயணிகள் கப்பல் சேவை வடகிழக்கு பருவ மழை காரணமாக கடந்த அக்டோபர் மாதம் 26ஆம் திகதி முதல் நிறுத்தப்பட்டுள்ளது.

டிசம்பர் முதல் வாரத்தில் மீண்டும் கப்பல் சேவை தொடங்குவதாக திட்டமிடப்பட்டு இருந்தும் இது குறித்து சுபம் ஃபெர்ரி நிறுவனம் விடுத்துள்ள அறிக்கையில் கூறியதாவது, நாகப்பட்டினம் - காங்கேசன் துறை சர்வதேச கப்பல் சேவை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளது.

மோசமான வானிலை காரணமாக இந்த சேவை இந்த வாரம் தொடங்க இருந்தது. ஆனால் இப்போது தாமதமாகி உள்ளது. தற்போது காலநிலை மாறுபாடுகளின் காரணமாகவும், இலங்கையில் ஏற்பட்டுள்ள புயல் தாக்கத்தால் காங்கேசன்துறைமுகத்தில் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதால் அதை சீரமைக்கும் பணி நடந்து கொண்டு இருப்பதாலும் கப்பல் சேவை தொடங்கும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று கப்பல் நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

## சீனன்கோட்டை நிவாரணப் பொருட்கள் கம்பளையில் பகிர்ந்தளிப்பு



(பீ.எம். முக்தார்)

நாட்டில் அண்மையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்கென சீனன் கோட்டை பள்ளிச் சங்கத்தினால் சீனன் கோட்டை மக்களிடம் இருந்து சேகரிக்கப்பட்ட உலர் உணவு பொருட்கள், உடு துணிகள் மற்றும் அத்தியாவசிய பொருட்கள் 03 லொறிகள் மூலம் கண்டி மாவட்டத்திலுள்ள கம்பளை பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்டது.

அத்தியாவசிய உலர் உணவுப் பொருட்கள்இ தண்ணீர் போத்தல்கள், புதிய ஆடை வகைகள் மற்றும் மருந்து உள்ளிட்ட பல இலட்சம் பெறுமதியான அத்தாவசிய பொருட்கள் கம்பளை, கஹடபிடிய பகுதிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சீனன் கோட்டை பள்ளிச் சங்க இணைச் செயலாளர் எம்.எம்.எம். ஷிஹாப் ஹாஜியார் தலைமையில் சீனன் கோட்டை பள்ளிச் சங்க இணைச் செயலாளரும் அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபையின் நிறைவேற்று குழு உறுப்பினருமான அஷ்ஷெய்க் அல்ஹாஜ் கலீபதுஷ் ஷாதுலி இஹ்ஸானுதீன் அபுல் ஹஸன் (நளீமி), இணைப் பொருலாளர் அல்ஹாஜ் எம்.எம். ஹில்மி மவ்ஸூன், பள்ளிச் சங்க உறுப்பினர்களான அல்ஹாஜ் இஸ்ஸத் ஸவாஹிர் உட்பட சீனன் கோட்டை பகுதி முக்கியஸ்தர்கள் இப்பொருட்களை எடுத்துச் சென்று நேரடியாக கையளித்தனர்.

கஹட்டபிடிய பள்ளிவாசல் மற்றும் கம்பளை போதளாபிடிய சாஸ்தராலோக பௌத்த விகாரை, கெலிஓய அனர்த்த நிவாரண மையம் ஆகிய இடங்களுக்கு தலா ஒரு லொரி வீதம் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் கையளிக்கப்பட்டது.

இயற்கை அனர்த்தம் ஏற்பட்ட பின்னர் உடனடியாக சீனன் கோட்டை பள்ளிச் சங்கம் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அத்தாவசிய பொருட்களையும் நிதியையும் சேகரிக்கும் பணியை ஆரம்பித்ததோடு இரத்தினக்கல் வர்த்தகர்கள்இ வெளிநாட்டு இரத்தினக்கல் வர்த்தகர்கள், பரோபகாரிகள், ஆண்கள், பெண்கள், பாடசாலை, பாலர் பாடசாலை, குர்ஆன் மத்ரஸா, அரபுக் கல்லூரி சிறார்கள் என எல்லோரும் மனிதாபிமான உணர்வுடன் சீனன்கோட்டை பள்ளிச் சங்க அனர்த்த நிவாரண பணிக்கு வாரி வழங்கியமை இங்கு குறிப்பிடத்தக்க விஷேட அம்சமாகும்.

# அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு அரசின் நிவாரண உதவித் திட்டங்கள்

(எம்.எஸ்.எம். மசாஹிம்)

29ஆம் திகதி ஏற்பட்ட இயற்க்கை அனர்த்ததினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மற்றும் மரணித்தவர் களுக்கான அரசினால் வழங்கப் படவுள்ள விசேட உதவி திட்டங்களாக

1. வெள்ளநீரால் பாதிக்கப்பட்ட வீடுகளை சுத்தம் செய்திட தலா 25000 ரூபாய்.

2. மீள் குடியமர்ந்திட தேவையான அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்திட 50000 ரூபாய்

3. மண் சரிவு ஏற்பட்டு வீடுகளை இழந்து பாதுகாப்பு நிலையங்களில் வைக்கப்பட்டிருக்கும் குடும்பங்களுக்கு அரச நிதியுதவி அடிப்படையில் வாடகை வீடுகளை கொள்வனவு செய்துக்கொள்ள தலா 25000 ரூபா என்று 3 மாதங்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்ட மேற்படித்தொகை 6 மாதகங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளதாக அரசு அறிவிக்கின்றது.

4. இவ்வாறு பாதிக்கப்பட்ட பொது மக்களின் நாளாந்த வாழ்வாதாரத்தை உரிய நிலைக்கு கொண்டுவரும் வரை மாதம் ஒன்றுக்கு 50000ரூபாய் என தொடர்ச்சியாக மூன்று மாதங்களுக்கு வழங்கிடவும் ஒரு குடும்கத்தில் 2 உறுப்பினர்கள் இருப்பார்களேயானால் அவ்வாறான குடும்பங்களுக்கு மாதம் ஒன்றுக்கு தலா 25000 ரூபாய் எனவும் இரண்டு உறுப்பினர்களுக்கு மேலே இருப்பார்களேயானால் அவ்வாறான குடும்பங்களுக்கு மாதம் ஒன்றுக்கு 50000ரூபாய் வழங்கப்படும்

5. வெள்ளநீரினால் பாதிக்கப்பட்ட வயல் நிலங்களில் மீண்டும் விவசாய உற்பத்திகளை மேற் கொள்ள ஹெக்டயார் ஒன்றுக்கு 150000 ரூபாய் வழங்கப்படும்

6. வெள்ள நீரால் பாதிக்கப்பட்ட மரக்கறி உற்பத்திச்செய்யப்படும் விவசாய நிலங்களுக்காக 200000 ரூபாய் வழங்கப்படும்

7. வளர்ப்பு பபிராணிகளின் (கோழி, மாடு, ஆடு போன்றவை) பாதிப்புகள் சம்பந்தமாக 200000ரூபாய்

8. பதிவு செய்யப்பட்டுள்ள சிறிய மட்டும் பெரிய வர்த்தக நிலையங்களை தொடர்ந்து ஆரம்பித்திட 200000 ரூபாய்

9. பாதிப்புக்குள்ளான மீனவர்களின் இயந்திர உபகரணங்களை பெற்றுக்கொள்ள 400000 ரூபாய் வழங்கப்படும்.

10. பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களின் நலன் கருதி திரைச்சேரி மூலம் 15000ரூபாவும் ஜனாதிபதி நிதியத்திலிருந்து 10000ரூபாவுமாக மொத்தம் 25000 ரூபா வழங்கப்படவுள்ளது

11. மேலும் சேதத்திற்கு உள்ளாகி யிருக்கும் வர்த்தக நிலையங்களை அபிவிருத்தி செய்திடஅரச மதிப்பீடுகளுக்கு அமைய ஆகக் குறைந்தது 5000000 வழங்கப்பட தீர்மானிக்கப்பட்டுள்ளது

12. முழுமையாக சேதத்திற்கு உள்ளாக்கப்பட் வீடொன்றுக்கு 5000000 ரூபாய்

13. பாதிக்கப்பட்டவர்களுக்கு தனக்கென குடியிருப்புக்கு ஒரு நிலமில்லாவிடின் இவர்களுக்கென அரசுக்கு சொந்தமான நிலங்களில் காணிகளை வழங்கிடவும் அவ்வாறு முடியாவிட்டால் பாதிகப்பட்டவர்களுக்கான காணிகளை கொள்வனவு செய்திட அரசு 5000000 ரூபாயை வழங்க அரசு தீர்மானித்துள்ளது

14. பகுதியளவில் சேதத்திற்குள்ளாக் கப்பட்ட ஒரு வீட்டுக்கு ஆகக் கூடிய தொகை 2500000ரூபாய் எனவும் இது 10லட்சம், 15லட்சம், 20 லட்சம், 25லட்சம் என நான்கு பிரிவுகளாக வழங்கப்பட்டுள்ளது

15. மேற்படி அனர்தத்தினால் மரணமடைந்தல் ஒரு நபருக்காக 10லட்சம் வழங்கவும் அரசு தீர்மாணித்துள்ளது.

# அரசின் பேரிடர் நிவாரணத் தொகை மக்களிடம் கையளிப்பு

(ஏ.சி பௌசுல் அலிம்)

மினுவாங்கொடை கல்லொழுவை பகுதிகளில் அண்மைய வெள்ளப் பேரிடரில் பாதிக்கப்பட்ட வீடுகளை அரசாங்கம் கண்டறிந்து, ஒவ்வொரு குடும்பத்தையும் நியாயமான முறையில் பரிசீலனை செய்யப்பட்ட பின்னர், ஜனாதிபதி அறிவித்த 25,000 ரூபாய் சிறப்பு நிவாரணத் தொகை வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வெள்ளத்தால் சேதம் அடைந்த வீடுகளை சுத்தம் செய்வதை எளிதாக்கும் நோக்கில் வழங்கப்படும் இந்த நிதி, உரிய பட்டியல் மற்றும் அதிகாரப்பூர்வ ஆய்வுகளின் அடிப்படையில் கல்லொழுவை மக்களிடம் சென்றடைந்து வருவது குறிப்பிடத்தக்கது. பேரிடர் துயரத்திலிருந்து மீண்டு எழும் மக்கள் வாழ்வுக்கு உடனடி உதவியாக இந்த நிவாரணம் செயல்படுவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



வெள்ள அனர்த்தத்தின் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு மரதன்கடவல இஹலபுளியங்குளம் மக்கள் சேகரித்த வெள்ள நிவாரணப் பொருட்களை அனுராதபுரம் மொஹிதீன் பெரிய ஜூம்மா பள்ளிவாசல் வெள்ள நிவாரண சேகரிப்பு மைய குழுவினரிடம் (05) வழங்கி வைத்த போது பிடிக்கப்பட்ட படம்.

(படம் :- எம்.ரீ.ஆரிப் )

# ஹஜ் குழுவினால் 5 மில்லியன் ரூபா வழங்கி வைப்பு



(ரிஹ்மி ஹக்கீம்)

அண்மையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மத வழிபாட்டுத் தலங்களை புனரமைப்பதற்காக, ஹஜ் குழுவினால் 5 மில்லியன் ரூபா நிதியானது (08) புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சுக்கு அன்பளிப்பு செய்யப்பட்டது.

இது தொடர்பான காசோலையை ஹஜ் குழுவின் தலைவரும் பட்டயக் கணக்காளருமான ரியாஸ் மிஹ்லார், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவியிடம் கையளித்தார்.

இந்நிகழ்வில் சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரதியமைச்சர் முனீர் முளப்பர், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸ் மற்றும் ஹஜ் குழுவின் உறுப்பினர் பேராசிரியர் எம்.எஸ்.எம். அஸ்லம் ஆகியோர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# வென்னப்புவ, வைக்கால பகுதியில் பீடி இலைகள் மற்றும் இரசாயன பொட்டலங்களை கைப்பற்றிய பொலிஸார்

(சியாஜ்)

கடல் வழியாக நாட்டிற்கு கொண்டு வரப்பட்டு வேறு இடத்திற்கு கொண்டு செல்ல தயாராக இருந்த ஒருதொகை பீடி இலைகள் மற்றும் இரசாயனங்கள் அடங்கிய பொட்டலங்களை வென்னப்புவ பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர். வென்னப்புவ, வைக்கால பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை (09) இந்த சோதனை இடம்பெற்றுள்ளது.

வென்னப்புவ - அளுத்தோட்டை பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். குறித்த சோதனை நடவடிக்கையின் போது 17 பொலித்தீன் பைகளில் அடைக்கப்பட்டிருந்த 395 கிலோகிராம் பீடி இலைகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதுடன், அதற்குள்ளே ரகசியமாக 20 பொலிதீன் பைகளில் அடையாளம் காணமுடியாத இரசாயனப் பொருள் என சந்தேகிக்கப்படும் 60,000 சிறிய பொட்டலங்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன.



பீடி இலைகள் மற்றும் ரசாயனங்கள் அடங்கிய பொலிதீன் பைகள், 04 சிறிய மீன்பிடி படகுகளில் கொண்டு வரப்பட்டு தன்னிடம் ஒப்படைக்கப் பட்டதாக பொலிஸாரிடம் தெரிவித்துள்ள சந்தேக நபர், அந்த பீடி இலைகளை எடுத்துச் செல்லும் வரை மட்டுமே தாம் பாதுகாத்து வந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

புலனாய்வுப் பிரிவின் வென்னப்புவ பிரிவு வழங்கிய தகவலின் அடிப்படையில் இந்த சோதனை நடத்தப்பட்டு பொலிஸாரால் பறிமுதல் செய்த பீடி இலைகள் கட்டுநாயக்க சுங்க அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவச மருத்துவ முகாம்







அமேசான் கல்லூரிஇ லங்கா தெரபிட்ஸ் அமைப்புஇ கொழும்பு மாவட்ட பள்ளிவாசல் அமைப்பு மற்றும் கொழும்பு மாவட்ட வைத்தியர் அமைப்பு ஆகியவற்றுடன் இணைந்து, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக இலவச மருத்துவ முகாமை ஏற்பாடு செய்தது.

வெள்ளம்பிட்டியவில் உள்ள குயின்ஸ் மெடிகள் கிளினிகில் இந்த முகாம் நடைபெற்றது, அங்கு மருத்துவர்கள், சிகிச்சையாளர்கள் மருத்துவ பரிசோதனைகள், அடிப்படை சிகிச்சை, சுகாதார ஆலோசனைகளை வழங்கினர், மேலும் வெள்ளத்திற்கு பிறகு மக்களுக்கு தேவையான சுகாதார வழிகாட்டுதலையும் இதன் போது வழங்கினர். இந்த கூட்டு முயற்சி, வெல்லம்பிட்டிய மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள சமூக நலன் மற்றும் மக்களின் நல்வாழ்வுக்கான வலுவான அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியது, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சரியான நேரத்தில் சுகாதார சேவைகள் மற்றும் நிவாரணத்தை உறுதி செய்வனமாக அமைந்திருந்தது.

இலங்கையினை பாதித்த தித்வா புயலும், அதனுடன் கூடிய வெள்ள மற்றும் மண்சரிவுகளும் பொருளாதாரத்தில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது என்பதை கடந்து மக்களின் மனதில் ஒரு வகையான பீதியினை ஏற்படுத்தியுள்ளதையே காண முடிகின்றது. நாட்டின் எத்திசையிலும் இருந்து வருகின்ற செய்திகளை பார்க்கின்ற போது அனைத்தும் மக்களின் துயரினையே காட்டுகின்றது. இந்த துயரம் தொடர்ந்து மக்கள் மத்தியில் குடிகொள்ளும் எனில் அதனது விபரீதம் பாராதூரமானது என்பதை உளவியல் ஆய்வாளர்கள் தெரிவித்துவருகின்றனர்.

இவ்வாறானதொரு நிலையில் அரச மற்றும் தனியார் இயந்திரங்கள் நிவாரண உதவிகளை வழங்கிவருவது ஒரு புரம் மக்களுக்கு ஆறுதலை வழங்கினாலும், அவர்கள் தற்போதுள்ள மன அழுத்தத்தில் இருந்து அவர்களை மீற்பது என்பது காலத்தின் தேவையாகும்.

இதை உணர்ந்து இந்த இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவ்வப்போதும் எது தேவையாக இருக்கிறதோ அதனை அவர்களுக்கு பெற்றுக் கொடுப்பதன் மூலம் அவர்களுடைய உளவளதையும் தக்க வைத்துக் கொள்ள முடியும் என்று இதில் கலந்துகொண்ட அமேசன் கல்லூரியின் பணிப்பாளரும், பேராதனை பல்கலைக்கழக பகுதி நேர உளவளத்துறை விரிவுரையாளருமான கல்வியலாளர் இல்ஹாம் மரைக்கார் இதன் போது குறிப்பிட்டார்.

# உயிரிழப்புகள், பாதிப்புகள் அதிகம்: கண்டி மாவட்டத்தில் அனர்த்த பிரதேசங்களுக்குச் சென்ற மு.கா.தலைவர் ஹக்கீம்

நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலும் மண் சரிவு , வெள்ளப் பெருக்கு போன்ற அனர்த்தங்கள் நிகழ்ந்துள்ள போதிலும், அவற்றில் கண்டி மாவட்டத்திலேயே அதிகமான மரணங்கள் சம்பவித்தும், பாதிப்புகள் ஏற்பட்டும் உள்ள நிலையில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் கடந்த மூன்று தினங்களாக கண்டி மாவட்டத்தில் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் பாதிக்கப் பட்டுள்ள இடங்களுக்குச் சென்று பார்வையிட்டு, மக்களைச் சந்தித்து வருவதோடு, நிவாரணங்களை வழங்குவதிலும் கவனம் செலுத்தி வருகின்றார்.

ஹாரிஸ்பத்துவ தொகுதியில் அங்கும்புறைக்கு அண்மையில் விலானகம, ரம்புக்எல கிராமத்தில் பாரிய அனர்த்தம் நிகழ்ந்திருப்பதால் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்க-ீம் அங்கு சென்று





அனர்த்தத்தைப் பார்வையிட்டதோடு, ஜும்ஆ பள்ளிவாசல் தலைவர் லுக்மான் ஹாஜியாருடனும் மற்றும் அங்குள்ள அனர்த்த நிவாரண குழுவினருடனும் கலந்துரையாடினார். இதன் போது 29 பேர் வரை மரணித்திருப்பதாகவும் அவர்களில் 11 பேரின் ஜனாஸாக்கள் கண்டெடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. ஜனாஸாக்களை மீட்கும் விடயத்தில் அரசாங்கத்தின் செயல்பாடு திருப்தியாக இல்லை என்று ஊர் மக்கள் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். அதே வேளையில் பிரதேச மக்கள் ஒன்று சேர்ந்து இந்த ஜனாஸாக்களை மீட்டெடுப்பதிலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதிலும் கூடிய கரிசனை காட்டி வருவதாக அவரிடம் கூறப்பட்டிருக்கிறது.

பிரஸ்தாப கள விஜயத்தில் கண்டி மாநகர சபை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் எம்.எச். அனீஸ்தீன், கட்சியின் உயர் பீட உறுப்பினர் எஸ்.எம். ரிஸ்வி, தும்பனை பிரதேச சபை முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் எம்.ரிம்சாட் ஆகிய சிலரும் அவரோடு இணைந்திருந்தனர்.

அக்குறணையில் பெரிய பள்ளிவாசலின் கீழ்புறமாக உள்ள சிற்றாற்றில் (ஓடை) பகுதியில் சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட மண் சரிவில் சிலர் மரணத்ததாக அறிந்து அங்கும் சென்றுள்ளார்.

அனர்த்தங்கள் காரணமாக மண்ணுள் புதையுண்டமை போன்றவற்றால் காணாமல் போனவர்கள் என சந்தேமின்றி தெரியவருபவர்களையும் மரணித்தவர்களாகக் கருதி மரண சான்றிதழ் வழங்குவதன் சாத்தியம் பற்றி, புதிதான சுற்று நிருபமொன்றின் கீழ் ஆலோசித்து வருவதாக அக்குறணை பிரதேச செயலாளர், தம்மை சந்தித்த கண்டி பாராளுமன்ற உறுப்பினர்களான ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் தேசிய மக்கள் சக்தியை சேர்ந்ந ரியாஸ் பாஷரூக் ஆகியோரிடம் கூறியுள்ளார்.

# குர்ஆன் பிரதிகள் வழங்கும் நிகழ்வு





(பீ . எம் முக்தார்)

சீனங்கோட்டை ஜாமிஅதுல் பாஸிய்யா கலாபீடத்தின் ஒரு பிரிவாக இயங்கும் பகுதி நேர ஹிப்ழ் மத்ரஸா மாணவர்களுக்கு 76 ஹிப்ழ் குர்ஆன் பிரதிகளை வழங்கும் நிகழ்வு 26ம் திகதி பாஸிய்யா ஜு/ம்ஆ பள்ளிவாயல் மேல் மாடியில் கலீபதுஷ் ஷாதுலி அல்ஹாஜ் இஹ்ஸானுத்தீன் அபுல் ஹஸன் (நளீமி) தலைமையில் நடைபெற்றது.

பகுதிநேர ஹிப்ல் மத்ரஸா மாணவன் முஹம்மத் இஷ்பாகின் கிராத்துடன் ஆரம்பமானதோடு பாஸிய்யா ஜும்ஆ பள்ளிவாயல் இமாம்களில் ஒருவரான மௌலவி அஹ்மத் முபாரக் (மன்பஈ) துஆ பிரார்த்தனை மேற்கொண்டார்.

பியூட்டி ஜெம்ஸ் முகாமைத்துவ தலைவர் அல்ஹாஜ் அஹ்ஸர் ஸவாஹிர் அவரது தாயார் மர்ஹூமா ஹாஜியானி இர்ரீபதுல் கைர் ஞாபகார்த்தமாகவும், டாக்டர் ரவ்ஸான் றாஸிக் அவரது தந்தை மர்ஹூம் முஹம்மத் ராசிக் ஹாஜியார், மற்றும் சகோதரி மர்ஹூமா பாத்திமா ருஷ்தா ஞாபகார்த்தமாகவும், மாணிக்கக் கல் வியாபாரி ஹாரிஸ் ஹாஜியார் அவரது மாமியார் மர்ஹூமா பாத்திமா ஸிபாயாவின் ஞாபகார்த்தமாகவும் அன்பளிப்புச் செய்திருந்தனர்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய கலீபதுஷ் ஷாதுலீ அல்ஹாஜ் இஹ்ஸானுத்தீன் அபுல் ஹஸன் (நளீமி) எமது சீனங் கோட்டையில் பல மத்ரஸாக்கள் இயங்கினாலும் பாஸிய்யா ஜும்ஆ பள்ளிவாசலில் ஆரம்பிக்கப்பட்ட ஹிப்ழ் மத்ரஸா தனித்துவமானதாகும். இது ஷேக்மார்களின் துஆ பரக்கத்தோடு ஊர் பாரம்பரியத்தை, கட்டுக்கோப்பை பாதுகாத்து, ஒழுக்கமுள்ள சிறந்த சமூகத்தை உருவாக்கும் பணியாகும்.

எந்த விடயமாக இருந்தாலும் தூய எண்ணத்துடன் ஆரம்பிக்கப்படுமானால் அது வெற்றி நடை போடும் என்பதில் சந்தேகமில்லை. அந்த அடிப்படையில் எமது ஹிப்ழ் மத்ரஸா குறுகிய காலத்தில் பல வலங்களைப் பெற்று சிறப்பாக நடைபெறுகிறது. ஹிப்ல் மத்ரஸா தலைமை உஸ்தாத் மௌலவி நுஸ்கி (இல்மி) குர்ஆன் பிரதிகளை வழங்கி வைத்த பரோபகாரிகளுக்கும், மரணித்த குடும்பத்தவர்களுக்கும், நிர்வாகத்தினருக்கும் விஷேட துஆ பிரார்த்தனை நிகழ்த்தியமையும் குறிப்பிடத்தக்கது.

# ரிவஸ்டன் நக்கில்ஸ் மலைப்பிரதேசங்களை பார்வையிடுவதற்கு தற்காலிக தடை

(எம்.எஸ்.எம். மசாஹிம்)

கடந்த 29ஆம் திகதி ஏற்பட்ட இயற்கை அனர்தத்தினால் பாரிய மண் சரிவுகள் ஏற்பட்டு பாதிப்புக்குள்ளாயிருக்கும் ரிவஸ்டன் மற்றும் உலக மரபுரிமைக்குள்வாங்கப்பட்டுள்ள நக்கில்ஸ் மலை அடிவாரங்களை சுற்றுலா பயணிகள் மற்றும் பொதுமக்கள் பார்வையிடச் செல்வதை முற்றிலும் தடை செய்துள்ளதாக மாத்தளை மாவட்ட செயலாளர் பிரசன்ன மதநாயக்க தெரிவிக்கிறார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள இயற்கை அனர்த்தம் காரணமாக மேற்படி பகுதிகளுக்கு உட்புகும் பாதைகள் முற்றிலும் சேதமடைந்துள்ளதாகவும் இப் பகுதியில் சில பகுதிகளில் இன்னும் அவதானமிக்க நிலைமைகள் இருப்பதாக அனர்த்த முகாமைத்துவ நிபுணர்கள் தெரிவிப்பதாக மாவட்ட செயலாளர் சுற்றிக் காட்டுகின்றார்.

விசேடமாக இப்பகுதிகளில் அபிவிருத்தி பணிகளை தற்பொழுது மேற்கொண்டு வருவதாகவும் சுற்றுலா பயிணிகள் பொது மக்கள் இப்பகுதியினை பார்வையிடச் செல்வது அவர்களின் பாதுகாப்புக்கு உகந்ததில்லை எனவும், இது அபிவிருத்தி பணிகளில் ஈடுபட்டிருக்கும் அரச அதிகாரிகளுக்கு பெரும் இடைஞ்சலாகும் எனவும் சுட்டிக்காட்டுகிறார்.

விசேடமாக ரிவஸ்டன் மற்றும் நக்கில்ஸ் மலைகள் உலக புகழ் பெற்ற மலையடிவாரங்கள் எனவும் மாத்தளை மாவட்டங்களுக்கு அழகை எடுத்துக்காட்டக்கூடிய இயற்கை வனபகுதிகளாகவும் இயற்கை அழகுநிறைந்ததாகவும் தேசிய மற்றும் சர்வதேச சுற்றுலாப்பயணிகளின் மனங்களை கவரக்கூடிய மலை அடிவாரங்களாக இருப்பதால் இயற்கை அனர்த்தால் பாதிக்கப்பட்டுள்ள இந்த இரண்டு மலையடிவாரங்களையும் ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்கவின் பணிப்புறைக்கு அமைய அவசர அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் மாத்தளை மாவட்ட செயலாளர் மேலும் தெரிவித்தார்.

# அவசர வெள்ள நிவாரண நிதியத்திற்கு ரியாத் வாழ் இலங்கையர்கள் 100,000 ரியால்கள் பங்களிப்பு

இலங்கையில் அண்மைய தித்வா சூறாவளியினால் ஏற்பட்ட பாரிய வெள்ளம் மற்றும் மண்சரிவுகளால் பாதிக்கப்பட்டவர்களுக்காக, ரியாதில் உள்ள இலங்கை தூதரகம் உடனடி நிதி சேகரிப்புக்காக தொடரான நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தது.

தூதரக வளாகத்தில் இடம்பெற்ற முதலாவது நிகழ்வில், ரியாத் வாழ் இலங்கையர்கள் ஒரு இலட்சம் ரியால்களை (US $ 26,666) நன்கொடையாக வழங்கியுள்ளது. அந்த நன்கொடைப் பங்களிப்பு சவுதி அரேபியாவிற்கான இலங்கை தூதுவர் கௌரவ அமீர் அஜ்வதிடம் கையளிக்கப்பட்டது.









அண்மைய அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக தமது ஒத்துழைப்பையும் ஒருமைப்பாட்டையும் வெளிப்படுத்தும் வகையில், ரியாதில் உள்ள இலங்கை நிறுவனங்கள் , அமைப்புகள், தனிநபர்கள் மற்றும் ரியாத் இலங்கை தூதரக உத்தியோகத்தர்கள் இந்த நிதிப் பங்களிப்பை வழங்கினர். நாடு எதிர் கொண்டுள்ள இத்தகைய நெருக்கடியான சூழ்நிலையில் ரியாத் வாழ் இலங்கையர்களின் பெறுமதியான பங்களிப்பிற்காக நன்றிகளை தெரிவித்த தூதுவர் அமீர் அஜ்வத் மேலும் கருத்து தெரிவிக்கையில், தாய் நாட்டில் வாழ்கின்ற சகோதர சகோதரிகளுக்கு உதவும் வகையில் உதவிகள் கோரப்படுகின்ற போதெல்லாம் வெளிநாடுகளில் வாழ்கின்ற இலங்கையர்கள் எந்தவித தயக்கமும் இன்றி முன் வருவதோடு துரிதமாக செயற்படுவதனை கோடிட்டு காட்டினார். மேலும் வெளி நாடுகளில் வாழும் இலங்கையர்கள் எப்பேதுமே தேசத்தின் எதிர்பார்ப்பிற்கான மூலமாகவும் மிகப் பெரும் பலமாகவும் இருந்து வருகின்றனர். தேசத்சதை மீள கட்டியெழுப்புவதற்கான இத்தகைய மகத்தான





செயற்பாட்டில் பங்கெடுக்குமாறு சவுதி அரேபியாவில் வாழ்கின்ற அனைத்து இலங்கையர்களிடமும் கௌரவ தூதுவர் வேண்டிக் கொண்டார்.






நாச்சியாதீவு பர்வீன்

எஸ். ஃபாயிஸா அலி

**கடந்தவார தொடர்....**

# லறீனா அப்துல் ஹக்கின் 'தஜ்ஜாலின் சொர்க்கம்'

தன் வாழ்வின் அடுத்த கட்டம் குறித்துச் சுயமாக முடிவெடுக்கும் நிலைக்கு அவள் வருவதை சிலபோது பெண்களாலேயேகூட சட்டென ஏற்றுக்கொள்ள முடியாமல் போகும் அளவுக்கு இச்சமூகமும் கலாசாரமும் நம் மனநிலையைக் கட்டமைத்து வைத்திருக்கிறதோ என்ற சிந்தனையோடு அடுத்த கதைக்குள் நுழைகிறேன்.

ஏழாவது கதை, "செய்னம்பு நாச்சி". நான் விரும்பி வாசிக்கும் லறீனாவின் முகநூல் பதிவுகளுக்குள் இடைக்கிடையே கெத்தாக எட்டிப் பார்த்து சமூகத்தின் குறைகளைப் பயமின்றி சுட்டிக் காட்ட முனைகின்ற ஓர்மம் நிறைந்த அதே செய்னம்பு நாச்சியே தான்.

ஒன்பது வயதான ஓர் ஏழை சிறுமி வளர்வதற்குத் தனது வீட்டுச்சூழலைப் பொருத்தமற்றதாக காணும் ஒரு தாய் தனது உறவுமுறைப் பெண் வீட்டில் அவளை விட்டுச் செல்கிறாள். அந்த உறவுப் பெண் சிறுமி நஸ்லியாவின் சக்திக்கு மீறிய பல கடினமான வேலைகளைக் கொடுத்து அவளை கொடுமைப் படுத்துகிறாள். அந்தச் சிறுமியின் கஷ்டங்களை, மனவேதனைகளை உணர்ந்து அவளைத் தாயாரோடு வீடு செல்வதற்கு உதவி புரிகிறார், செய்னம்பு நாச்சி. அந்தச் சிறுமிக்காகத் தானும் வீட்டை விட்டு வெளியேறவும் துணிகிறார். தலைநகரில் மலையகச் சிறுமிகள் குறைந்த சம்பளத்தில் வேலைக்கு அமர்த்தப்படுவது பற்றி நாம் அடிக்கடி செய்திகளில் பார்க்கிறோம் கொதித்துப் போகிறோம். உண்மையில் இதுவும் ஒருவகை சிறுவர் துஷ்பிரயோகமே. நல்லவேளை, முளையிலேயே கருகிப் போகாமல் தன் கறாரான பேச்சுக்களால் அந்தப் பிஞ்சை மறுபடியும் துளிர்க்கச் செய்கிறார், செய்னம்பு நாச்சியார்.

கதைக்குள்ளே அவர் கலந்து கொள்ளும் பலவகைப்பட்ட உரையாடல்களுக்கு கதைசொல்லியின் புத்திக்கூர்மையும் முற்போக்குச் சிந்தனைகளும் பளிச்சிடும். மார்க்கத்தின் பெயரால் சமூகத்தில் நடக்கும் கேலிக் கூத்துக்கள், மூடநம்பிக்கைகள், அதற்கூடாக நசுக்கப்படும் பெண்களின் மன உணர்வுகள் என வெகு அழகாய்க் கதை நகர்த்தப்பட்டு இருக்கும்.

"கொஞ்சம் உட்டா இவனுவள் அங்நீக்கிற மியூஸியத்தையும் இஸ்லாத்துக்கு எடுக்கிறய் எண்டு ஷெல்லி, அந்தப் பொணத்துக்கெல்லாம் ஜ/ப்பாவும் அபாயாவும் உடுப்பாட்டினாலும் புதினப்படுறதுக்கில்லடா வாப்பா! இவனுகள் இஸ்லாம் இஸ்லாமுண்டு ஷெல்லி இஸ்லாத்த இந்த ஒலகத்துக்கே லாயக்கில்லாத மார்க்கம் ஆக்கிட்டு வாறானவள். ஏன்ட வாப்பாண்டே! எங்கட காலத்திலயிம் இஸ்லாம் இல்லாமையா போச்சி? - எப்ப இந்த குரூப் குரூப்பா தொடங்கி இஸ்லாத்த வித்துத் திண்டு தண்ணி குடிக்கத் தொடங்கி னான்களோ, அப்ப புடிச்சது எங்கட சமூகத்துக்கு முஸ "பத்து." (ப.128 ) செய்னம்பு நாச்சி என்ன சொல்லவருகிறார் என்பது புரிகிறது தானே?

அவர் சொல்வதாக இன்னொரு வரியும் வரும். "பசியோ பட்டினியோ பெத்தபுள்ளவள் உம்மாக்கிட்ட ஈக்கிக்கிறது தான் நல்லம்" (ப.132) என்று. உண்மைக்கு உண்மையான கருத்து அது.

எட்டாவது கதைதான் தஜ்ஜாலின் சொர்க்கம். நூலின் பெயரும் அதுதானே! தஜ்ஜால் என்பது முஸ்லிம் பண்பாட்டு மரபின் அடியான ஒரு தொன்ம நம்பிக்கை. அதனை நிகழ்வெளிக் கதைக்குள் கொண்டு வந்து இணைத்துள்ள விதம் மிக அற்புதமாக அமைந்துள்ளது. பெச்சிம்மாக் கிழவி சொல்லும் கதையாக தஜ்ஜால் இக்கதைக்குள் மெதுவாக நுழைகிறான்,

''அவன் இப்பவும் ஒலகத்துல எங்ஙியோ ஒரு மூலைல ரகசியமான ஒரு குகைக்குள்ள ஈக்கிறான். அது நெலத்துக்கடியிலயா கடலுக்கு அடியிலயாண்டு தாறுக்குமே தெரியா. அவன அங்க பென்னாம் பெரிய்ய்ய சங்கிலியால கட்டிவெச்சி ஈக்கிது. அவன் எந்த நாளும் ராவெல்லாம் அந்தக் குகைட சுவர நாக்கால நக்கி நக்கி வெளிசாக்கிட்டே வருவானாம். அப்ப'' (ப.137) என்று பெச்சிம்மா நிறுத்தும் போது, அவரைக் குழுமியுள்ள சின்னஞ் சிறுகளோடு நாமும் கதைக்குள் ஆழ்ந்து விடுகின்றோம்.

இவ்வாறு, தஜ்ஜால் பற்றிய தொன்மக் கதையையும் இணைத்துக் கொண்டு முனீராவின் கதையை நம் கண்முன் விரிக்கின்றார் கதைசொல்லி. என்ன சொல்வது? சோகம்.. சோகம். முழுக்கதையும் அப்படி ஒரு சோகம். வீட்டில் தன்னோடு வாழும் துணைவியின் அறிவையும் திறன்களையும் அடக்கி நசுக்கிக் கொண்டே உலகம் தன்னை ஒரு முற்போக்குவாதியாகக் கருத வேண்டும் என்று போலிப் பெண் சுதந்திரம் பேசித் திரியும் இரட்டை வேடதாரிகளையும், மார்க்கத்தின் பெயரால் ஊரை ஏய்க்கும் நயவஞ்சகர்களுடைய கபட நாடகத்தையும் தோலுரித்துக் காட்டும் அதேநேரம், பெண் மக்களே ஆனாலும் அவர்கள் தற்சார்புடையோராய் வாழ்வதை ஊக்குவித்து உதவும் முனீராவின் பெரியப்பா போன்ற பரந்த மனதுடைய ஆண்களும் சமூகத்தில் வாழ்கிறார்கள் என்ற நம்பிக்கையை ஊட்டி கதாபாத்திர வார்ப்பில் சமநிலை பேணுகிறார் கதைசொல்லி.

இக்கதையில் வரும் முனீரா போன்ற பெண்களின் நிலையைக் கண்டு தானோ அன்றைய பாரதியும், 'நல்லதோர் வீணை செய்தே அதை நலங்கெட புழுதியில் எறிவதுண்டோ?' எனப் பாடி இருப்பானோ என்ற எண்ணம் மனதில் தோன்றி மறைந்தது. மறுபடியும் கனவுகள் சிதைக்கப்பட்ட இன்னொரு பெண்ணின் மனக்குமுறலாக இக்கதை இருந்த போதிலும், பெச்சிம்மாவின் கதையினூடே சொல்லப்பட்ட தஜ்ஜால், ஒரு கதாபாத்திரமாகக் கதைக்குள் உள்நுழைந்து எல்லோரையும் கிடுகலங்க வைப்பது ஒரு சுவாரஷ்யமான திருப்புமுனையாக அமைகிறது.




இக்கதையில், தஜ்ஜால் என்பதும் அவன் காட்டும் சொர்க்கம் என்பதும் கதைக் கருவுக்கு வலுசேர்க்கும் இரு குறியீடுகளாக மாறிவிடுகின்றன. அவற்றைக் கதைக்குள் எடுத்தாண்டு மிகச் சுவாரஷ்யமாகக் கதையை வளர்த்துச் செல்லும் அவரது புனைவு உத்தி கூர்மை பெற்ற ஓர் அருமையான கதையாக இத்தலைப்புக் கதையினை அடையாளப்படுத்தலாம்.

இக்கதையில் முனீராவின் குடும்ப வாழ்வில் நடக்கக்கூடாத அசம்பாவிதங்கள் நடந்து முடிந்த பின்புதான், தஜ்ஜாலின் பிரவேசம் கதையில் இடம்பெறுகிறது.

முதலாவது தரம் இக்கதையை வாசித்த போது, இவ்வளவுக்குப் பின்னும் முனீரா ஏன் பழையபடி தஜ்ஜாலின் சொர்க்கத்தை உண்மை என நம்பி மீண்டும் போகிறாள் என்ற ஒரு கேள்வி மனதில் தோன்றவே செய்தது. மேலும் இருமுறை வாசித்த பின்புதான் கதைசொல்லி தன் கதையில் உளவியல்சார்ந்த இயல்புநிலையை உல்வாங்கிக் கதையை விபரித்துள்ளார் எனப் புரிந்தது. அதாவது, பொதுவாக ஒருவருக்குத் தோன்றும் கனவுகள், அதில் வரும் நபர்களோ பிறவோ அவரது வாழ்வில் அவர் ஏலவே கண்ட, அவரது மனதில் ஆழமாகப் பதிந்த விடயங்களை அடிப்படையாக வைத்தே தோன்றும். அந்த அடிப்படையில், பெச்சிம்மாவின் கதையைக் கேட்டபடியே கண்ணயர்ந்துவிடும் முனீராவுக்கு, அவள் அதுவரை கேட்ட, அதேவேளை ஏலவே தான் சமயபாட வகுப்பில் கற்றிருந்த தஜ்ஜால் பற்றிய கதையின் நீட்சியாகக் காட்சிகள் கனவாக நீள்கின்றன. இப்பின்னணியில் அவளின் மனதின் அடியாழத்தில் ரணமாய்ப் பதிந்த சொந்த வாழ்வின் துயரங்களும், அதனோடு சம்பந்தப்பட்ட நபர்களும் உயிர்ப்பாத்திரங்கள் போல அங்கு உலாவருவதை கதைசொல்லி கச்சிதமாகப் படைத்துள்ளதோடு, தொலைவில் கேட்கும் மகளுடைய குரல் முனீரா அதுவரை கண்டுகொண்டிருக்கும் உலகுக்கு வெளியில் ஒலிப்பதுபோல் காட்டி, நம் ஐயத்துக்கு விடையளித்தும் உள்ளார். இந்தக் கதையின் சம்பவ உருவாக்கம், தொன்ம நம்பிக்கையோடு கலந்து அவற்றைச் சுவைபட இணைத்துள்ள விதம், கவித்துவ வீச்சுடன் இயங்கும் மொழிநடை என லறீனாவின் படைப்பாளுமைக்கு அணிசேர்க்கிறது, 'தஜ்ஜாலின் சொர்க்கம்'.

அடுத்து, ஒன்பதாவது கதைக்குள் நுழைகிறேன். ஆத்தா. கதை சொல்லி பிறந்து வளர்ந்த மண்ணில், மலையக மக்களின் வாழ்க்கைப் போராட்டங்கள், அவர்களின் கொண்டாட்டங்கள் என்பவற்றைப் பற்றிப் பேசும் கதை. இதில் உயிரோட்டமுள்ள பாத்திரங்களாக மலையகமே உலகம் என வாழும் ஆத்தாக் கிழவியும், தோட்டப் பிள்ளைகளும், அவர்களின் கல்விக்காகவும் அவர்களுடைய உள்ளார்ந்து ஒளிரும் கலைத் திறமைகளை வளர்ப்பதற்காகவும் பெரிதும் பாடுபட்டு வருபவருமான தினகர் மாஸ்டரும் என நம் மனதில் நிரந்தரமாக தங்கி விடுகின்றனர். காட்சி, வர்ணனைகள், பாத்திர உரையாடல்கள் வெகு இயல்பாகவும் உயிரோட்டம் நிறைந்ததாகவும் அமைக்கப்பட்டுள்ளன. மது போதை தரும் அழிவுகளும், அதை எதிர்க்க ஆத்தா செய்யும் அளப்பரிய தியாகமும் வியக்க வைப்பவை. பொன்னாத்தாக் கிழவியின் பாத்திர உருவாக்கம் மிக வலுவாகவும் வெகு இயல்பாகவும் அமைந்திருப்பதோடு, எந்த ஒரு சமூக மாற்றத்துக்குமான வித்து முதலில் அவரவர் வீட்டுக்குள் விதைக்கப்படுதல் வேண்டும் என்ற ஆழமான செய்தியை இக்கதை அனாயாசமாகச் சொல்லிச் செல்கிற அழகை மிகவும் இரசித்தேன்.

அதேபோல், இக்கதையில் இடம்பெறும் மகிஷாசுர வதம் கூத்தும் பாடலும் காட்சியும் மிக அருமை. கிராமியக் கலையான கூத்து வடிவத்தினை சமூக மாற்றச் சிந்தனையை விதைப்பதற்கான கருவியாக முன்னிறுத்தி இருப்பதும், காலங் காலமாக மலையக மக்களை ஏமாற்றிச் சுரண்டும் அரசியல்வாதிகள், அவர்களுக்குத் துணைபோகும் அடிவருடிகள் குறித்த சமூக விமர்சனத்தை ஒருவித எள்ளல் பாணியில் முன்வைக்கும் கதையாக இது அமைந்திருப்பதும் சிறப்பு.

"அடக்குமுறை யாளர் காட்டில்
அடைமழை பொழிந்ததை -
இனித்
தடந்தெரியா தழிப்பதற்கு
தேவி நானும் வருகிறேன்
டண்டணக்க டணக்க டணக்க
டண்டணக்க டணக்கடா
இருளடர்ந்த நாட்டில் தீபம்
ஏற்ற நானும் வருகிறேன்
பொருளிருக்கும் திருடர்கொட்டம்
போக்க இன்று வருகிறேன்."
டண்டணக்க டணக்க டணக்க
டண்டணக்க டணக்கடா

பெண்குரல் உடுக்கொலியோடு ஓங்கியொலித்து ஓய, அதைத் தொடர்ந்து கோரஸ் ஒலித்தது:

"மதுவரக்கன் ஒழிகவே!
மலைநாடு உயர்கவே!
புதுபுரட்சி ஓங்கி வாழ்வு
புதிய விடியல் காணவே!
டண்டணக்க டணக்க டணக்க
டண்டணக்க டணக்கடா
வருக காளி வருகவே!
பருகத் தீயர் உதிரமே!"

(ப.165) என்ற வரிகளை வாசித்துச் செல்கையில் ஒருவித உத்வேக உணர்ச்சி தோன்றி மயிர்க்கூச்செறிவதான சிலிர்ப்புணர்வு.

"ஆமாடி, எவெ வூட்டுக் குடியெக் கெடுத்தாச்சூ, எவெளெவளுவ தாலி அறுந்தாலூ, தங்கட அடிமடி ரொம்பினாச் செரின்னு நெனக்கிற பொணந்தின்னிக் கூட்டத்துக்கு, மக்களப் பத்தி என்னா அக்கற இருக்கப் போவூதூ?"

"அடியாத்தீ! நம்ப பொன்னாத்தாக் கிழவிக்கு கற்பூரப் புத்திடி! பாரே, எம்புட்டு செரியா விசயத்தப் புடிச்சிக்கிட்டான்னு!" (ப.164) என்று மலையகப் பேச்சுமொழி கொஞ்சி விளையாடும் 'ஆத்தா'வின் மலையக மண்வாசனையில் மயங்கியவாறே இறுதிக் கதையான புளியமரத்துப் பேய்களுக்குள் நுழைகிறேன்.

ப்பாஹ்! என்ன சொல்வது? எத்தனை தடவை வாசித்தாலும் மறுபடியும் மறுபடியும் வாசிக்கத் தூண்டும் அற்புதமான ஒரு கவிதை மொழியில் சின்னப் பெண்ணொருத்தியின் மன ஓட்டத்தை அடுக்கிக் கொண்டே போகின்றார், கதைசொல்லி. சொந்த வீட்டுக்குள், குடும்பத்தவர்களால், அண்டை அயலவர்களால் பெண் என்ற ரீதியில் அடையும் இன்னல்கள், சுரண்டல்கள் தாம் எத்தனை! எத்தனை! மொத்த சோகங்களுக்கும் வடிகாலாய் தன் ஆயிரம் கரம் கொண்டு அவளை அணைத்து ஆறுதல் கொள்ளச் செய்யும் புளியமரம் கதையின் முக்கிய கதாபாத்திரங்களில் ஒன்று. பின்நவீனத்துவப் புனைவுக் கூறுகளைக் கொண்டமைந்த இக்கதை பலவகையிலும் தனித்துவமான ஒரு படைப்பு எனலாம்.

''புளியமரம் அவளை வாஞ்சையோடு கூவி அழைப்பதான உள்ளுணர்வு அவளுக்குள். தாயைப் பிரிந்த பிள்ளையைப் போல் இரு கைகளையும் விரித்து புளியமரத்தின் அடியைக் கட்டிப்பிடித்துக்கொண்டு சில கணங்கள்வரை கண்மூடிக் கிடந்தாள். சற்றைக்கெல்லாம் கோப்பி மரக்கிளையில் தாவி ஏறி, புளியமரத்தில் தொற்றிக் கொண்டாயிற்று. கிளிகளுக்கும் குயில்களுக்கும் போட்டியாக அவள் வாய்விட்டு உல்லாசமாகப் பாடத் தொடங்கிவிட்டாள்.'' (ப.180)

என்ற சித்திரிப்புகளினூடே தாயன்பு கிடைக்காத சின்னஞ்சிறிய மனது, தாயின் மடியாகப் புளியமரத்தை வரித்து அணைத்துக் கொள்வதும், கொஞ்சி விளையாடுவதும், தன் உணர்வுகளோடு ஒன்றிவிட்ட அம்மரத்துடன் ஊனும் உயிரும் இரண்டறக் கலந்துவிடுவதான கற்பனையில் மிதப்பதுமாகத் தீட்டப்பட்டுள்ள அபூர்வமான ஒரு கதை, 'புளியமரத்துப் பேய்கள்.

## மனநலமும் ஆலோசனையும் 93

# "வெள்ளம் விட்டுச்சென்ற குப்பைகள்"

வெள்ளம் பலவிதமான குப்பை கூழங்குகளை விட்டுச்சென்றிருப்பதை எங்கு பார்த்தாலும் காணலாம். இந்தக் குப்பைகள் மிகவும் ஆபத்தானவை. அவற்றை சுத்தம் செய்வது எளிதானது அல்ல.

வெள்ளத்துக்குப் பிறகு வீதிகள், வீடுகள், முற்றங்கள் மற்றும் பொதுவிடங்கள் அனைத்தும் குப்பைகளால் நிரம்பியிருக்கின்றன. இந்தக் குப்பைகள் சாதாரண குப்பைகள் அல்ல. இவை வெள்ளநீரில் நனைந்து ரசாயன ரீதியாக மாறியிருப்பதால், அவை மனிதர்களுக்கு பெரும் ஆபத்தாக மாறியிருக்கின்றன. வெள்ளநீரில் பொதுவாக கழிவுநீர்க் குழாய்களில் இருந்து வரும் கழிவுகள், மிருகங்களின் மலவஸ்துகள், எண்ணெய், ரசாயனங்கள், பூச்சிக்கொல்லிகள், கெட்டுப்போன உணவுப்பொருட்கள், செத்த மிருகங்கள் போன்றவை கலந்து இருக்கும். இதனுடன் பாக்டீரியா மற்றும் பூஞ்சை நிறைந்த சதுப்பு மண்ணும் சேர்ந்திருக்கிறது. பல இடங்களில் பல பொருட்களில் கட்டியான சேறு ஒட்டியிருப்பதையும் காணலாம். இவை ஒன்றாக சேரும்போது கடும் துர்நாற்றம் மட்டுமல்லாது, வேகமாக கிருமிகள் மற்றும் பூஞ்சை வளர்ச்சியும் ஏற்படுகிறது. இதனால் வெள்ளக் குப்பைகள் மிகப் பெரிய அளவில் சுகாதார ஆபத்தை உருவாக்குகின்றன.

இந்த நிலையில் வீட்டுப் பொருட்களை சுத்தம் செய்வது மிகவும் சிரமமான ஒன்றாக இருக்கிறது. வீட்டுப் பொருட்களும் குப்பை நிலையில் இருப்பது மிகவும் வருத்தம் தருகிறது. வீட்டில் பயன்படுத்திய மென்மையான பொருட்கள் வெள்ளநீரை ஆழமாக உறிஞ்சுவதால், அவற்றை சுத்தம் செய்தாலும் பாதுகாப்பாக பயன்படுத்த முடியாது. மெட்ரஸ், சோஃபா போன்றவை கழிவுநீர் கலந்த நீரை உறிஞ்சியிருப்பதால் அவை முழுவதும் சேதமடைந்திருக்கின்றன. தலையணைகள், குஷன்கள், கம்பளிகள் போன்றவை உடனடியாக பூஞ்சை பிடிப்பதால் அவற்றையும் பயன்படுத்த முடியாதிருக்கிறது. இவை உடல்நலப் பிரச்சினைகளை ஏற்படுத்தக்கூடியவை என்பதால் இவற்றையும் ஒதுக்கிவிட வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. ஆடைகளை சில நேரங்களில் கிருமிநாசினியால் துவைத்தால் பயன்படுத்தக்கூடியதாக இருக்கலாம், ஆனால் அவற்றின் மணம், அழுக்கு, பூஞ்சை ஆகியவை நீங்காமல் இருக்கும்.

மரச்சாமான்கள் நீரை அதிகம் உறிஞ்சுவதால் அவை வீங்கி, வாடி அழுகிப் போயுள்ளன. இப்படி பல வீட்டுப் பொருட்கள் பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பதால், அவை வீடுகளின் முன்புறம் மற்றும் தெருக்களில் இரு புறத்திலும் பெரிய அளவில் குவிந்து கிடக்கின்றன. இந்தக் குப்பைக் குவியல்கள் கடும் துர்நாற்றத்தை உண்டாக்குவதோடு, ஈக்கள், கொசுக்கள் போன்ற பூச்சிகளையும் ஈர்க்கின்றன. இதனால் மக்கள் மேலும் பல சுகாதார ஆபத்துகளை எதிர்கொள்ள வேண்டிய கட்டாயம் உருவாகியிருக்கிறது. இத்தகைய குப்பைகளை அகற்றுவது, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் உள்ளாட்சி அமைப்புகளுக்கும், தூய்மைத் துறைகளுக்கும் மிகப் பெரிய சவாலாக இருக்கின்றது.

வெள்ளம் ஓய்ந்து இன்றுடன் பன்னிரண்டு நாட்கள் கடந்தும், இந்தக் குப்பைகளை முழுமையாக அகற்றுவதில் அவர்கள் இன்னும் கடுமையான சிரமங்களை சந்தித்துக்கொண்டே பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தப் பகுதிகளில் வசிப்பவர்கள் எதிர்கொள்ளும் தொந்தரவு, துர்நாற்றம், குப்பைமலைகள் ஆகியவற்றை நேரில் கண்டவர்கள் இந்த உண்மையை உணர்ந்திருப்பீர்கள். நீங்கள் அனைவரும் பிரார்த்தனையில் இணைய வேண்டிய அவசியத் தருணம் இது. இங்குள்ள மக்கள் மீண்டும் தங்கள் வீடுகளுக்குத் திரும்பி, சுத்தமாகவும் ஆரோக்கியமாகவும் வாழ, நீங்கள் அனைவரும் மனமுவந்து பிரார்த்திப்பீர்கள் என்பதை நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

---

துயரத்தின் சில துண்டுகளை கலத்தில் கரைத்துப் பகிரும் நான்...



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

# நபவிய்யா அமைப்பின் சுத்தப்படுத்தும் களப்பணிகளும் அதன் சேவைகளும்







**(எம். ஆர். லுதுபுள்ளாஹ்)**

வெள்ள அனர்தத்தினால் பாதிக்கப்பட்ட வீடுகளையும் குறித்த மக்களின் மனங்களையும் வென்றெடுத்த நபவிய்யாவின் அமைப்பின் சுத்தப்படுத்தும் களப்பணிகள் உள்ளிட்ட அதன் சேவைகள் இலங்கையில் பேருவளையை தலைமையகமாக கொண்டு இயங்கும் காதிரிய்யதுன் நபவிய்யா தரீக்காவின் ஆன்மீக தலைவர் கண்ணியத்துக்குரிய அஷ்ஷெய்க்ஹ் அஹ்மத் இப்னு மொஹம்மத் ஹபிழஹூல்லாஹ் அவர்களின் வழிகாட்டலுடனும், ஆசீர்வாதத்துடனும், நாட்டின் நாளா பாகங்களிலும் பல்வேறு சமூகப்பணிகளை ஆற்றி வரும் நாட்டின் பல ஊர்களை மையமாக கொண்டு இயங்கிவரும் இலங்கை நபவிய்யா இஸ்லாமிய வாலிபர் சங்கத்தினூடாக கடந்த ஞாயிற்றுக்கிழமை வெள்ளத்தினால் கடுமையாக பாதிக்கப்பட்ட கம்பளை பகுதிக்கு அந்த அமைப்பை சேர்ந்த சுமார் ஆயிரம் பேர்கள் அளவில் அங்குள்ள வீடுகளை சுத்தப்படுத்தும் உதவிப்பணியில் ஈடுபட்டார்கள்.

கம்பளை நகர மையத்தில் அமையப்பெற்றுள்ள பெரிய பள்ளிவாசலின் ஒருங்கிணைப்புடன் மேற்கொண்ட மேற்படி வீடுகள் மற்றும் வீட்டு உபகரணங்களையும் சுத்தப்படுத்தும் ஹித்மத் பணிகள் பூரணமாகவும் , நேர்த்தியுடனும் ,சிறப்பாகவும் மேற்கொள்ளப்பட்டன.

பாதையை இடைமறித்து மலைபோல் காட்சியளித்த குப்பைகூழங்களை அகற்றுவதிலும், வீட்டு மின்சாதன பொருட்களை பரிசோதித்து அவற்றை பாவனைக்குந்த விதத்தில் திருத்தம் செய்வதிலும், வீடுகளில் உள்ள சேறுகள் அள்ளப்பட்டும், வீடுகள் சிறந்த முறையில் (Hi pressure Gun) மூலம் கழுவப்பட்டும், வீட்டு தளபாடங்கள், வீட்டுபகரணங்கள் கெமிகல் உதவி கொண்டு கழவப்பட்டும் மேற்படி சுத்தம்செய்யும் பணிகள் பூரணத்துவம் மிக்கதாக மேற்கொள்ளப்பட்டமை சிறப்பம்சமாகும்.

அங்கு எவ்வாறு வேலைகள் செய்யப்பட்டது என்பது தொடர்பில் குறித்த வீடுகளில் வசிப்போர் தெரிவிக்கும் கண்ணீர் மல்கவும் துஆக்களுடனும் செய்து தந்த உதவிக்கு நன்றி தெரிவிக்கும் பாங்கில் இருந்து நபவிய்யா அமைப்பினரின் சேவைகள் எந்தளவு தூரம் சிறப்பாக நடைபெற்றுள்ளது என்பதை விளங்கிக்கொள்ள முடியும்.

நம்பிக்கை நாணயத்துடனும், ஒழுக்க விழுமியங்களை பேணியும் தலைமைத்துவ கட்டுப்பாடுகளுடனும் நபவிய்யா சகோதரர்கள் நடந்து கொண்ட விதம் அனைவர்களையும் கவர்ந்திருந்ததுடன் மாற்றுமத சகோதரர்களினதும் பாராட்டுக்களையும் நல்லபிமாணத்தையும் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை நபவிய்யா இஸ்லாமிய அமைப்பின் இரண்டாம் கட்ட சுத்தம்படுத்தும் பணிகளுக்கான மற்றுமொரு நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை 13/12/2025 கம்பளை மற்றும் கெலி ஓயா பகுதிகளை மையப்படுத்தி நடைபெறவுள்ளதுடன் இதில் அந்த அமைப்பை சேர்ந்த சுமார் 1500 சகோதரர்கள் கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இலங்கையில் ஓர் ஆன்மீக தலைமைத்துவத்துடன் மிகப்பெருமளவிலான உறுப்பினர்களை கொண்டு மிகவும் சிறப்பாகவும் நேர்த்தியாகவும் வெற்றிகரமாகவும் அமைந்து காணப்படும் ஒரே அமைப்பு இலங்கை நபவிய்யா இஸ்லாமிய அமைப்பின் கூட்டமைப்பாகும் என்பதோடு இவர்கள் ஏற்கனவே மல்வானையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்ததினால் பாதிக்கப்பட்ட வீடுகளை சுத்தம் செய்து கொடுத்தது மாத்திரமன்றி வெல்லம்பிட்டி பகுதியிலும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பல வீடுகள் கழுவி சுத்தம் செய்து கொடுத்தனர்.

இது தவிர கஹட்டோ விட்டாவில் ஏற்பட்ட வெள்ளத்தின் போதும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு காலி நபவிய்யா அமைப்பினரின் அநுசரணையிலும் கஹட்டோ விட்ட நபவிய்யா அமைப்பின் ஒத்துழைப்போடும் சுமார் 2000 சமைத்த உணவு பகல் மற்றும் இரவு போசன பார்சல்களை வழங்கி உதவியமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

# அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டோருக்கு கஹட்டோவிட்ட மக்களின் உதவிக்கரம்!

(எம். ஆர். லுதுபுள்ளாஹ்)

தமது ஊரில் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளை பூர்த்தி செய்து கொடுத்தபின் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு நிவாரணப்பொருட்கள் சேகரித்து வழங்கியும்,தன்னார்வ தொண்டர் பணியாகவும் உதவிக்கரம் நீட்டிய மனிதநேயமிக்க கஹட்டோவிட்ட வாழ் மக்களின் உபகாரம்.

அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் , மண்சரிவு காரணமாக நாடளாவிய ரீதியிலும் பல்வேறு இடங்களிலும் பல்வேறு விதமாக மிகவும் மோசமான நிலையில் பல இடங்களும் வீடுகளும் , உடமைகளும் பாதிக்கப்பட்ட தோடு பல உயிர் இழப்புக்களையும் ஏற்படுத்தியது.

அந்த வகையில் அத்தனகல்ல ஆற்றுப்பெருக்கால் கஹட்டோவிட்டாவின் தாழ்நிலப்பகுதிகளும் இதன் காரணமாக வெள்ள அனர்த்தததினால் மிகவும் பாதிக்கப்பட்டது. தொடர்ந்தும் மூன்று நான்கு நாட்களாக குறித்த பாதிக்கப்பட்ட




மக்களுக்கு அத்தனகல்ல பிரதேச செயலகம் மற்றும் ஊரிலுள்ள பள்ளிவாசல்கள் மற்றும் சமூக சேவை அமைப்புக்கள் , தக்கியாக்கள், ஸாவியாக்கள் மற்றும் சமூக தொண்டு நிறுவனங்கள் , ஊர் மக்கள் , வெளிநாட்டில் வாழும் கஹட்டோவிட்ட சகோதரர்கள் ,தனவந்தர் கள்,வெளியூரை சேர்ந்த நிவாரண உதவிகள் என்பவை மூலம் இந்த அனர்த்தினால் பாதிக்கப்பட்ட கஹட்டோவிட்ட , ஓகடபொள, குரவலான போன்ற பகுதிகளில் பாதிக்கப்பட்ட சுமார் 160 குடும்பங்கள் இதன் மூலம் பயன்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதன் அடுத்த கட்டமாக எமதூரை விட கடுமையாக பாதிக்கப்பட்ட ஊர்களில் ஒன்றாகிய கெலி ஓயா நகரை மையப்படுத்தி அவர்களுக்கு தேவையான உலர் உணவு பொருட்கள், ஆடைகள், மற்றும் இதர , தண்ணீர் போத்தல்கள் மற்றும் தேவையான பிற பொருட்கள் அனைத்தும் சேகரித்து வழங்கும் முயற்சியில் கஹட்டோவிட்டா அல் பத்றியாவின் 2009 ஆம் ஆண்டு வகுப்பினர் களமிறங்கினார்கள்.

இந்த முயற்சிக்கு ஊர் மக்கள் பேராதரவு வழங்கியதோடு இவர்களுடன் அனைவரும் கைகோர்த்து இதனை வெற்றிகரமாக செய்வதற்கு ஊர் மக்கள் இவர்களுக்கு உதவி புரிந்தார்கள்.

அந்தவகையில் கடந்த 7 ஆம் திகதி ஊர் மக்களிடம் இருந்தும் பல்வேறு சமூக சேவை அமைப்புக்களிடமிருந்தும் வெளிநாட்டில் வாழும் உள்ளூர் சகோதரர்களிடமிருந்தும் பணமாகவும், பொருளாகவும் சேகரிக்கப்பட்ட பெருமளவான நிவாரணப்பொருட்கள் கெலி ஓயா பகுதி வாழ் மக்களுக்கு வழங்குவதற்காக அங்குள்ள பள்ளிவாசல் மற்றும் பொறுப்பாளர்களிடம் கையளிக்கப்பட்டது.

மேலும் ஊரில் இருந்து சுமார் 75 பேர்கள் அளவிலான இளைஞர்களை கொண்ட குழுவினர் இந்த நிவாரணப்பொருட்களோடு குறித்த பாதிக்கப்பட்ட இடங்களுக்கு சென்று வீடுகளை சுத்தம் செய்து கொடுக்கும் பணியிலும் ஈடுபட்டனர்.

இதன் இரண்டாம் கட்டமாக கெலி ஓயா பகுதிக்கு வீடுகளை சுத்தம் செய்யும் பொருட்கள் மற்றும் தேவையான உபகரணங்கள் அடங்கும் பொதி ஒன்று வழங்குவதற்கான ஏற்பாடுகள் தற்போது நடைபெற்று வருகின்றன . ரூபா 1000 பெறுமதியான 680 பார்சல்களை சேகரிக்கும் இந்த வேலைத்திட்டத்துக்கு தற்போது 450 பொதிகளுக்கான பங்கு முதல் சேகரிக்கப்பட்டுள்ளதோடு மிகுதி பங்குகளை வாங்கி ஒத்துழைக்குமாறும் ஏற்பாட்டு குழுவினர் கேட்டுக்கொள்கின்றனர்.

அத்தோடு இன்றிரவும் இந்த பொருட்களுடன் மற்றுமொரு சுத்தப்படுத்தல் பணிக்காக இளைஞர் குழுவொன்று கெலி ஓயா பகுதியை நோக்கி புறப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மொரகஹகந்த நீர்த்தேக்க வான் கதவுகளைத் திறக்குமாறு பொது மக்கள் வேண்டுகோள்

**(எம். எஸ். எம். மசாஹிம்)**

நாட்டில் தற்பொழுது இடம் பெற்றக்கொண்டிருக்கும் சீறற்ற காலநிலை காரணமாக மொரகஹ கந்த நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் வழமையான நீர் மட்டத்திற்கு வந்திருப்பதால் தற்பொழுது மேற்படி நீர்தேக்கத்தின் வான் கதவுகளை திறந்துவிடுமாறு பொது மக்கள் வேண்டிக்கொள்கின்றனர்.
எதிவரக்கூடிய சில தினங்களில் அதிக கணமழை பெய்யயிருப்பதாக வானிலை அவதான நிலையம் அறிவித்திருப்பதாலும், பெய்யக் கூடிய மழை காரணமாக மேற்படி நீர் தேக்கத்தின் நீர் மட்டம் அதிகரிக்கக்கூடிய வாய்ப்பு இருப்பதாலும் தற்போதைய நிலையில் மேற்படி நிர் தேக்கத்தின் வான் கதவுகளை திறந்துவிடுவது பொது மக்களின் பாதுகாப்புக்கு உகந்தது என பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.
கடந்த 29 ஆம் திகதி ஏற்பட்ட இயற்கை அனர்தத்தின் போது மொரகஹகந்த நீர் தேக்கத்தின் வான் திறக்கப்பட்டதால் பிரதான பாதையின் ஊடாக நிர்மாணிக்கப் பட்டுள்ள பாலம் உடைந்து போனதால் அப்பகுதியில் வெள்ளப்பெருக்கு அபாயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கும் பொதுமக்கள் இனிவரும் காலங்களில் ஏற்படும் மழை காராணமாக சிறமாமான நிலை ஏற்படக்கூடிய வாய்புக்கள் காணப்படுவதாக பொது மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.
இது சம்பந்தமாக மொரகஹகந்த நீர் தேக்கத்தின் பொறியியளாலர் சுசந்த பண்டார கருத்து தெரிவிக்கையில் தற்போதைய நிலையில் தன்னால் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்க முடியாவிட்டாலும் தற்போது பரகஹந்த நீர் தேக்கத்தின் நீர் மட்டம் நிறைந்து காணப்படு வதால் மேற்படி நீர்தேக்கத்தின் வான் கதவுகள் பணிபுரிய கூடிய அதிகாரியினால் திறக்கப்பட வேண்டும் என்றாலும் இப்பகுதி மக்களுக்கு எந்தவிதமான ஆபத்தான நிலைகள் ஏற்படாத வண்ணம் மொரகஹகந்த நீர் தேக்கத்தை முகாமைத்துவம் செய்துவருவதாகவும் எந்த சந்தர்பத்திலும் ஆபத்துகள் ஏற்படாதவண்ணம் பாதுகாப்பு சூழல் பலபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவிக்கின்றார்.




*வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப் பட்ட மாற்று மத சகோதரர்களுக்கான 1200 உணவு பொதிகளின் வினியோகத்தினை மாவனல்லை பிரதேச செயலகத்தின் வழிகாட்டுதலின் கீழ் , மஹவத்தை மஸ்ஜிதுல் ஜென்னா ஜும்ஆ பள்ளி வாசல் நிர்வாகமும், ஹிங்குலோயா ஜனாஸா நலன்புரி சங்க உறுப்பினர்களும் இணைந்து மேற்கொண்டது இங்கு காணலாம்.*

**(பாரா தாஹீர் மாவனல்லை செய்தியாளர்)**

## உலகின் சக்திவாய்ந்த பாஸ்போர்ட் கொண்ட நாடுகளின் பட்டியலில் தொடர்ந்து 7வது ஆண்டாக ஐக்கிய அரபு எமிரேட்ஸ் முதலிடம்

**(திருச்சி**
**எம். கே. ஷாகுல் ஹமீது)**

உலகின் சக்திவாய்ந்த பாஸ்போர்ட் கொண்ட நாடுகளின் பட்டியலில் தொடர்ந்து 7வது ஆண்டாக ஐக்கிய அரபு எமிரேட்ஸ் முதலிடத்தில் உள்ளது. இந்த பட்டியலில் இந்தியா 67வது இடத்திலும், இலங்கை 84வது இடத்திலும் உள்ளது.
உலகின் சக்திவாய்ந்த பாஸ்போர்ட் குறித்த பட்டியலை கனடாவை சேர்ந்த ஆர்ட்டன் கேப்பிடல் என்ற நிறுவனம் உலகின் சக்திவாய்ந்த பாஸ்போர்ட் கொண்ட நாடுகளின் பட்டியலை வெளியிட்டுள்ளது.
ஒரு நாட்டின் பாஸ்போர்ட் மூலம் எத்தனை நாடுகளுக்கு விசா இல்லாமல் செல்லலாம் என்பதன் அடிப்படையில் இது தீர்மானிக்கப் படுகிறது. பட்டியலில் தொடர்ந்து 7வது ஆண்டாக யுஏஇ முதலிடத்தில் உள்ளது.
இந்த பட்டியலில் இந்தியா 67வது இடத்தில் உள்ளது. ஐக்கிய அரபு எமிரேட்ஸ் பாஸ்போர்ட் மூலம் 179 நாடுகளுக்கு விசா இல்லாமல் கலாம். சிங்கப்பூர், ஸ்பெயின் ஆகியவை 2வது இடத்தில் உள்ளது. இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகள் சரிவைச் சந்தித்துள்ளன.
அண்டை நாடான இலங்கை 84வது இடத்திலும், பாகிஸ்தான் 91வது இடத்திலும் உள்ளது. உலகின் டாப் 10 சக்திவாய்ந்த பாஸ்போர்ட் கொண்ட நாடுகள் விபரம் பின்வருமாறு:
1. ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (AV,),
2. சிங்கப்பூர், ஸ்பெயின் 3. பெல்ஜியம், பிரான்ஸ், சுவீடன், ஜெர்மனி, நெதர்லாந்து, பின்லாந்து, லக்சம்பர்க், இத்தாலி, டென்மார்க், போர்ச்சுகல், சுவிட்சர்லாந்து, கிரீஸ், ஆஸ்திரியா, மலேசியா, நார்வே, அயர்லாந்து, தென் கொரியா, ஜப்பான்
4. போலந்து, ஸ்லோவேனியா, குரோஷியா, ஸ்லோவாக்கியா, ஹங்கேரி, எஸ்டோனியா
5. மால்டா, ருமேனியா, செக் குடியரசு, பல்கேரியா, லாட்வியா, நியூசிலாந்து
6. லிதுவேனியா, லிச்சென்ஸ்டீன், ஆஸ்திரேலியா, 7. சைப்ரஸ், ஐஸ்லாந்து, 8. யுனைடெட் கிங்டம், கனடா, 9. அமெரிக்கா,/10. மொனாக்கோ ஆகிய நாடுகள் முதல் பத்து இடத்தில் இடம் பெற்றுள்ளது.

## தமிழ் மொழியில் அறிக்கையிடுகின்ற ஊடகவியலாளர்களுக்கான விசேட செயலமர்வு

தமிழ் மொழியில் அறிக்கையிடுகின்ற ஊடகவியலாளர்களுக்கான விசேட செயலமர்வு எதிர்வரும் 2025.12.17ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 2.00 மணி வரை அரசாங்க தகவல் திணைக்களத்தின் புதிய கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.
எனவே இந்த கருத்தரங்கில் கலந்து கொள்ள விரும்பும் ஊடகவியலாளர்கள் உங்களுடைய விபரங்களை 0771909968 எனும் வட்ஸ்ஆப் இலக்கத்துக்கு அனுப்பி வைக்கவும்.

## வெள்ள நிவாரணப் பணிகளுக்காகக் கிடைத்த பணத்தில் முக அழகு செய்த தாயும் மகளும்

**- ஜா-எலவில் விசித்திர சம்பவம்**

**( ஐ. ஏ. காதிர் கான் )**

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட வீடுகளைச் சுத்தம் செய்வதற்காக, அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட 25 ரூபா நிதி உதவித் தொகை, ஜா-எல பிரதேசத்தில் சிறிய அளவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஒரு குடும்பத்திற்கும் கிடைத்துள்ளது.

அந்தக் குடும்பத்தில் இருந்த தாயும் மகளும், வீட்டைச் சுத்தம் செய்வதற்கு முன், தமக்குக் கிடைத்த பணத்தின் பெரும் பகுதியைப் பயன்படுத்தி, ஜா-எல பிரதேசத்தில் உள்ள ஒரு அழகு நிலையத்திலிருந்து (Beauty Parlour) முக அழகு (Facial) செய்துகொண்ட விசித்திர சம்பவம் தொடர்பான தகவல் வெளியாகியுள்ளது.

## வாழைச்சேனை கமநல சேவை பிரிவில் 19800 ஏக்கர் விவசாய நிலங்கள் வெள்ளத்தால் பாதிப்பு

**(எஸ்.எம்.எம்.முர்ஷித்)**

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர் மழை காரணமாக வாழைச்சேனை கமநல சேவை பிரிவில் 19800 ஏக்கர் விவசாய நிலங்கள் வெள்ள நீரினால் முற்று முழுதாக பாதிப்படைந் துள்ளதாக வாழைச்சேனை கமநல சேவை நிலைய கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.ஜெயகாந்தன் தெரிவித்தார்.
வாழைச்சேனை கமநல சேவை பிரிவில் 25 விவசாய அமைப்பு பிரிவில் 22225 ஏக்கர் வயல்கள்செய்யப்பட்டிருந்த போதும் கடந்த திங்கட்கிழமை (01) வரை 19800 ஏக்கர் விவசாய நிலங்கள் வெள்ள நீரினால் மூழ்கியுள்ளதாக விவசாய அமைப்புக்களால் அடையாளப்படுத்தப் பட்டுள்ளதாக வாழைச்சேனை கமநல சேவை நிலையம் தெரிவித்துள்ளது.

# இலங்கையை மீளக் கட்டியெழுப்பும் அரசின் முன்னுள்ள பணி







எம்.எஸ். அமீர் ஹுசைன்

இலங்கை வரலாற்றில் ஒருபோதும் இடம்பெற்றிராத அளவிற்கு ஏற்பட்ட அசாதாரண காலநிலை மற்றும் அதிகப்படியான மழை வீழ்ச்சி காரணமாக நாடு மிக மோசமான பாதிப்புக்களையும் இழப்புக்களையும் சந்தித்திருக்கின்றது. ஏற்பட்ட பாதிப்புக்களில் இருந்து நாட்டை மீள கட்டியெழுப்புவதற்காக 3100 கோடி (31 பில்லியன்) ரூபா அளவில் நிதி தேவைப்படுவதாக அரச அறிக்கைகள் கூறுகின்றன. தெற்கில் காலி, மாத்தறை, ஹம்பாந்தொட்டை தவிர்ந்த ஏனைய எல்லா மாவட்டங்களும் இந்த வழமைக்கு மாற்றமான அதிகப்படியான மழைவீழ்ச்சி (சீரற்ற காலநிலை) காரணமாக பாதிப்புக்களுக்குள்ளாகி இருக்கின்றன. அதனால் பாதிக்கப்பட்டவர்களது மொத்த எண்ணிக்கை 16 இலட்சத்து 14 ஆயிரத்து 790 பேர்களாவர். இவர்கள் 4,55,405 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் ஆவர். 1,300 வீடுகள் அளவில் முற்றாகவும் 44,556 வீடுகள் கட்டிடங்கள் பகுதியளவிலும் சேதமடைந்திருப்பதாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் இதுவரையில் பெற்றுக் கொள்ளப்பட்ட அறிக்கைகள் கூறுகின்றன.

அதே நேரம் இறப்புக்கள் 1200 யை தாண்டி இருக்கும் என்று மதிப்பீடுகள் தெரிவித்தாலும் உத்தியோகபூர்வ அறிக்கைகளின் படி இதுவரையில் இறந்தவர் களின் எண்ணிக்கை 670 என தெரிவிக்கப்படுவதோடு 350 பேர் காணாமல் போனவர்களாகவும் கருதப்படுகின்றது. பாதிப்பு ஏற்பட்ட சில பிரதேசங்களில் மீட்பு வேலைகள் இன்னும் தொடர்ந்தாலும் அதிகமான பகுதிகளில் பாரிய மண்சரிவு அனர்த்தம் ஏற்பட்ட பிரதேசங்களில் மீட்பு வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு மீட்பு பணிகள் நிறுத்தப்பட காரணம், ஏற்பட்ட மண் சரிவுகளின் கணம் கடுமையானதாக இருப்பதால் அத்தகைய இடங்களில் சேறும் சகதியுமாக இருப்பதோடு தொடர்ச்சியாக மலைப்பாங்கான பிரதேசங்களாக இருப்பதால் நீர் வடிந்தோடும் நிலை காணப்படுகின்றது. மீட்பு பணிகளில் உதவி செய்வதற்காக இந்தியா, பாகிஸ்தான் உட்பட பல நாடுகளில் இருந்து மோப்ப நாய்கள் சகிதம் மீட்பு பணியாளர்கள் வந்திருந்தாலும் பணி கடினமாக இருந்து வருவதால் இவ்வாறு கைவிடப்படல் நடந்திருக்கின்றன.

எவ்வாறாக இருந்தாலும் இந்த அனர்த்தம் தொடர்பாக கடந்த சில தினங்களாக அரசாங்கம் மீது சமூக ஊடகங்கள் மூலமும் அரச தரப்பினரால் எதிர்க்கட்சியினர் மீதும் சரமாரியாக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருகின்றதை அவதானிக்க முடிகின்றது. எதிர்க் கட்சியினர் அரசு மீது குற்றம் சுமத்தக் காரணம் ஏற்கனவே காலநிலை அவதான மத்திய நிலையம் இவ்வாறான மிக மோசமான ஒரு அனர்த்தத்திற்கு வழிவகுக்கக் கூடிய காலநிலை மாற்றம் ஏற்படலாம் என்று எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்தும் அதனை அரசாங்கம் கவனத்தில் எடுத்துக் கொள்ளாததால் இவ்வாறான மிக மோசமான பாதிப்புக்கள் ஏற்பட்டன. அன்றி அரசாங்கம் காலநிலை அவதானிப்பு எச்சரிக்கைகளை கவனத்தில் எடுத்து பாரிய அழிவுகளுக்கும் சேதங்களுக்கும் காரணமான நீர்த்தேக்கங்களின் நீர் மட்டத்தை முன்கூட்டியே குறைத்து தயார் நிலையில் இருந்திருந்தால் ஓரளவுக்கு சேதங்களை கட்டுப்பாட்டில் வைத்திருந்திருக்கலாம் என்ற குற்றச்சாட்டுக்களை சுமத்தி இருக்கின்றது.

ஆனாலும் இத்தகைய குற்றச்சாட்டுக்களை சம்பந்தப்பட்ட அரச தரப்பு மறுத்து இருக்கின்றது. எதிர்க்கட்சியினர் கண்மூடித்தனமான குற்றச்சாட்டுக்களை சுமத்தி நாடு எதிர்நோக்குகின்ற அனர்த்த நெருக்கடி நிலையை பயன்படுத்தி அரசியல் நடத்த முற்படுகின்றது என்று கடுமையான தொனியில் சீறிப் பாய்ந்து இருக்கின்றது. அவ்வாறே இத்தகைய குற்றச்சாட்டை மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதான பொறியியலாளர் தர்மதாசா என்பவரும் முற்றாக மறுத்து இருக்கின்றார். வெள்ளப் பெருக்குக்கு முன்னர் கடந்த 2025.11.27 ஆம் திகதி கொத்மலை நீர்த்தேக்கம் வான் மட்டத்தை அடைய 41 அடி வெற்றிடத்துடன் காணப்பட்டது. வான் மட்டத்தை அடையாத நீர்த்தேக்கம் ஒன்றில் இருந்து நீரை விடுவிக்க முடியாது. அத்துடன் வெள்ளப் பெருக்குக்கு நீர்த்தேக்கங்கள் காரணமாக அமைய வில்லை என்றும் அந்த அதிகாரி சுட்டிக்காட்டி இருக்கின்றார்.

எவ்வாறோ அனர்த்தம் நிகழ்ந்து பாரிய இழப்புக்களை கொண்டுவரும் அளவிற்கு மிக மோசமான சேதங்கள் ஏற்பட்டுள்ளன. ஏனைய இழப்புக்களை போன்றே நெடுஞ்சாலைகள் அதிகார சபைக்கு சொந்தமான 225 பாதைகள் சேதடைந்துள்ளன. மலை நாட்டிற்கான புகையிரத பாதைகளும் வெள்ளத்தில் அள்ளுண்டு கடந்த சுனாமி பேரலை காலத்தை விட மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன. 16 பாலங்கள் வரையில் உடைந்துள்ளன. அத்துடன் அனர்த்தத்தால் சேதமடைந்த வீடுகள், தொழிற்சாலைகள், கைத்தொழில் நிலையங்கள், வர்த்தக வாணிப நிலையங்கள் என்று மக்களது வாழ்வாதாரத்துடன் சம்பந்தப்பட்ட பாதிப்புக்கள் உள்ளன. இன்னும் அதிகமான பகுதிகளுக்கு சீரான மின் விநியோகம், நீர் விநியோகம், தொலைத் தொடர்பு சேவைகள் சரி செய்யப்பட வில்லை. நீர் மற்றும் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு மிக அவசரமான மின்வாரிய இணைப்புக்களை வழங்கவும் பாலங்கள், புகையிரத பாதைகளை அவசரமாக திருத்தி மக்களது அன்றாட வாழ்க்கையை வழமை நிலைக்கு கொண்டுவர நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதி அதிகாரிகளை பணித்துள்ளார்.

ஆனாலும் பொருளாதார ரீதியாக விழுந்தவர்கள் சதாவும் கீழே விழுந்தவர்களாக இல்லாது அவர்களது பாதிப்புக்களின் அளவை அறிந்து மீண்டு எழுவதற்கு ஏற்ற வகையில் நிவாரண உதவிகள் வழங்கப்பட வேண்டும். இந்நிலையில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்காக இலங்கையை மீள கட்டியெழுப்புவது என்ற அடிப்படையில் அதற்காக கருமமாற்ற வென ஒரு செயலணியை நியமித்திருப்பதோடு நிதியம் ஒன்றை ஆரம்பிக்கவும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கின்றது. இந்த குழுவுக்கு தொழில் அமைச்சரும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சருமான கலாநிதி அனில் ஜயந்த பெர்னான்டோவை தலைவராக நியமித்துள்ளார். மேலும் 10 பேர் உள்ளடங்களாக 11 பேர்களை கொண்ட குழுவாக இந்த சுநடிரடைனபெ ளுசை டுயமெய நிதியம் அமைகின்றது.

இந்த நிதியம் பாதிப்புக்களை மதிப்பீடு செய்வதற்கு அமைவாக தேவையான நிதியை திரட்டுவதும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகளை வழங்குவதும் என்ற பொறுப்புக்களை நிறைவேற்ற இருக்கின்றது. இந்த குழுவில் அரச அதிகாரிகளோடு பல தொழிலதிபர்களும் உள்ளடங்குகின்றனர். எவ்வாறாயினும் பாதிக்கப்பட்ட மக்கள் என்று மதிப்பீடு செய்யப்பட்டு முகாம்களில் தங்கி இருக்கின்ற மக்கள் மாதக் கணக்கில் முகாங்களை இருப்பிடமாகக் கொண்டவர்கள் என்ற அவல வாழ்க்கையை அனுபவிக்கக்கூடாது. விரைவாக அத்தகையவர்களது பாதிப்புக் களுக்கு ஏற்ப நஷ்டஈடுகள் வழங்கப்பட்டு பழைய நிலைக்கு வருவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். ஏற்கனவே சுனாமி பேரலை அனர்த்தம் ஏற்பட்ட போது பாதிக்கப்பட்ட மக்கள் அனுபவித்த துயரங்கள் உரிய முறையில் தீர்க்கப்படவில்லை. அதேபோன்றதொரு நிலை இந்த வெள்ள, மண்சரிவு பாதிப்புக்களுக்கு உள்ளானவர்களுக்கு ஏற்படக் கூடாது.



நிலைமை இவ்வாறிருக்க கடந்த சில தினங்களாக அனர்த்தத்தின் பின்னர் சமூக வலைத்தளங்கள் அல்லது இணையத் தளங்கள் மூலம் அரசாங்கத்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் விதமாகவும் ஜனாதிபதிக்கு களங்கம் ஏற்படுத்தும் விதத்திலும், பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டு மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்திய 56 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்கள் தொடர்பாக குற்றத்தடுப்பு திணைக்கள அதிகாரிகள் விரிவான விசாரணைகளை மேற்கொண்டு சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பாக கவனம் செலுத்தி வருகின்றனர். இத்தகையவர்களுக்கு எதிராக பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் அரச அவதானம் செலுத்தப்பட்டிருக்கின்றது. இவ்விடயம் தொடர்பாக 2025.12.02 ஆம் திகதி நடைபெற்ற கூட்டம் ஒன்றின் பின்னர் இவ்வாறு பொய்ப் பிரச்சாரம் மேற்கொண்டவர்களுக்கு எதிராக அவசரகால சட்ட ஒழுங்கு விதிகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சர்

தொடர்ச்சி 6ம் பக்கம்

### 5ம் பக்க தொடர்ச்சி

சட்டத்தரணி சுனில் வடகல பொலீஸ் பொறுப்பதிகாரிகளை கோரி இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

அத்துடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களை மதிப்பீடு செய்து அவரவர் இழப்புக்களுக்கு ஏற்ப ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கப்பட வேண்டிய இழப்பீட்டு தொகை தொடர்பாக ஜனாதிபதி பெக்கேஜ் ஒன்றையும் அறிவித்துள்ளார். வீடுகள் முற்றாக அழிந்திருந்தால் 50 இலட்சம் ரூபாவும் காணியும் வீடுமாக வெள்ளம் மண்சரிவால் நாசமாகி இருந்தால் 01 கோடி ரூபா என்றும் காணியும் இல்லாமல் வீடும் இல்லாமல் அனைத்தையும் இழந்தவர்களாக நிர்க்கதிக்கு உள்ளாகி இருந்தால் 01 கோடி 50 இலட்சம் ரூபா வரையில் ஜனாதிபதி இழப்பீடுகள் பற்றி அறிவித்துள்ளார். இந்த இழப்பீடுகளை 2025 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கி முடிக்கவும் அதிகாரிகள் வலியுறுத்தப்பட்டுள்ளனர்.

எவ்வாறோ வெள்ளம், மண்சரிவு, புயல் காற்று, கற்பாறைகள் சரிவு காரணமாக ஏற்பட்ட வாழ்வாதார இழப்புக்களை ஈடுசெய்ய துரித நடவடிக்கை அவசியமாகின்றது. வெள்ளத்தால் மூழ்கிய நகரங்களில் அன்றாடம் தமது குடும்ப பொருளாதார சுமையை இறக்க தேவையான வாழ்வாதார உழைப்பை செய்து வந்த மக்கள் தொழில்களை இழந்து, வருமானத்தை இழந்து நடுத்தெருவுக்கு வந்துவிட்டனர். விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளன. பல ஆயிரக்கணக்கிலான ஹெக்டேயர் விவசாய நிலங்கள், பயிர்கள் அழிந்து நாசமாகிவிட்டன. கம்பளை, கெலிஓயா, கழுகமுவ, தெல்தொட்டை, நுவரெலியா, பதுளை உட்பட நாட்டின் பல பிரதேசங்களில் வர்த்தக, வியாபார நிலையங்கள் முற்றாக வெள்ளத்தில் மூழ்கியதால் சிறிய மற்றும் பெரிய அளவிலான வர்த்தகர்கள், வியாபாரிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

முச்சக்கர வண்டி ஓட்டியவர்கள் அவர்களது முச்சக்கர வண்டிகள் பாதிக்கப்பட்ட நிலையில் தொழில்களை இழந்து தவிக்கின்றனர். கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டவர்களது கால்நடைகள் அழிந்துள்ளன. இவ்வாறாக பலதரப்பட்ட தொழில்களிலும் ஈடுபட்டவர்களுக்கு பாரிய இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இந்நிலையில் தேசிய சர்வதேச நிவாரண உதவிகளும் குவிந்த வண்ணம் உள்ளன. தனிப்பட்ட முறையிலும் தொண்டு நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் நிவாரண உதவிகளையும் வழங்கி வருகின்றன. இத்தகைய உதவிகளை முகாமைத்துவம் செய்யும் ஊர் பள்ளிவாசல்கள், பிரதேச செயலக அலுவலகங்கள், மதஸ்தலங்கள், சமூக அமைப்புக்கள் கிடைக்கக்கூடிய உதவிகளை சரியான முறையில் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் கண்டு முறையாக நீதமான முறையில் உதவிகளை வழங்க வேண்டும். மீள் கட்டுமானம், இழந்த தொழில்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கான உதவிகள் என்று அனைத்தையும் பாரபட்சமற்ற முறையில் முழுமையாக வழங்க வேண்டும்.

நிவாரண உதவிகளில் அரசியல், கட்சி, இன , மத பாரபட்சங்கள் இடம்பெறக்கூடாது. சில மத ஸ்தலங்களில் மக்கள் கொண்டு போய் ஒப்படைத்த நிவாரண பொருட்கள் சரியான முறையில் தேவை உடையவர்களுக்கு விநியோகிக்கப் படாமல் ஆங்காங்கே குவிந்து காணப்படுகின்றன. அவற்றுள் இருக்கும் உலர் உணவு மற்றும் நிவாரண பொருட்கள் காலாவதியாகி பாவனைக்கு உதவாத நிலை ஏற்பட்டு பின்னர் குழியில் கொட்டும் நிலை வராமல் கண்காணிப்பு செய்யப்பட வேண்டும். எவ்வாறோ கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் ஏற்பட்ட சுனாமி பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் மீண்டெழுவதற்கு நீண்ட காலம் பிடித்தது. உரிய முறையில் இழப்பீடுகள் வழங்கப்படவில்லை. நிவாரணங்கள் பகிரப்படவில்லை. அதுபோன்றதொரு நிலை இந்த வெள்ள மற்றும் மண்சரிவு பாதிப்புக்குள்ளான மக்களுக்கு ஏற்படக் கூடாது.

உதாரணத்திற்கு சொல்லப்போனால் மத்திய மாகாணத்தில் கெலிஓயா நகரத்தில் மாத்திரம் வெள்ளம் காரணமாக 750 கடைகள் அளவில் முற்றாக பாதிப்புக்குள்ளாகி அவற்றின் உரிமையாளர்கள் பாரிய இழப்புக்களை சந்தித்துள்ளனர். அதே நேரம் கெலிஓயா கழுகமுவ கிராமத்தில் 1100 வீடுகள் அளவில் வெள்ளம் காரணமாக முற்றாக சேதமடைந்து மக்கள் நிர்க்கதிக்கு உள்ளாகி இருப்பதாக அங்கிருந்து வரும் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறே கம்பளை, நுவரெலியா உட்பட பல பிரதேசங்களில் வர்த்தகர்கள், வியாபாரிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். இத்தகையவர்கள் அனைவருக்கும் போதுமான நஷ்டஈடுகள் வழங்கப்பட்டு அவர்கள் மீண்டும் சொந்தக்காலில் எழுந்து நிற்கும் நிலை உருவாக்கப்பட வேண்டும். வெள்ளத்தின் பின்னரான மீள் கட்டுமானம் இவ்வாறு முறையாக நடக்கின்றது என்பதை உறுதிப்படுத்த வேண்டியது பொறுப்பான அதிகாரிகளதும் கடமையாகும்.

















# துயரத்தில் வாடும் இலங்கையர்களுக்கு குவைத் தலைவர்கள் இரங்கல்

குவைத் நாட்டின் தலைவர்கள் திட்வா புயல் தாக்கத்தினால் துயரத்தில் வாடும் இலங்கை மக்களுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்தனர்.

இலங்கையைத் தாக்கிய டித்வா எனும் சூறாவளியால் மதிப்பு மிக்க உயிர்களையும், உடமை களையும் இழந்த செய்தி அறிந்து நாம் மிகவும் கவலையடைந்து ள்ளோம், அவற்றை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்வதோடு பாதிக்கப்பட்ட வர்கள் மற்றும் காயமடைந்தவர்கள் விரைவில் குணமடையவும், அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட



பகுதிகளை மீண்டும் கட்டியெழுப் பவும் எமது மனமார்ந்த பிரார்த்தனைகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு குவைத் நாட்டின் அரசர், பட்டத்து இளவரசர், மற்றும் பிரதமர் இரங்கல் கடிதங்களை இலங்கை ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் அனுப்பிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

# பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் சஜித் பிரேமதாச சந்திப்பு



பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பங்களாதேஷ் உயர்ஸ்தானிகரைச் சந்தித்தார்.

டித்வா சூறாவளிப் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுக்கும் நோக்கில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இலங்கைக்கான பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் அந்தலிப் எலியாஸ் (Andalib Elias) அவர்களை இன்று (10) கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் சந்தித்தார்.

பங்களாதேஷுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால பரஸ்பர நட்புறவை மேலும் மேம்படுத்திக் கொள்ளும் முகமாக இடம்பெற்ற இந்த சந்திப்பில், இலங்கை எதிர் கொண்ட சகல இக்கட்டான தருணங்களிலும் பங்களாதேஷ் நமது நாட்டோடு நெருக்கமாக செயற்பட்டமைக்கு ஒட்டுமொத்த இலங்கையர்களின் சார்பாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இதன்போது தனது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்.

இந்த இக்கட்டான நேரத்தில், ஒரு நாடாக நாம் மீண்டும் எழுவதற்குத் தேவையான பக்க பலத்தைப் பெற்றுத் தருமாறும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் ஆண்டலிப் எலியாஸிடம் கேட்டுக் கொண்டார்.

# வெள்ளவத்தை ஜும்ஆ பள்ளிவாசலில் நடைபெற்ற அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான விசேட துஆப் பிரார்த்தனை





2025 டிசம்பர் 09 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் வெள்ளவத்தை ஜும்ஆ பள்ளி வாசலில் நடைபெற்ற இந்த விசேட பிரார்த்தனை நிகழ்வில், மத மற்றும் கலாசார அலுவல்கள் பிரதியமைச்சர் முனீர் முளப்பர், பிரதி சபாநாயகர் வைத்தியர் ரிஸ்வி சாலி, புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி குமாரி உள்ளிட்ட அமைச்சின் அதிகாரிகள் மற்றும் முஸ்லிம் சமய, கலாசார பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திரு. எம்.எஸ்.எம். நவாஸ் ஆகியோருடன் பெருந்திரளான



பக்தர்களும் கலந்துகொண்டனர். பிரதான உரையை அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் தலைவர் அஷ்-ஷைக் ரிஸ்வி முப்தி மௌலவி நிகழ்த்தினார். இதன் போது, இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மன தைரியத்தையும் சுகத்தையும் வேண்டி பிரார்த்திக்கப்பட்டதுடன், காணாமல் போனவர்கள் மற்றும் உயிரிழந்த அனைவரையும் நினைவுகூரும் நிகழ்வும் இடம்பெற்றது.



வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட அனுராதபுரம் சிறைச்சாலைக்கு அனுராதபுரம் ஜும்மா பெரிய பள்ளிவாசல் நிர்வாகம் ஒரு தொகை நிவாரணப் பொருட்களை வழங்கியுள்ளது.

**(எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம்)**

# Rebuilding sri Lanka நிதியத்துக்கு மேமன் சங்கம் நன்கொடை



டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் அரசாங்கத்தின் 'Rebuilding Sri Lanka' நிதியத்திற்கு Memon Association of Sri Lanka சங்கம் 20 மில்லியன் ரூபாவை நன்கொடையாக வழங்கியது. குறித்த காசோலையை, அதன் தலைவர் Abdul Razzle Abdul Sattar இன்று (11) பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத் குமாநாயக்கவிடம் கையளித்தார்.

அந்த சங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி, Mohamed Abdul Hussain, ஆழூாயஅநன ஐளஅail Dawood ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# கண்டி மாவட்ட களப் பணிகளில் ஹக்கீம், அதாவுல்லா, ஹிஸ்புல்லாஹ்

கண்டி மாவட்டத்தில் வெள்ளத்தினாலும், மண் சரிவுகளாலும் அதிகம் பாதிக்கப்பட்ட கம்பளை மற்றும் சூழவுள்ள கிராமங்களிலும், பிரதேசங்களிலும் துப்புரவு ,மற்றும் சுத்திகரிப்பு பணிகள் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் அவர்களின் முன்னெடுப்பில் தொடர்ந்து நேற்றும் நடைபெற்றது.

இந்நிலையில் இக் களப் பணிகளைப் பற்றிக் கலந்துரை யாடுவதற்காக அவரது மஹகந்த வாசலத்திற்கு வருகை தந்த தேசிய காங்கிரஸின் தலைவர் ,அக்கரைப்பற்று மாநகர சபை மேயர்.ஏ.எல். அதாவுல்லாஹ், மற்றும் மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் ,அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினர்கள் , அதன் ஆணையாளர் மாற்றும் முக்கியஸ்தர்கள் அங்கிருந்து





இன்றைய நாளின் சுத்திகரிப்பு மற்றும்பணிகளுக்காகவும், கம்பளை நகர சபையில் நடைபெற்ற அது தொடர்பான ஊடக மாநாட்டிலும் பங்குபற்றச் சென்றனர்.

## வாசிப்பீராக! 36



பிஸ்தாமி அஹமத்

# வளரிளம் தலைமுறையினரிடம் ஏற்பட்டு வரும் வாசிப்பு வீழ்ச்சி

எந்த ஒரு சமூகம் தரமான இளன் தலைமுறையை சுமந்திருக்குமோ அந்த சமூகம் தலை நிமிர்ந்து வாழும். அறிவும் உணர்வும் கலந்து போசிக்கப்பட்ட உருவாக்கப்பட்ட இளைஞர்களால் தான் சமூக மாற்றங்கள் கூட சாத்தியமாகும். இந்த இரண்டும் கலந்த உருவாக்க பணிகள் புறந்தள்ள படுகின்ற சந்தர்ப்பத்தில் தான் இளைஞர்கள் வழி கெடுகின்றனர் இளைஞர்கள் வழி கெடுக்கப்பட்ட நிலையில் அந்த சமூகங்களுக்கு அடுத்தடுத்து ஒவ்வொரு நிமிடமும் சாவு மணி அடிக்கப்படும். இளைஞர்களை வழிப்படுத்துகின்ற நெறிப்படுத்துகின்ற சமூக கடப்பாட்டை சமூகத்தின் சமய சன்மார்க்க தலைமைகள் பொறுப்பாளர்கள் தலையில் சுமந்து முன்கொண்டு செல்ல வேண்டும்.

இந்த அரும்பெரும் காத்திரமான பணியை செய்ய தவறுகின்ற பட்சத்தில் சமூக ஊடக பாவனையிலும் போதை பொருள் போன்ற மோசமான செயற்பாடுகளிலும் இளம் தலைமுறை மிக சுலபமாக விடுவதோடு சுயமாக வீழ்ந்து கொள்வதற்கான வாயில்களும் திறக்கப்படும் என்பதனை மறந்து விடக்கூடாது.

21ம் நூற்றாண்டு தலைமுறை முழுக்க முழுக்க தம்மை இணைய யுகத்தில் மூழ்கடித்துக் கொண்டிருப்பதன் காரணமாக அவர்களுடைய நடை உடை பாவனை நடத்தை போக்கு மனப்பாங்கு எதிர்பார்ப்பு ஆசைகள் பொழுதுபோக்கு சார்ந்த விடயங்கள் அனைத்துமே வேடிக்கை வினோத களியாட்ட உலகத்தில் தான் அவர்களை கொண்டு சேர்த்திருக்கின்றது. தவிர அவர்களுக்கு சிந்தனை சார்ந்த வகையில் தம்முடைய பொழுதுபோக்கை அமைத்துக் கொள்ளக்கூடிய வழிகாட்டல்களை குறைவாகவே வழங்குகின்றது என்று சொல்லும் அளவு சமூக ஊடக பாவனையும் அதன் பாலான ஈர்ப்பும் விளம்பர மோகமும் கவர்ச்சியும் பெருகி இருப்பதை இலகுவில் வசதியாக மறந்துவிட முடியாது.

இன்றைய நவீன உலகம் மிகப் பெரிய தொழில் நுட்ப ரீதியான பாய்ச்சல்களை முன்னோக்கிய தாவல்களை மாற்றங்களை சடுதியாக ஏற்படுத்தி வருகின்ற

கூட மிக குறைந்தளவு அடைவு மட்டங்களையே அவர்கள் பாடசாலைகளில் பரீட்சைகளிலே வெளிப்படுத்தி வருவது எந்தளவு தூ ரம் இணையத்திற்கும் சமூக ஊடகங்களுக்கும் திறன் பேசி களுக்கும் அடிமைப்பட்டிருக்கின்றனர் என்பதனை தேசிய சர்வதேச ரீதியான பரந்துபட்ட ஆய்வுகள் புள்ளி விபரங்கள் முன்வைக்கின்றன.

கடந்த இரண்டு தசாப்தங்களில் பரவலாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் ஒப்பீட்டளவில் முன்னரை விட 40 வீதம் வாசிப்பு வீதம் குறைந்து இருப்பதனை இந்த ஆய்வுகள் முன்வைக்கின்றன.

குறிப்பாக பொழுது போக்கு

அவர்களுடைய சமய பாட விடயங்களிலும் இத்தகைய பின்னடைவுகளை கூர்ந்து அவதானிக்க முடிகிறது.

மாணவர்களுடைய வாசிப்பு நிலையிலே பலவீனம் பின்னடைவு மந்த நிலை காணப்படுவதால் குறிப்பிட்ட விடயங்களை கிரகித்துக் உழஅிசநாநளெழைெ கொள்வது உள்வாங்கிக் கொள்வது போன்றவை கூட சிக்கல் தன்மை வாய்ந்ததாக உள்ளது

திறன்பேசிகளின் அழடிடைந ளஉசநநெ யனனளைஉவழைெ திரைக்கு முன்னால் செலவிடப்படுகின்ற நேரத்தை வஐஅந காலத்தை பண விரயத்தை அழநெல தவிர்த்து அவற்றை அறிவு சார்ந்த மேம்பாட்டுக்கும் விருத்திக்கும்

சிதறல் மறதி அவர்களை வெகுவாக பாதித்திருக்கின்றது.

வாசிப்பு தருகின்ற சுவை சுகம் போன்றவற்றை அவர்கள் இணைய விளையாட்டுக்களில் இணைய தளங்களில் மாறி மாறி உலா வருவதில் புதிய நண்பர்களை சக பாடிகளைத் தேடிக் கொள்வதில் தான் செலவிடுகின்றனர்

இதிலும் குறிப்பாக யுவதிகளை விடவும் இளைஞர்கள் வாசிப்பை விட்டும் விலகிச் சென்று இருக்கின்றனர். ஒப்பீட்டளவில் சர்வதேச ரீதியாக நோக்கின் ஆண்களை விட பெண்கள் ஓரளவு வாசிப்பில் ஈடுபாடு காட்டி வருவதும் கண்கூடு.

சநயனளைப நதெழலஅநவெ எனப்படும் வாசிப்பின் சுகானுபவத்தை தொலைத்த

போதிலும் வாசிப்பு உலகை விட்டும் தொலைதூர தத்துக்கு வளரிலும் தலைமுறையை விரட்டி வைத்துள்ளது. புத்தகங்களுக்கும் அவர்களுக்கும் வாசிப்பும் கலந்துரையாடல்களுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லாதவர்களாக தொடர் பரிபட்டவர்களாகவே இளம் தலைமுறையினர் தமது வாழ்வை கழித்து வருகின்றனர் களியாட்டமே அவர்களது ஏகபோக இலக்காக மாறி வருகிறது மாற்றப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இருந்த சுய கற்றல் சுய வாசிப்பு சுய தேடல் எதுவுமே இப்பொழுது இணைய வசதியை பயன்படுத்துகின்ற தலைமுறைக்கு இல்லவே இல்லை. அவர்கள் இணைய விளையாட்டுகளுக்கும் பொழுதுபோக்கு கேளிக்கை சார் அம்சங்களுக்கும் தான் தம்மை முழுமையாக ஈடுபடுத்தி வருவதை காணக் கூடியதாக இருக்கின்றது.

பொதுவாக அவர்களுடைய தாய்மொழிப் பாடங்களிலும் அதேபோல பின்பற்றுகின்ற சமய பாடங்களிலும்

நோக்கில் மேற்கொள்ளப்பட்ட வாசிப்பு டநளைரசந வஐஅந சநயனளைப யஉவளைவைல நிலமை கூட கீழ் இறங்கி உள்ளதை னநஉசநயளநன அவதானிக்கலாம்.

அதிகமாக வாசிக்கக் கூடியவர்கள் அதிக காலம் மன ஆரோக்கியத்தோடு

உளவளம் நிறைந்தவர்களாக திடகாத்திரமாக வாழ்வார்கள். வாழ்க்கை சோலிகள் சிக்கல்கள் சவால்களை எல்லாம் வென்றெடுக்கக்கூடிய உள்ளார்ந்த ஆற்றல் மன வலிமை தன்னம்பிக்கை போன்றன அவர்களுக்குள் உருவாகும். பிரச்சினைகளை தீர்க்கும் திறன் சமயோசிதமான சாமர்த்தியமான பண்புகள் குழுவாக இருந்து செயற்படல் தலைமைக்கு கட்டுப்படல் கூட்டாக செயற்படல் போன்ற திறன்கள் வாசிப்புக் கூடாக நடைமுறைப்படுத்த வழியமைப்பதனையும் காணலாம்

மாணவர்களது முதல் மொழி தாய்மொழி விடயத்தில் கூட இத்தகைய கீழிறங்கு நிலை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அதேபோல

ஆய்வுகளுக்கும் எதிர்கால கல்விசார் நடவடிக்கைகளுக்கும் ஆக்கபூர்வமான விடயங்களுக்கும் முதலீடு செய்தால் அவை பயன் தரக்கூடியதாக இருக்கும்.

ளுஉசநநெ யனனளைஉவழைெ

கணினி திரைக்கும் திறன்பேசிகளின் திரைக்கும் முழுமையாக அடிமைப்பட்டு இருப்பதால் அவர்கள் சமூக ஊடக பாவணையில் தம்முடைய முழு நேரத்தையும் செலவிட்டு இன்பத்தை அங்கு தேடி வருவதால் அவர்களது வாசிப்பு உணர்வு மங்கிப் போய் உள்ளது குறைந்த பட்சம் தாம் அடிமைப்பட்டு இருக்கின்ற அந்த திறன் பேசிகளின் திரைக்கூடாக

னுபைவையட சுநயனளைப முறைமைக்காவது அவர்கள் தம்மை பழக்கிக் கொள்ள தயாராக இல்லை. இத்தகைய தொடு திரைக்கு அடிமையாகின்ற மனநிலை காரணமாக அவர்களுடைய மானசீக ஆரோக்கியம் சீர்கெட்டு இருக்கின்றது. ஒரு விடயத்தில் முழுமையாக கவனத்தை செலுத்த முடியாத கவனச்

தலைமுறையினராகவே இந்த தலைமுறையை நோக்க வேண்டி இருக்கின்றது

பத்திரிகைகள் புத்தகங்கள், நாவல்கள் என எதிலுமே ஈடுபாடு அற்றவர்களாகவே இந்த தலைமுறை உருவாகி உருமாற்றப்பட்டு இருக்கின்றது.

வாசிப்பை பொழுதுபோக்குக்கு அப்பால் தமது அறிவை திறனை மனப்பாங்குகளை நடத்தைகளை மாற்றிக் கொள்வதற்காக பயன்படுத்த முன் வராத பட்சத்தில் கல்வியும் இடை நடுவே கைவிடப்படுவதை காணக் கூடியதாக உள்ளது. வாசிப்பற்ற வாழ்க்கையின் காரணமாக வாழ்க்கை நீடித்த கல்வியை நோக்கி இந்த தலைமுறையை நகர்த்த சிரமப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

வாசிப்பை நோக்கி இந்த தலைமுறையை எப்பொழுது மூலவும் அழைத்து வந்து நேரத்தை கனகச்சிதமான முறையில் பயன்படுத்த ஊக்குவிப்போமோ அன்று தான் எமது சமூகம் மீள எழுந்து தலைநிமிரும் என்பது மறுதலிக்க முடியாத கசப்பான உண்மை என்று கூறலாம்.

## ஒத்திவைக்கப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கடுமையான சூறாவளி பேரழிவு மற்றும் நாடு முழுவதும் நடைபெற்று வரும் மீட்பு முயற்சிகளைக் கருத்தில் கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகர சபை மைதானம், விகாரமஹாதேவி பூங்கா மற்றும் அதனை சுற்றியுள்ள பிரதான வீதிகள் வழியாக நடைபெறவிருந்த இந்த நிகழ்வு, பொது, தனியார் துறைகளின் பங்கேற்புடன் நான்கு மண்டலங்களைக் கொண்ட ஒரு பெரிய அளவிலான தேசிய கொண்டாட்டமாக வடிவமைக்கப்பட்டது.

சமூகங்களிடையே புரிந்துணர்வை வளர்ப்பதற்கும், மிகவும் இணக்கமான இலங்கையை உருவாக்குவதற்கும், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சர் என்ற வகையில், ஜனாதிபதியால் 2025 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட உரையில் இது முன்மொழியப்பட்டது.

இலங்கையின் பல்லின கலாச்சார அடையாளத்தை எடுத்துக்காட்டும் வகையில் வடிவமைக்கப்பட்ட இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்யும் பொறுப்பு புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டது.

மாவட்ட அளவிலான உணவு கலாச்சாரங்கள், பாரம்பரிய கலைகள், உள்ளூர் தொழில்களின் கண்காட்சிகள், விற்பனை நிலையங்கள் மற்றும் புதிய தயாரிப்பு வாய்ப்புகளை அறிமுகப்படுத்துதல் ஆகியவை திட்டங்களில் அடங்கும்.

திட்டத்தை தொடர கடந்த ஒக்டோபரில் அமைச்சரவை ஒப்புதல் வழங்கப்பட்டது.

எனினும், ஆயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்துள்ள நிலையில், முக்கியமான உள்கட்டமைப்பு சேதமடைந்துள்ள நிலையில், டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட பல மாவட்டங்களில் அவசர சேவைகள் தொடர்ந்து செயல்பட்டு வரும் நிலையில், நாடு தழுவிய கலாச்சார விழாவை நடத்துவது பொருத்தமானதல்ல என்று அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

நிலைமை சீராகி, பேரிடர் மீட்பு நடவடிக்கைகள் சமாளிக்கக்கூடிய கட்டத்தை அடைந்ததும், 'இலங்கை தினம்' திட்டத்திற்கான புதிய திகதிகள் அறிவிக்கப்படும்.

# வெள்ளத்தில் தொலைந்த காணி ஏனைய ஆவணங்களை மீளப் பெறுவது எப்படி?

வெள்ளத்தில் தொலைந்த உங்கள் காணி ஆவணங்கள் (உறுதி, அளிப்பு பத்திரம்) கவலை வேண்டாம்!

மீளப் பெறுவது எப்படி? (சட்டரீதியான முழு வழிகாட்டி...!

பாதிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான உறவுகளுக்காக இந்தத் தகவலை ளுhயசந செய்யுங்கள்! ஒரு நொடியில் உதவி செய்யுங்கள்!

இழந்தது காணி ஆவணம் அல்ல் எதிர்காலத்தின் நம்பிக்கை!

அன்பானவர்களே...! வீடு, வாசல், உடமைகளை வெள்ளம் சூறையாடியதோடு, உங்களின் எதிர்காலத்தை உறுதி செய்யும் காணி உறுதி, வரைபடம் (Pடயn) போன்ற விலைமதிப்பற்ற ஆவணங்களையும் அது எடுத்துச் சென்றுவிட்டது. இது வெறும் காகிதங்கள் அல்ல் தலைமுறை தலைமுறையாக நீங்கள் காத்து வந்த உரிமைகள்!

ஆனால், நம்பிக்கை இழக்க வேண்டாம்! நம் நாட்டின் சட்டம் அதற்கு ஒரு தீர்வைக் கொடுத்துள்ளது! உங்கள் ஆவணங்களைச் சட்டப்படி மீளப் பெற முடியும்!

– உடனடியாக நீங்கள் எடுக்க வேண்டிய 3 அதிமுக்கிய படிகள்! (சட்டப் பாதுகாப்புக்காக)

பொலிஸ் அறிக்கை (The First Step): உங்கள் ஆவணங்கள் தொலைந்து விட்டதாக அல்லது பழுதடைந்து விட்டதாக உங்கள் பிரதேச பொலிஸ் நிலையத்தில் (Police Station) உடனடியாக ஒரு முறைப்பாட்டைப் பதிவு செய்யுங்கள். அவர்கள் தரும் பொலிஸ் அறிக்கை (Police Complaint Copy) தான், ஆவணங்களைப் பெறுவதற்கான பிரதான ஆவணமாகும்!

கிராம சேவையாளர் அறிக்கை: உங்கள் பிரதேச கிராம சேவையாளர் (GS) ஊடாக, வெள்ள அனர்த்தத்தினால் நீங்கள் பாதிக்கப்பட்டவர் என்பதற்கான உத்தியோகபூர்வ பாதிப்பு அறிக்கையைப் (Damage Assessment Report) பெற்றுக்கொள்ளுங்கள். இது உங்களின் கோரிக்கையை உறுதிப்படுத்த உதவும்.

**சத்தியக் கடதாசி** (Affidavit): வெள்ளத்தில் ஆவணங்கள் தொலைந்ததை உறுதி செய்து, ஒரு சத்தியக் கடதாசியைத் (சட்ட ஆவணம்) தயாரித்து, சமாதான நீதிவான் அல்லது சத்தியப் பிரமாண ஆணையாளர் மூலம் அத்தாட்சிப்படுத்துங்கள். (இது சில பதிவகங்களில் அவசியம்)



காணி உறுதியை (Deed) மீளப் பெறுதல்: சட்டரீதியான விளக்கம்

பெரும்பாலானோர் இழந்தது காணி உறுதியைத்தான். இதை மீளப் பெறுவது மிக இலகு!

பதிவாளர் நாயகம் திணைக்களம் (Registrar General's Department)

சட்ட ஏற்பாடு: காணிப் பதிவு கட்டளைச் சட்டத்தின் (Land Registration Ordinance) இன் பிரிவுகளின் கீழ் இந்தச் சட்டப் பிரிவின்படி, ஒரு காணி உறுதியின் இரண்டாம் பிரதி (Duplicate) நீங்கள் பதிவு செய்த காணிப் பதிவகத்தில் (Land Registry) கட்டாயம் இருக்கும்.

**விண்ணப்பிப்பது எப்படி?**

உங்கள் காணி அமைந்துள்ள மாவட்டத்தின் காணிப் பதிவகத்திற்கு (டயனெ சுநபளைவசல) அல்லது பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் தலைமையகத்திற்குச் செல்லுங்கள்.

நீங்கள் உங்கள் அடையாள அட்டைப் பிரதி ஆகியவற்றை இணைத்து, "சான்றுப்படுத்தப்பட்ட உறுதிப் பிரதியை (Certified Copy of the Deed) வழங்குவதற்கான" விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்யுங்கள்.

சட்டப்படி நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்துங்கள்.

முக்கியம்: அவர்கள் உங்களுக்கு வழங்கும் "சான்றுப்படுத்தப்பட்ட உறுதிப் பிரதி (Certified Copy)' ஆனது, சட்டரீதியாக மூல உறுதியைப் போலவே முழுச் செல்லுபடியாகும் (டநபயட்டல ஏயடனை)! பயப்படத் தேவையில்லை!

வரைபடம் (Plan) மற்றும் ஏனைய ஆவணங்களைப் பெறுதல்

காணி உறுதிக்கு அடுத்தபடியாக, அதன் எல்லைகளைக் காட்டும் வரைபடம் மிக முக்கியம்!

நிலஅளவையாளர் நாயகம் திணைக்களம் (Surveyor General's Department)

சட்ட ஏற்பாடு: நிலஅளவைச் சட்டங்கள் (Survey Acts) மற்றும் திணைக்கள நடைமுறைகள்.

**விண்ணப்பிப்பது எப்படி?**

உங்கள் மாவட்டத்தின் அளவையாளர் திணைக்கள அலுவலகத்திற்கு (Survey Department) செல்லுங்கள்.

உங்களிடம் உள்ள காணி உறுதியின் இலக்கம் (Deed Number), வரைபட இலக்கம் (Plan Number – தெரிந்தால்) மற்றும் காணியின் அமைவிட விபரங்களை வழங்குங்கள்.

திணைக்களம் உங்கள் வரைபடத்தின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியை (Certified Copy of the Plan) வழங்கியதும், அதுவே மூலப்பிரதியைப் போலச் செல்லுபடியாகும்.

– அரசாங்கத்தின் விசேட சலுகை அறிவிப்புகளுக்காக காத்திருங்கள்!

பெரும் அனர்த்தங்களின் போது, அரசு சிலவேளைகளில் காணி ஆவணங்களை மீளப் பெறுவதற்கு:

– கட்டணங்களை இரத்துச் செய்தல்.

– பிரதேச செயலகங்களில் விசேட நடமாடும் சேவை அல்லது முகாம்களை அமைத்தல்.

– விரைவான சேவைகளை வழங்குதல்.

***

---

மங்கையொளி

**பயாஸா பாஸில்**

# குழந்தைக்கு கைப்பேசி கொடுக்கும் முன் பெற்றோர் மீண்டும் மீண்டும் யோசிக்க வேண்டிய காலம்!



*புதிய மருத்துவ ஆய்வு பெற்றோர்களுக்கு மிகப் பெரிய எச்சரிக்கை!*

*இன்றைய உலகத்தில் கைப்பேசி இல்லாமல் ஒரு நாளும் வாழ்வது சாத்தியமே இல்லாத நிலை. ஆனால் அதே கைப்பேசி குழந்தைகளின் மனநலத்தையும் உடல்நலத்தையும் பாதிக்கிறது என்று உலகப் புகழ்பெற்ற "குழந்தை மருத்துவம்" இதழ் வெளியிட்டுள்ள புதிய ஆய்வு வலுவாகச் சொல்கிறது.*

*ஆய்வு சொல்வது என்ன?*

*9 முதல் 16 வயதுக்குள் உள்ள பத்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட குழந்தைகள் மீது ஆய்வு செய்து பெற்ற முடிவுகள் பெற்றோர்களை ஆழமாக யோசிக்க வைக்கின்றன:*

*12 வயதிற்குள் கைப்பேசி இருக்கும் குழந்தைகளுக்கு*

*மன அழுத்தம் ஏற்படும் வாய்ப்பு 1.3 மடங்கு அதிகம்*

*அதிக உடல் எடை சேரும் வாய்ப்பு 1.4 மடங்கு அதிகம்*

*தூக்கம் குறைவதற்கான வாய்ப்பு 1.6 மடங்கு அதிகம்*

*குழந்தை எவ்வளவு முன்பாக கைப்பேசி பெற்றுவிடுகிறாரோ, அவ்வளவு அதிக ஆபத்து!*

*4 வயது முதலே இது தாக்கத்தை ஏற்படுத்தத் தொடங்குகிறது.*

*மேலும், வயதைவிட ஒவ்வொரு வருடம் முன்னதாக கைப்பேசி கொடுத்தாலும் ஆபத்து சுமார் 10மூ அதிகரிக்கிறது.*

*13 வயதில் கொடுத்தாலும் நிலை நல்லதில்லை*

*12 வயதில் கைப்பேசி இல்லாவிட்டாலும்,*

*13 வயதில் கைப்பேசி பெற்ற குழந்தைகளிலும்:*

*மனநிலையில் மாற்றங்கள்*

*தூக்கக் குறைவு*

*அதிக நேரம் திரை முன் இருப்பதால் கவனக்குறைவு*

*போன்ற பிரச்சனைகள் காணப்பட்டுள்ளன.*

*இந்த ஆய்வு காரணமும் விளைவுமாக நேரடியாக நிரூபிக்கவில்லை, ஆனால் சிறிய வயதில் கைப்பேசி கொடுத்தால் குழந்தைகளின் வளர்ச்சியை பாதிக்கக்கூடும் என்ற வலுவான சுட்டுமொழி அளிக்கிறது.*

*ஏன் இப்படிப் பாதிப்பு வருகிறது?*

*ஆய்வாளர்கள் கூறுவதாவது:*

*குழந்தைகள் முழுவதுமாக சமூக ஊடகங்களில் மூழ்கிவிடுகின்றனர்*

*இரவு நேரம் வரை திரை பார்த்ததால் தூக்க நேரம் குறைகிறது*

*வெளியில் விளையாடும் பழக்கம் குறைகிறது - உடல் எடை கூடுகிறது*

*மற்றவர்களை ஒப்பிடும் பழக்கம் மன அழுத்தத்தை அதிகரிக்கிறது*

*இணையத்தில் துன்புறுத்தல் ஏற்படும் வாய்ப்பு அதிகரிக்கிறது*

*இவை அனைத்தும் சேர்ந்து குழந்தையின் மனநிலையும் வளர்ச்சியும் பாதிக்கப்படுகின்றன.*

*பெற்றோர் செய்ய வேண்டியவை*

*1. கைப்பேசி கொடுக்கும் வயதை குடும்பமாக ஆலோசித்து முடிவு செய்யுங்கள்*

*குழந்தையின் நலன் முதன்மை.*

*2. கைப்பேசி கொடுத்தாலும் தெளிவான விதிமுறைகள் அவசியம்*

*இரவு 9க்கு பின் கைப்பேசி வேண்டாம்*

*படிப்பில் குறுக்கீடு வரக்கூடாது*

*சமூக ஊடக நேரம் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும்.*

*பெற்றோர் கண்காணிப்பு பயன்படுத்துங்கள்.*

*3. குழந்தையின் மனநலத்தை கவனித்து பேசிக்கொள்வது முக்கியம்*

*தூக்கம், உணவு, உடற்பயிற்சி சரியா?*

*மன அழுத்தம், கோபம், தனிமை போன்ற மாற்றங்கள் உள்ளனவா?*

*4. கைப்பேசிக்கு மாற்றாக நல்ல பழக்கங்களை ஊக்குவிக்கவும்*

*விளையாட்டு*

*புத்தகம் வாசித்தல்*

*கலை, இசை*

*குடும்ப நேரம்*

*முடிவு*

*"குழந்தைக்கு கைப்பேசி கொடுப்பது என்றால் ஒரு சாதனம் மட்டும் அல்ல - அவர்களின் எதிர்கால பழக்கத்தையும், மனநலத்தையும் கையில் தருவது!"*

*பெற்றோர்கள் மிகுந்த பொறுப்புடன், குழந்தையின் நலனை முன்னிலைப்படுத்தி இந்த முடிவை எடுக்க வேண்டும்.*

# ஐ.ம.சக்தியின் பேருவளைத் தொகுதி அமைப்பாளராக இப்திகார் ஜெமீல்





(பீ.எம். முக்தார்)

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடளாவிய ரீதியிலான தொகுதி அமைப்பாளர் களுக்கான கூட்டம் (23) கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் கட்சியின் தலைவரும் எதிர்க் கட்சித் தலவருமான சஜித் பிரேமதாசா தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டித்தின் போது பல தொகுதி அமைப்பாளர்களுக்கான நியமனக் கடிதங்கள் கட்சித் தலைவரினால் வழங்கி வைக்கப்பட்டன.

இதன் போது பேருவளைத் தொகுதியின் இணை அமைப்பாளராக தொடர்ந்தும் இப்திகார் ஜமீல் நியமிக்கப்பட்டார். இதற்கு முன்னர் இணை அமைப்பாளர்களாக இப்திகார் ஜமீலுடன் கடமையாற்றிய முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன கட்சியில் இருந்து விலகி ஐக்கிய தேசிய கட்சியில் இணைந்ததையடுத்து வெற்றிட மாகிய இணை அமைப்பாளர் பதவிக்கு ஜனித் டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# கற்பிட்டியில் இடம்பெற்ற இலவச ஜனாஸா வாகனம் சமூக மயப்படுத்தும் நிகழ்வு



(எம்.எச்.எம். சியாஜ்)

கற்பிட்டி வரலாற்றில் முதன் முறையாக மக்களின் முழுப்பங்களிப்புடன் பிரயிட் ஹேன்ட் ஜனாஸ ா சங்கத்தின் பல வருட முயற்சியின் ஊடாக தயார் செய்யப்பட்ட புதிய இலவச ஜனாஸா வாகனம், அதன் சேவையை சமூக மயப்படுத்தும் வகையில் நிகழ்வொன்று கடந்த சனிக் கிழமை (22) மஸ்ஜிதுல் குபா பள்ளிவாசலில் ஜனாஸா சங்கத் தலைவர் ஏ.ஜே.எம் தாரிக் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் அகில இலங்கை ஜனாஸா மற்றும் அவசர சேவைகள் சங்கத்தின் தலைவர் எம். காதர் மற்றும் பொதுச் செயலாளர் எம். ரியாத் ஆகியோருடன் ஏனைய மாவட்டங்களின் தலைவர்கள் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள், புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஜே. எம். பைசல் உட்பட கற்பிட்டி பிரதேச சபையின் உறுப்பினர்கள், உலமாக்கள் மற்றும் ஊர் மக்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

அகில இலங்கை ரீதியிலான ஜனாஸா மற்றும் அவசர சேவைகள் சங்கத்தின் மேற்பார்வையின் கீழ் நாடு பூராவும் இதுவரை 93 ஜனாஸா வாகனங்கள் காணப்படும் நிலையில் கற்பிட்டியின் ஜனாஸா வாகனம் 94 வது வாகனமாக இச்சேவையில் இணைந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



வர்த்தக நிறுவனங்களின் அனுசரனையில் இலங்கை வானொலி ஏற்பாட்டில் கண்டி மாவட்டத்தின் அஹதிய்யா அறநெறி பாடசாலைகளுக்கிடையிலான அறிவுப்பூங்கா கேள்வி – பதில் ஒலிப்பதிவு நிகழ்ச்சி கடந்த 22 சனிக்கிழமை கட்டுகஸ்தொட்டை சாஹிரா பாடசாலையில் அதன் அதிபர் எம்.பைசல் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் அஹதிய்யா அறநெறி பாடசாலைகளின் மாணவர் மாணவிகள் பொறுப்பாசிரியர்கள் மாவட்ட அஹதிய்யாவின் முக்கிய பிரமுகர்கள், முன்னாள் ஆங்கில சேவை கட்டுப்பாட்டாளர் எம்.தாசிம், நிகழ்ச்சித்தயாரிப்பாளர் எம். ரலீம், ஆகியோருடன் புள்ளிப் பதிவாளர்கள் உதவியாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(உக்குவளை நிருபர்)

# பள்ளிவாயல் நிருவாகத்துடன் பிரதேச சபை உறுப்பினர் சந்திப்பு



(எஸ்.எம்.எம். முர்ஷித்)

ஒரு மனித செயற்பாட்டிற்கு இதயம் மற்றும் மூளை முக்கிய பங்கு வகிப்பதைப் போன்று, ஒரு சமூகத்தின் செயற்பாட்டிற்கு பள்ளி வாயலும் பாடசாலையும் காணப்படுகின்றது என்று நூர்தீன் பாஹிர் தெரிவித்தார்.

அரசியல் அதிகாரம் கிடைத்த பின் முதலாவது சந்திப்பாக மீராவோடை மீரா ஜூம்மா பள்ளி வாயல் நிருவாகத்தை சந்தித்தார்.

இச் சந்திப்பின் போது தனது அரசியல் பிரவேசம் அதன் நோக்கம் பற்றியும், சமூக நல விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடியதுடன் பள்ளிவாயல் நிருவாகத்தோடு சேர்ந்து செயற்படுவது பற்றியும் தெரிவித்தார்.

# நீரிழிவு தின கவிதைப் போட்டியில் கற்பிட்டி அப்துல்லாஹ் முதலிடம்






(எம்.எச்.எம். சியாஜ்)

2025 ம் ஆண்டின் நீரிழிவு தினத்தை முன்னிட்டு அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையில் தரம் 04 ல் கல்வி பயிலும் மாணவன் எம்.ஏ அப்துல்லாஹ் முதலாம் இடத்தை பெற்றுள்ளார். அகஞ்சுரக்கும் தொகுதி மற்றும் நீரிழிவு கூட்டமைப்பு இணைந்து நடாத்திய இப் போட்டியின் வெற்றியாளர்களுக்கு விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

இதில் கற்பிட்டி அப்துல்லாஹ் தங்கப்பதக்கம், பணப்பரிசில்கள் மற்றும் பரிசுப் பொருட்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார். இவர் கற்பிட்டியைச் சேர்ந்த ஆசிரியர்களான எம் எம் எம் அஜ்மல் மற்றும் ஆர்.எஸ் ஷகீலா ஆகியோரின் மூத்த புதல்வர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஊடக மையம் உதயமும், ஊடகவியலாளர்களுக்கான ரீ-சேட்கள் வழுங்கும் நிகழ்வு







(இஸட்.ஏ. றஹ்மான்)

அம்பாரை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் அம்பாரை மாவட்ட ஊடக மைய உதயமும், சம்மேளனத்தின் அங்கத்தவர்களுக்கான புதிய ரீ-சேட் வழக்கும் நிகழ்வு (23) சாய்ந்தமருதில் தலைவர் மீரா.எஸ்.இஸ்ஸடீன் தலைமையில் நடைபெற்றது.

புதிதாக உதயமாகும் ஊடக மையம், ஜனநாயகத்தின் முதுகெலும்பாக விளங்கும் ஊடகக் கருத்துச் சுதந்திர வெளிப்பாட்டுக்கு உந்து சக்தியாக விளங்கி, அரசியல், கலை, கலாசார, சமய பண்பாட்டு விழுமியங்கள், விளையாட்டுக்கள், சமூகவியல் சார்ந்த ஆர்வலர்களின் மனக் கிடக்கைகளை மக்கள் மயப்படுத்துவதே ஊடக மையத்தின் முதன்மைப் பணியாகுமென்று சம்மேளனத்தின் தலைவர் கலாபூஷணம் மீரா.எஸ். இஸ்ஸடீன் தெரிவித்தார். இதனை தொடர்ந்து அங்கத்தவர்களுக்கு ரீ- சேட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது சம்மேளனத்தின் செயலாளர் பத்தி எழுத்தாளர் எம்.எம்.ஏ. சமட் , பொருளாளர் இஸற்.ஏ.றஹ்மான் உட்பட உறுப்பினர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# கண்டி தேசிய வைத்தியசாலையில் முழங்கால் மூட்டுகளை மாற்றியமைக்கும் கட்டணமின்றிய சத்திர சிகிச்சை





(எம்.ஏ. அமீனுல்லா)

கண்டி தேசிய வைத்தியசாலையில் எந்தவிதக் கட்டணமும் இன்றி 113 முழங்கால் மூட்டுகளை மாற்றிய மைக்கும் சத்திரசிகிச்சைத் தொடர் வெற்றிகரமாக நிறைவடைந்தது. இந்தச் சத்திரசிகிச்சைகளுக்காக தாய்லாந்தில் உள்ள சிரி ராஜ் வைத்தியசாலையில் இருந்து இங்கு வருகை தந்த விசேட சத்திரசிகிச்சை வைத்தியர்கள் உட்பட 80 பேர் கொண்ட குழுவை கௌரவிக்கும் விசேட நிகழ்வு கண்டி தேசிய வைத்தியசாலையில் நடைபெற்றது. முழங்கால் மூட்டு மாற்று அறுவை சிகிச்சைக்காகப் பல வருடங்களாக காத்திருப்புப் பட்டியலில் இருந்த 79 நோயாளிகளுக்கு மூன்று நாட்களுக்குள் 113 முழங்கால் மூட்டுகள் பொருத்தப்பட்டன. கண்டி தேசிய வைத்தியசாலையின் மூன்று சத்திரசிகிச்சைக் கூடங்களில் காலை 7.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை இந்தச் சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், கண்டி தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் இரேஷா பெர்னாண்டோ விசேட வசதிகளை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தார்.

## செடோ நிறுவனத்தில் இடம்பெற்ற கழிவு முகாமைத்துவத் திட்டம் தொடர்பான கலந்துரையாடல்





( எம். எச். எம். சியாஜ்)

கற்பிட்டி குறிஞ்சிபிட்டி தெற்கு கிராம சேவகர் பிரிவின் அஷ்ரப் நகர் கிராமத்தில் நீண்ட நாட்களாக காணப்படும் தினசரி வீட்டுக் கழிவுகள் அகற்றல் தொடர்பான பிரச்சனைகளுக்கு தீர்வினை பெற்றுக் கொடுக்கும் முகமாக கற்பிட்டி செடோ நிறுவனத்தினால் முன்வைக்கப்பட்ட கழிவு முகாமைத்துவ செயற்திட்டம் கிரிஸலிஸ் நிறுவனத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் அதன் முதற்கட்ட ஆய்வு தொடர்பான கலந்துரையாடல் (19) செடோ நிறுவனத்தில் அதன் பணிப்பாளர் ஏ.ஆர் முனாஸ் தலைமையில் இடம்பெற்றது.

இதில் கிரிஸலிஸ் நிறுவனத்தின் செயற்திட்ட இணைப்பாளர் அஜித், ஜெராட் தலைமையிலான ஆய்வாளர்கள் மற்றும் செடோ நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், ஆலோசகர்கள், கற்பிட்டி பிராந்திய சுற்றாடல் குழு உறுப்பினர்களான ஏ.எச்.எம். ஷாபி, எச். எம். சுகைப் மற்றும் அஷ்ரப் நகர் பள்ளிவாசல் நிர்வாக உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

மேற்படி திட்டத்தின் ஊடாக குறிஞ்சிபிட்டி தெற்கு அஷ்ரப் நகரில் தினசரி சேகரிக்கப்படும் வீட்டு கழிவுகள் பள்ளிவாசல் நிர்வாகத்நினரால் வழங்கப்பட்டுள்ள காணிக்கு கொண்டு வரப்பட்டு அது வேறு படுத்தப்பட்டு சோதனைப் பசளை உற்பத்தி செய்தல் அந்த பசளை உற்பத்தி மூலம் வீட்டுத்தோட்டம் உருவாக்குதல் போன்ற செயற்பாடுகள் தொடர்பான முதற்கட்ட ஆய்வுகள் இக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டமை முக்கிய அம்சங்களாக காணப்பட்டது.

## கண்டி நகரில் யாசகர் பிரச்சினைக்கு தீர்வு காண விசேட கலந்துரையாடல்



(எம்.ஏ. அமீனுல்லா)

கண்டி நகரில் நிலவும் யாசகர்கள் பிரச்சினைக்கு தீர்வு வழங்குவது தொடர்பான விசேட கலந்துரை யாடல் ஒன்று மத்திய மாகாண ஆளுநர் பேராசிரியர் எஸ்.பி.எஸ். அபயகோன் தலைமையில், ஆளுநர் அலுவலக கேட்போர் கூடத்தில் (18) நடைபெற்றது.

கலந்துரையாடலின் போது, கண்டி நகரிலுள்ள மணிக்கூட்டுக்கோபுர பேருந்து நிலையம், டொரிங்டன் பூங்கா உட்பட நகரத்தின் பல இடங்களில் தங்கியுள்ள யாசகர்கள் குறித்து குறிப்பாக கவனம் செலுத்தப்பட்டது. அந்த இடங்களில் இருந்து யாசகர்களை அகற்றுதல், அதற்காக மேற் கொள்ள வேண்டிய சிகிச்சைகள்/ திருத்தங்கள், குறுகிய கால மற்றும் நீண்ட கால தீர்வுகளை வழங்குதல், மற்றும் நகரத்திற்கு வரும் மக்களுக்கு வசதிகளை வழங்குதல் போன்றவை குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இந்த சந்தர்ப்பத்தில் கண்டி பிரதி மேயர் ருவன் கலப்பிட்டிய, மத்திய மாகாண பிரதம செயலாளர் அஜித் பிரேமசிங்க, ஆளுநரின் செயலாளர் மஞ்சுலா மதஹபொல, பிரதம மற்றும் கல்வி அமைச்சு செயலாளர் மதுபாணி பியசேன, மாவட்டச் செயலாளர் இந்திக உடவத்த மற்றும் பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

## சவூதி தூதரகம் மற்றும் முஸ்லிம் திணைக்களம் இணைந்து நடாத்திய அல் குர்ஆன் ஹிப்ளு போட்டி

(எஸ்.எம். ஜாவித்)

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் சவூதி அரேபியாவின் இலங்கைக்கான தூதுவராலயமும் மூன்றாவது முறையாகவும் இணைந்து நடாத்தும் அல்குர் ஆன் ஹிப்ளு போட்டி- 2025 கொழும்பு, கம்பஹா , களுத்துறை, காலி, மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்ட ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கி கொழும்பில் அமைந்துள்ள முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள வளாகத்தில் கடந்த சனி மற்றும் ஞாயிறு ஆகிய தினங்களில் இடம்பெற்றது.





முஸ்லிம் சமய பண்பாட்டலுவல் கள் திணைக்கள பணிப்பாளர் எம்.எஸ்.எம் நவாசின் வழி நடத்தலில் பிரதிப் பணிப்பாளர் எம்.எஸ்.அலா அஹமட் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் திணைக்களத்தின் அலுவளர்களான ஏ.ஆர்.எ. ஹபீழ், எம்.ஐ. முப்தி முர்சி , எம்.ஐ.எம். மசீன், ஹைருன் ரபியுதீன், இனாயா அலி அக்பர், ஏ.சி.எப்.சாமிலா, ஏ.எச்.ஏ.என் பாத்திமா, ஏ.எஸ்.எம். ஜாவித், எம்.ஏ.சி.எம். றியாஸ் , எம்.என்.எம். றொஸ ான் மற்றும் தூதுவராலயத்தின் இலங்கைப் பிரதிநிகளின் பங்களிப்பில் இடம்பெற்ற போட்டி நிகழ்வுகளில் சுமார் 486 க்கும் மேற்பட்ட ஆண், பெண் போட்டியாளர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி அதிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் கௌரவிப்பு நிகழ்வு





(எச்.எம்.எம். பர்ஸான்)

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி அதிபர் சங்கம் ஏற்பாடு செய்த கௌரவிப்பு நிகழ்வு சனிக்கிழமை (22) பிறைந்துரைச்சேனை அஸ்ஹர் வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

அதிபர் சங்க தலைவரும் ஓட்டமாவடி தாருல் உலூம் வித்தியாலய அதிபருமான எம்.எல்.பைசல் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கேணிநகர் மதீனா வித்தியாலயத்திலி ருந்து ஓய்வு பெற்றுச் சென்ற ஏ.எல். மீரா முகைதீன், காகித நகர் மில்லத் வித்தியாலயத்திலிருந்து ஓய்வு பெற்றுச் சென்ற எச்.எம்.இஸ்மாயில், மீராவோடை அமீர் அலி வித்தியாலயத்திலிருந்து ஓய்வு பெற்றுச் சென்ற எம்.எம்.மஹ்ரூப், ஓட்டமாவடி ஹிஜ்றா வித்தியாலயத் திலிருந்து ஓய்வு பெற்றுச் சென்ற எம்.ஏ.சாபிர் ஆகிய நான்கு அதிபர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில், பிரதம அதிதியாக மட்டக்களப்பு மத்தி வலயக் கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளரும் கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கோட்டக் கல்வி அலுவலக பதில் பணிப்பாளருமான ஏ.ஜே.மர்சூக் அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

# இனவாதத்திற்கு எதிராக, சிங்கப்பூர் போன்ற இறுக்கமான சட்ட மாற்றத்தை கொண்டுவாருங்கள் நாம் ஆதரவு வழங்குவோம்

## ஜனாதிபதியிடம் றிஷாட் பதியுதீன் வலியுறுத்தல்!

இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முகமாக, இனவாதம் மற்றும் மதவாதங்களை கையிலெடுக்கும் மதத்தலைவர்கள், அரசியல்வாதிகள் மற்றும் தனி நபர்களுக்கு எதிராக இருக்கமான சட்டத்தை நடைமுறைப்படுத்த தேவையான சட்ட ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான றிஷாட் பதியுதீன் ஜனாதிபதி அனுரகுமார திஸ்ஸ நாயக்கவிடம் வலியுறுத்தியுள்ளார். அரசாங்கத்தினால் இன நல்லிணக்கத்தை அடிப்படையாக் கொண்டு 'இலங்கையர் தினம்' எதிர்வரும் டிசம்பர் மாதம் 12,13,14 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள நிகழ்வு பற்றிய சிறுபான்மை கட்சி தலைவர்களுக்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், ஜனாதிபதிக்கு மிடையிலான சந்திப்பு (22) ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில், இனவாதம், மதவாதம் ஊடாக நாட்டை குழப்பும் சக்திகளால் தான் இந்நாடு இன்னும் பொருளாதார வீழ்ச்சியை கண்டிருக்கின்றது. இலங்கை சுதந்திரமடையும் போது தனிநபர் வருமானம் 48 டொலர், ஆனால் அன்று ஜப்பானின் தனிநபர் வருமானம் 49 டொலர், ஆகவே ஜப்பானை விட ஒரு டொலர் வித்தியாசத்தில் தான் அன்று இருந்தோம், இலங்கையையும் ஜப்பானையும் ஒப்பிடும் நாம் இன்னும் பொருளாதார வீழ்ச்சியைதான் சந்தித்திருக்கின்றோம், நமது நாடு இனவாதத்தினால் தான் குட்டிச்சுவராகி அதள பாதாளத்திற்குச் சென்றிருக்கின்றது. ஆகவே, இனவாதம் மதவாதத்தை பேசும் எந்த நபராக இருந்தாலும் அவருக்கு எதிரான சட்டத்தை மிகவும் இறுக்கமாக நடைமுறைப் படுத்த வேண்டும். சிங்கப்பூரில் இருப்பது போன்ற ஓர் சட்ட மாற்றத்தை நாம் அவசரமாக கொண்டுவர வேண்டும், அதற்கு நாம் பூரண ஆதரவுகளை வழங்குவோம்.

அத்துடன் முஸ்லிம், தமிழ், சிங்கள மற்றும் கத்தோலிக்க என ஒவ்வொரு மார்க்கத்திற்கான சந்தேகங்களை தீர்ப்பதற்கு அல்லது தெளிவுபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை 'இலங்கையர் தினம்' நாளில் மேற்கொள்ள அந்தந்த இன ரீதியான திணைக்களங்கள் ஊடாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார்.





அரசினால் முறைப்படுத்தப்படவுள்ள "இலங்கையர் தினம்" என்ற தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு அனைவரும் ஆதரவு வழங்குவதாகவும் தெரிவித்தனர். இக்கலந்துரையாடலின் போது, பாராளுமன்ற உறுப்பினர்களான கோடீஸ்வரன், ஹிஸ்புல்லாஹ், மனோ கனேசன், செல்வம் அடைக்கலநாதன், ரவீகரன், மஸ்தான், திகாம்பரம், அர்ச்சுனா, மற்றும் சிறிநாத் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

# உக்குவளையில் இடம்பெற்ற வெள்ளிக் கவியரங்கு



**(உக்குவளை ஜெலீல்)**

உக்குவளை ஸ்ரீ லங்கா இஸ்லாமிய எழுத்தாளர் அமைப்பு முதற்தடவையாக வெள்ளி கவியரங்கு நிகழ்வொன்றை அதன் தலைவரும், கல்விப் பணிப்பாளருமான வரக்காமுரயூர் ராசிக் கடந்தவாரம் உக்குவளை அல்மினா அரங்கில் ஏற்பாடு செய்திருந்தார்.

இவ்வமைப்பின் செயலாளரும் ஆசிரியையுமான கவிதாயினி 'இளைய நிலா' பஸ்மினாவின் ஏற்பாட்டில் ஆண் பெண் கலை இலக்கிய ஆர்வலர்கள் ஐம்பதுக்கு மேற்பட்டவர்களுடன் இந்நிகழ்வில் ஓய்வுநிலை ஆசிரியைகளான குறைசா, சரீக்கா, ஆகியோர் சிறப்பு அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் கல்விப் பணிப்பாளர் வரக்காமுரயூர் ராசிக் ஆசிரியை பஸ்மினா, பன்னூலாசிரியர் கவிதாயினி ஜெசீமா, மடவல பஸ்மின் புகாரி, ஆசிரியை பஸ்மினா, பௌசியா இளம் கவிதாயினி சபானா, ஆசிரியை மகேஸ்வரி, ஆசிரியை ரிசானா, மற்றும் அதிபர் எம். அஸ்மி ஆகியோர் தாம் இயற்றிய சிந்திக்க வைக்கும் வகையிலான சிறந்த கவிதைகளை முன் வைத்தமை குறிப்பிடத் தக்கது.

நாடறிந்த முதுபெரும் அரபு எழுத்தணி மற்றும் நாடகக் கலைஞரான ரைத்தலாவெல அசீஸ் கூறுகையில், இவ்வமைப்பானது 1999 இல் உக்குவளையில் சகல இன கலைஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டதாகும் என தெரிவித்தார்.

# வாழைச்சேனை பிரதேச செயலாளராக முபாறக் கடமையேற்பு





**(எஸ்.எம்.எம்.முர்ஷித்)**

மூதூர் பிரதேச செயலாளராக கடமையாற்றிய எம்.பி.எம்.முபாரக் கோரளைப்பற்று மத்தி, வாழைச் சேனை பிரதேச செயலாளராக (24)தமது கடமையைப் பொறுப் பேற்றுக்கொண்டார்.

கோறளைப்பற்று மத்தி, வாழைச் சேனை பிரதேச செயலாளராக கடமையாற்றிய எம்.ஏ.சி.றமீஸா விடுமுறையை பெற்று வெளிநாடு சென்றதைத்தொடர்ந்து பதில் பிரதேச செயலாளராக ஒட்டமாவடி பிரதேச செயலாளர் ஏ.தாஹிர் கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மூதூர் பிரதேச செயலகத்தில் உதவிப்பிரதேச செயலாளராக கடமையில் இணைந்து கொண்ட முபாரக், பிரதேச செயலாளராக தரமுயர்வு பெற்று இற்றை வரை சுமார் 7 வருடங்கள் மூதூர் பிரதேச மக்களுக்கான அளப்பரிய சேவைகளை பக்கச்சார்பற்ற வகையில் மிகச்சிறப்பாக ஆற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# 200 தொன் நிவாரணப் பொருட்களுடன் இலங்கை வரும் மற்றொரு கப்பல்

சூறாவளியால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு ஆதரவளிக்கும் வகையில், இலங்கைக்கு மேலதிகமாக 200 டன் மனிதாபிமான நிவாரணப் பொருட்களை பாகிஸ்தான் அனுப்பும் என அந்நாட்டின் மத்திய கடல்சார் விவகார அமைச்சர் முகமது ஜூனைத் அன்வர் சௌத்ரி தெரிவித்தார்.

பிரதமர் ஷெபாஸ் ஷெரீப்பின் அறிவுறுத்தலின் பேரில், 200 டன் நிவாரணப் பொருட்கள் கொண்ட கப்பல் கடல் வழியாக அனுப்பப்பட்டுள்ளதுடன், அது டிசம்பர் 13ஆம் திகதிக்குள் இலங்கையை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தச் சரக்குகளில் கூடாரங்கள், போர்வைகள், கம்பளிகள், கொசு வலைகள், முகாம் விளக்குகள், பாய்கள், உயிர்காப்பு அங்கிகள், ஊதப்பட்ட படகுகள், நீரை வெளியேற்றும் பம்புகள், மருந்துகள், பால்மா மற்றும் உடனடிப் பாவனைக்கான சிகிச்சை உணவு ஆகியவை அடங்கும்.

மனிதாபிமான மற்றும் உட்கட்டமைப்புச் சேதங்களில் இருந்து இலங்கை மீண்டு வர தொடர்ந்து உதவ பாகிஸ்தான் தயாராக இருப்பதாக ஜூனைத் சௌத்ரி மேலும் கூறினார்.

# கஹவத்த இஸ்மாயில் பாரூக் ஹாஜியார் காலமானார்

பிரபல சமூக சேவையாளரும் கஹவத்த பள்ளிவாசலின் முன்னாள் பரிபாலன சபைத் தலைவருமான அல்ஹாஜ் இஸ்மாயில் பாரூக் காலமானார். முன்னாள் ஆளுநர் ஏ ஜே எம் முஸம்மிலின் மூத்த சகோதரரான, இவர் ஜனாதிபதி சட்டத்தரணி எம் எம் சுஹைரின் மைத்துனரும் ஆவார். சமூகப் பணிகளை நீண்ட காலமாக புரிந்து வந்த இவர் இறக்கும்போது இவருக்கு 83 வயது ஆகும். இவரது ஜனாஸா சனியன்று நண்பகல் கஹவத்த ஜும்ஆ பள்ளிவாசலில் பெருந்திரளானோரின் பிரசன்னத்தில் இடம்பெற்றது

# அஸ்வெசும திட்டத்தின் கீழ் வாழ்வாதார உதவிகள் வழங்கி வைப்பு



சமுர்த்தி திணைக்களத்தினால் அஸ்வெசும திட்டத்தின் கீழ் வாழ்வாதார உதவி பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்ட பயனாளர்களுக்கு பொருட்கள் வழங்கும் வைபவம் சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவின் சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.பி.எம் /ஹசைனின் ஒருங்கிணைப்பின் கீழ் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபாவின் தலைமையில் நேற்று (09) இடம்பெற்றது.

இவ் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக பாராளுமன்ற உறுப்பினரும் அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களின் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும், அரசியலமைப்புப் பேரவை உறுப்பினருமான அபூபக்கர் ஆதம்பாவா கலந்து கொண்டு சிறப்பித்தார்.

பிரதேச சபை உறுப்பினர்களான சம்மாந்துறை தேசிய மக்கள் சக்தியின் அமைப்பாளர் வை.பி. எம். நவாஸ்,எஸ் தனோஜன், நிர்வாக உத்தியோகத்தர் ஜே.எம் ஜெமில்,சமுர்த்திப் பிரிவின் பிரதம முகாமைத்துவ உதவியாளர் ரி.எம் றஹிமா, பாராளுமன்ற உறுப்பினரின் பொதுமக்கள் தொடர்பாடல் அதிகாரி எஸ்.எம் ஆரீப், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்பட கிராம உத்தியோகத்தர்கள் அலுவலக உத்தியோகத்தர்கள் பாராளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர்கள் தேசிய மக்கள் சக்தியின் சம்மாந்துறை பிரதேச முக்கியஸ்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# மாவனல்லையை உலுக்கிய கோர விபத்தில் ஒருவர் பலி



**(பாரா தாஹீர்)**

ரம்புக்கணை மாவனல்லை வீதியின் தலகொல்ல பகுதியில் முச்சக்கர வண்டி ஒன்றின் மீது பாரிய மரம் ஒன்று நேற்று இரவு சரிந்து வீழ்ந்ததில் 37 வயதுடைய முச்சக்கர சாரதி உயிரிழந்துள்ளார்.

இவ் விபத்தில் காயமடைந்த 57 வயதான ஆணும், 48 வயதான பெண்ணும், இரண்டரை வயதான சிறுமியும் மாவனல்லை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

# இந்தியப் பல்கலைக்கழக மாணவர் குழு மற்றும் பிரதி அமைச்சர் முனீர் முளப்பர் ஆகியோருக்கிடையில் சந்திப்பு





இந்தியாவின் புகழ்பெற்ற Loyola பல்கலைக்கழகத்தின் சமூக சேவை தொடர்பான முதுமாணி பட்ட மாணவர்களைக் கொண்ட 50 பேர் கொண்ட குழுவொன்று, அண்மையில் கொழும்பில் சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர் முனீர் முளப்பரை சந்தித்து, இலங்கையின் சமய மற்றும் கலாசாரப் பன்முகத் தன்மை குறித்துக் கருத்துப் பரிமாற்றம் செய்தனர்.

இந்த மாணவர் குழுவுடன் நடை பெற்ற இச்சினேகபூர்வமான சந்திப்பின்போது, நாட்டில் நிலவும் பல்வேறு சமய மற்றும் கலாசார நம்பிக்கைகளைக் கொண்ட மக்கள் சமாதானத்துடனும் நல்லிணக்கத்துடனும் செயற்படும் விதம் குறித்து ஆழமாக ஆராயப்பட்டது.

இங்கு, இலங்கையில் பல் சமய மற்றும் பல் கலாசாரத்தை பின்பற்றும் சமூகத்தை நிலைநிறுத்துவதற்காக அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் சமய நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தப் பங்களித்த காரணிகள் குறித்து பிரதி அமைச்சரினால் விரிவாக விளக்கப்பட்டது.

இலங்கையின் பல்வேறு பிரிவுகளுடன் கல்விசார் உரையாடல்களில் ஈடுபட்ட இந்த இந்தியப் பல்கலைக்கழக மாணவர்களின் விஜயத்தின் பிரதான நோக்கம், இலங்கையின் கலாசாரக் கொள்கைகள் மற்றும் சமூகக் கட்டமைப்பு குறித்து நேரடி அறிவைப் பெறுவதாகும்.

இந்தச் சந்திப்பின் முடிவில், இந்திய மாணவர் குழுவிற்கு இத்தகைய பெறுமதியான வாய்ப்பை வழங்கியமைக்காகவும், தேசிய நல்லிணக்கம் நடைமுறைப்படுத்தப் படும் விதம் குறித்து விளக்கமளித்த மைக்காகவும், டுழலழடய பல்கலைக்கழ விரிவுரையாளர்கள் பிரதி அமைச்சர் முனீர் முளப்பருக்குத் தமது நன்றியைத் தெரிவித்தனர்.

# புள்ளி கணிப்பாளர் தேர்வில் கற்பிட்டி அரபாத் சித்தி

**(ரிஹ்மி ஹக்கீம்)**

புத்தளம் மாவட்டம், கல்பிட்டியை சேர்ந்த ஊடகவியலாளர் அரபாத் பஹர்தீன் இலங்கை கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்ட புள்ளி கணிப்பாளர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து, உத்தியோகபூர்வ கிரிக்கெட் புள்ளி கணிப்பாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அரபாத் பஹர்தீன் உதயம் செய்தி இணையத்தளம் மற்றும் உதயம் ஈ - பத்திரிகை என்பவற்றிலும் பணியாற்றி வருகின்றமை



குறிப்பிடத்தக்கது.

# தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் FIASTA 25 விருது வழங்கும் நிகழ்வு!






**(நூருல் ஹுதா உமர்)**

இலங்கை தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீட மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்த FIASTA 25 வருடாந்த விருது வழங்கும் நிகழ்வு கடந்த 22 ஆம் திகதி பீடத்தின் பிரதான அரங்கில் மாணவர் ஒன்றியத்தின் தலைவர் ஆர். ஹனாஸ் அஹமட் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீடத்தின் பீடாதிபதி அஷ்ஷேக் எம்.எச்.ஏ. முனாஸ் கலந்து கொண்டு உரையாற்றியதுடன் வெற்றிக்கின்னங்களையும் சான்றிதழ்களையும் வழங்கி வைத்தார்.

நிகழ்வின் போது பீடத்தின் அரபு மொழி துறையின் தலைவர் கலாநிதி ஏ.எம். றாசிக், பல்கலைக் கழக பிரதி சிரேஷ்ட மாணவர் ஒழுக்காற்று அதிகாரி எம்.ஏ. ஜி. பெரோஸ் மற்றும் உடற்கல்வி துறையின் பணிப்பாளர் ஐ.எம். கடாபி ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றியதுடன் சான்றிதழ் களையும் வழங்கி வைத்தனர்.

இங்கு உரையாற்றிய அரபு மொழி பீடத்தின் பீடாதிபதி முனாஸ் கருத்து தெரிவிக்கையில்.....

கல்வியில் புத்தக அறிவு மட்டும் போதாது என்றும் அறிவு, திறமைகள், நல்ல அணுகுமுறை என்பனவும் மிக அவசியம் என வலியுறுத்தினார். இந்த திறன்களை வளர்ப்பதில் co-curricular activities பெரிய பங்கு வகிக்கின்றன என்றும், தற்போதைய மாணவர் பேரவை மற்றும் முந்தைய பேரவைகள் சிறந்த திறமைகளை வெளிப்படுத்தி உள்ளதைப் பார்த்து பெருமைப் படுவதாகவும் தெரிவித்தார்.

13 ஆண்டுகளாக கவனிக்கப்படாத பீடத்தின் கட்டிடம், வண்ணம் அடிக்கப்படாமல் இருந்ததையும் சுற்றுப்புறம் சீரற்ற நிலையில் இருந்ததையும் நினைவுபடுத்தினார். ஆனால், மாணவர் பேரவை, முஸ்லிம் மஜ்லிஸ் ஆகியவற்றின் இணைந்த முயற்சியால் கட்டிடம் அழகாக மாற்றப் பட்டதாகவும் அவர் தெரிவித்தார். புதிய வோட் ஷரூம், மேம்படுத்தப் பட்ட லேண்ட்ஸ்கேப் மற்றும் கற்றல் உபகரணங்கள் ஆகியவை மாணவர்களின் பங்களிப்பால் உருவாக்கப்பட்டன எனவும் கிண்ணியாவை தளமாகக் கொண்ட ஒரு சமூக நிறுவனம், 33 மாணவர்களுக்கு மாதம் ரூ.10,000 உதவித் தொகை வழங்குவதாகவும் அந்த நிறுவனம் பீடத்தின் கட்டிட மேம்பாட்டிற்கான மெட்டீரியல் களையும் வழங்கியது என்றும் தெரிவித்தார்.

அரசாங்க நிதி நெருக்கடியில் இருந்த சந்தர்ப்பத்தில் இவ்வாறான உதவிகளுடன் எந்த வித நிதி கையாடல் இல்லாமல் இந்த வேலைகள் நிறைவேற்றப்பட்டதை அவர் பாராட்டி பேசினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



அரபாத் பஹுர்தீன்




# பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நிதியுதவி வழங்கியது இலங்கை கிரிக்கெட் சபை

கடந்த சில தினங்களுக்கு முன்பு இலங்கையில் ஏற்பட்ட இயற்கை பேரிடருக்கு முகம் கொடுத்திருக்கும் இலங்கை மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் முகமாகவும், இலங்கை நாட்டினை மீளக் கட்டியெழுப்பும் முகமாகவும் இலங்கை கிரிக்கெட் சபையினால் 300 மில்லியன் ரூபாய்களை நன்கொடையாக வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

அதன்படி இந்த நன்கொடைப் பணமானது இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் ஷம்மி சில்வா மற்றும் இலங்கை கிரிக்கெட்டின் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஆகியோரது வழிகாட்டுதலிற்கு அமைய வழங்கப்படவிருக்கின்றது.

அதேநேரம் இந்த விடயம் தொடர்பில் ஊடக அறிவிப்பு ஒன்றினை வெளியிட்டுள்ள இலங்கை கிரிக்கெட் சபை, கோடிக்கணக்கான இலங்கையர்களால் போற்றப்படும் விளையாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு தேசிய விளையாட்டு அமைப்பாக, நன்கொடை வழங்கும் இந்த முடிவினை எடுத்துள்ளதாக சுட்டிக்காட்டியிருக்கின்றது.

# 2025 வர்த்தக நிறுவன மெய்வல்லுநரில் ஒட்டுமொத்த சம்பியனாகியது MAS ஹோல்டிங்ஸ்





வர்த்தக மெய்வல்லுநர் சம்மேளனத்தினால் 40ஆவது தடவையாக ஏற்பாடு செய்யப்பட்ட 40ஆவது வர்த்தக நிறுவனங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடரில் ஆதிக்கம் செலுத்திய MAS ஹோல்டிங்ஸ் நிறுவனம் அனைத்துப் பிரிவுகளிலும் முதலிடத்தைப் பிடித்து தொடர்ச்சியாக 2ஆவது ஆண்டாக ஒட்டுமொத்த சம்பியனாகத் தெரிவாகியது.

வர்த்தக மெய்வல்லுநர் சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும் 80 வர்த்தக நிறுவனங்களைச் சேர்ந்த சுமார் 3000 மெய்வல்லுநர்கள் பங்குகொண்ட 40ஆவது வர்த்தக நிறுவனங்களுக் கிடையிலான மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடர் கடந்த நவம்பர் மாதம் 14,15 மற்றும் 16 ஆகிய திகதிகளில் தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இம்முறை போட்டித் தொடரில் அனைத்துப் பிரிவுகளிலும் திறமைகளை வெளிப்படுத்தியிருந்த MAS ஹோல்டிங்ஸ், பெண்கள் (341 புள்ளிகள்), ஆண்கள் (214 புள்ளிகள்), பெண்கள் மாஸ்டர்ஸ் (273 புள்ளிகள்), ஆண்கள் மாஸ்டர்ஸ் (188 புள்ளிகள்) மற்றும் பெண்கள் நவீசஸ் – Novices (49 புள்ளிகள்) ஆகிய ஐந்து பிரிவுகளில் சம்பியனாகத் தெரிவாகியதுடன், 560 புள்ளிகளை ஒட்டுமொத்தமாக எடுத்து 40ஆவது வர்த்தக நிறுவனங்களுக் கிடையிலான மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடரின் சம்பியன்களாகத் தெரிவாகினர்.

இதில் 264 புள்ளிகளை எடுத்த SLT மொபிடெல் 2ஆவது இடத்தையும், 193 புள்ளிகளை எடுத்த ஸ்ரீலங்கா எயார்லைன்ஸ் மூன்றாவது இடத்தையும் பிடித்தது.

முன்னதாக கடந்த ஆண்டு நடைபெற்ற 39ஆவது வர்த்தக நிறுவனங்களுக் கிடையிலான மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடரில் ஆண்கள், பெண்கள், பெண்கள் மற்றும் ஆண்கள் மாஸ்டர்ஸ் மற்றும் நவீசஸ் ஆகிய பிரிவுகளில் ஆயுளு ஹோல்டிங்ஸ் நிறுவனம் ஒட்டுமொத்த சம்பியனாகத் தெரிவாகியமை குறிப்பிடத்தக்கது.

ஆயுளு விளையாட்டு வீரர்கள் தொடர்ந்து காட்டி வரும் இந்த ஆற்றல், வயது வரம்புகளைக் கடந்து அனைத்து வகையான போட்டிகளிலும் விளையாட்டின் மீது அவர்கள் கொண்டுள்ள அசைக்க முடியாத அர்ப்பணிப்புக்கு சான்றாக அமைகிறது.

(மொஹமட் ரிஷாட்)

# பார்முலா – 1 கார் ஓட்டப் பந்தயத்தில் சம்பியன் பட்டம் வென்றார் லான்டோ நோரிஸ்



பார்முலா ஒன் கார் பந்தய தொடரில் இங்கிலந்தைச் சேர்ந்த லான்டோ நோரிஸ் வெற்றிபெற்று சாம்பியன் பட்டத்தை தனதாக்கிக்கொண்டுள்ளார்.

பார்முலா ஒன் கார்பந்தய தொடரின் 24வது மற்றும் கடைசி சுற்றான அபுதாபி கிராண்ட்பிரி போட்டி, யாஸ் மரினா ஓடுளத்தில் நேற்று இடம்பெற்றிருந்தது.

பந்தய தூரமான 306.183 கிலோ மீட்டர் இலக்கை நோக்கி 10 அணிகளைச் சேர்ந்த 20 வீரர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

வெற்றியை தனதாக்கிக் கொள்ள நடப்பு சாம்பியன் வீரரான நெதர்லாந்தின் மேக்ஸ் வெர்ஸ்டப்பென் உள்ளிட்டவர்கள் தீவிரம் காட்டியிருந்தனர்.

எனினும், ஒட்டுமொத்த புள்ளிகளின் அடிப்படையில் இங்கிலாந்தின் லான்டோ நோரிஸ் வெற்றிபெற்று சாம்பியனாகியுள்ளார்.

முதல்வரிசையில் இருந்து புறப்பட்ட வெர்ஸ்டப்பென் ஒரு மணிநேரம் 26 நிமிடம் 7.469 வினாடிகளில் இலக்கை கடந்து வெற்றி பெற்றார். அவருக்கு 25 புள்ளிகள் கிடைத்தது.

எனினும், ஒட்டுமொத்த சாம்பியன்சிப் பட்டத்தை வெல்ல அவருக்கு இந்தப் புள்ளிகள் போதுமானதாக இல்லை.

ஏனெனில் லான்டோ நோரிஸ் முதல் மூன்று இடத்திற்குள் வராமல் இருந்தால் மட்டுமே வெர்ஸ்டப்பெனுக்கு வெற்றி கிடைக்கும் நிலைமை காணப்பட்டது.

எவ்வாறாயினும், லான்டோ நோரிஸ் மூன்றாவது வீரராக இலக்கை கடந்து 15 புள்ளிகளை பெற்றதுடன் சாம்பியன்சிப் பட்டத்தையும் உறுதி செய்திருந்தார்.

இதன்படி, 24 சுற்றுகள் முடிவில் லான்டோ நோரிஸ் மொத்தம் 423 புள்ளிகளுடன் முதல் இடத்தை பிடித்திருந்தார்.

இதன் மூலம் முதல்முறையாக பார்முலா ஒன் கார்பந்தய சாம்பியன்ஷிப் பட்டத்தை லான்டோ நோரிஸ் தட்டிச் சென்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இந்தியன் பிரீமியர் லீக் ஏலத்தில் இலங்கையின் 12 வீரர்கள்



உலகின் முன்னணி கிரிக்கெட் கழகங்களுக்கு இடையிலான ஐ.பி.எல் ரி20 தொடருக்கான ஏலத்தில் வியாஸ்காந்த் உட்பட 12 இலங்கை வீரர்களின் பெயர்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் இந்தியன் பிரீமியர் லீக் (ஐ.பி.எல்.) 2026ஆம் ஆண்டுக்கான தொடருக்கு வீரர்களை ஏலத்தில் எடுக்கும் நிகழ்வு, எதிர்வரும் டிசம்பர் 16 ஆம் திகதி ஐக்கிய அரபு அமீரகத்தின் அபுதாபியில் உள்ள எத்திஹாட் அரீனாவில் (Etihad Arena) நடைபெற உள்ளது.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை (BCCI) வெளியிட்டுள்ள இறுதி வீரர்களின் பட்டியலில், இலங்கை அணியில் இருந்து மொத்தம் 12 வீரர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

அதற்கமைய முன்னணி வீரர்கள் இந்த ஏலத்தில் அதிகபட்ச அடிப்படை விலையான இந்திய ஷரூபா 2 கோடி பிரிவில் இடம்பெற்றுள்ளனர். அதிலும் குறிப்பாக இலங்கையின் மூன்று முக்கிய வீரர்கள் இந்தப் பட்டியலில் இடம்பிடித்துள்ளனர்.

அதற்கேற்ப இலங்கை அணியின் நட்சத்திரவீரர்களாகவும், கடந்த ஐ.பி.எல் தொடரில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியில் விளையாடிருந்த வனிந்து ஹசரங்க, மற்றும் மஹீஷ் தீக்ஷன ஆகியோருடன், வேகப்பந்து வீச்சாளரும், கடந்த 3 தொடர்களாக சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக விளையாடிய மதீஷ பதிரண ஆகிய மூன்று வீரர்களும் அதிக அடிப்படை விலையில் இருப்பதால், அவர்கள் பல மில்லியன் இந்திய ரூபாய்களுக்கு ஏலம் போவதற்கான வாய்ப்பு பிரகாசமாக உள்ளது என எதிர்பார்க்கலாம்.

ஏலப் பட்டியலில் மேலும் சில சர்வதேச நட்சத்திரங்கள்

இவர்களுடன் அனுபவம் வாய்ந்த சர்வதேச வீரர்களான பதும் நிஸ்ஸங்க, குசல் மெண்டிஸ், மற்றும் முன்னாள் தலைவர் தசுன் ஷானக்க ஆகியோரும் இந்த ஏலப் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

அதேவேளை, சமீபகாலமாக சிறப்பாகச் சோபித்துவரும் சரித் அசலங்க, துனித் வெல்லாலகே, மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளம் சுழற்பந்து வீச்சாளர் விஜயகாந்த் வியாஸ்காந்த் ஆகியோரும் இந்த ஏலத்தில் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளனர்.

மேலும், விக்கெட் காப்பாளர் குசல் பெரேரா, ட்ரவீன் மத்யூ மற்றும் இடது கை வேகப்பந்து வீச்சாளர் பினுர பெர்னாண்டோ ஆகியோரும் ஏலப் பட்டியலில் இடம்பிடித்துள்ளதன் மூலம், இலங்கையின் மொத்த பிரதிநிதித்துவம் 12ஆக உள்ளது.

மேலும் எதிர்வரும் 16ஆம் திகதி இடம்பெறவுள்ள ஏலத்தில் மொத்தம் 1,355 வீரர்கள் பதிவு செய்துள்ள நிலையில், 10 ஐ.பி.எல் அணிகளுக்காக மொத்தமாக 77 இடங்கள் மட்டுமே நிரப்பப்படவுள்ளன.

இந்த ஒரு நாள் ஏல நிகழ்வு டிசம்பர் 16 ஆம் திகதி இந்திய நேரப்படி பிற்பகல் 2:30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media (PVT) Ltd. நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியிலிருந்து வெளிவருகின்றது.